56

மலர் IV ஆகஸ்ட் 1923 இதழ் 10.

MANORANJANI

19 OCT 1923

Editor
V. K. DURAISWAMI AYYANGAR, B.A.

JL
M23·4·10·
189953

...LISHERS:
...YAM & Co.,
...TAH, P.O. MADRAS.

ஜெர்மன் பான்ஸி ஜலதரங்கமென வழங்கும் பியானு சங்கீதப்பெட்டி

பிரபஞ்சத்திலுள்ள யாவருக்கும் சங்கீதத்தின் அருமை நன்கு தெரிந்த தேயன்றோ? இந்த ஜலதரங்கமென்னும் வாத்தியத்தை இரண்டு சின்னக் குச்சியினுதவியால் வாசிக்கும்போது கேட்பதற்கு செவிக்கு மகத்தான ஆனந்தத்தைக் கொடுக்கும். இன்னும் இந்த விசேஷ வாத்தியத்தின் விசேஷ மென்ன வெனில் பன்னிரண்டு வித சப்தத்துடன் கலந்த சங்கீதத்தையுண்டுபண்ணும் சக்தி பொருந்தியது. ஸ்திரீ, புருஷாள் பால்யர் யாவரும் சுலபமாய் உபயோகத்திற்குக் கையாடக் கூடியது. இதன் விலை மிக சுலபம்.

இதன் விலை ரூபா 1-தான்

முந்துங்கள்  முந்துங்க

விலை ரூபா 2—0—0 தான்

அமெரிக்கன் எலெக்டிரிக் காரட் கோல்ட் மோதிரங்கள்

இஷ்டமான ரகத்தைப் பெற்றுக்கொள்ளலாம்

இவ்வழகிய மோதிரங்களில் வெள்ளை, பச்சை, நீலம், சிவப்பு, கோமேதகம், வைடூரியம் என்னும் இமிடேஷன் கற்கள் புதைத்து பலவித சித்திரங்களுடன் படத்திற் காட்டியபடி தயார்செய்து ஜர்மனியிலிருந்து வரவழைக்கப் பட்டிருக்கிறது.

கிரயம் 1-க்கு ரூபாய் 2—0—0 கிரயம் 3-க்கு ரூபாய் 5—8—0

A BOON TO SMOKERS

எலெக்டிரிக் சிகார் லைட் விளக்கு

இந்த விளக்கு அற்புதமாயும் ஆச்சரியமாயும் இருக்கும். வத்தியும் அதைக் கொளுத்த நெருப்புக் குச்சியும் தேவையில்லை. இது எலெக்டிரிக் சக்தியினுல் எரியும். நெருப்பு தேவையானுல் விளக்கின் டைரெக்ஷன்படி செய்து மேல் புறத்தில் அமைத்திருக்கும் சக்கிரத்தை திருப்பினுல் திக்கென்று பளபளப்பான பிரகாசத்துடன் எரியும். பின்புறம் மூடிப் பக்கத்தில் மறையை கழட்டிவிட்டு பெட்ரோல் எண்ணை போட வேண்டியது. லைட் 1-க்கு விலை ரூ. 1—0—0

ஒரே தடவையில் 3-லைட் ரூ. 2-10—0

" " 12 லைட் ரூ. 9—0—0

தைரிய லட்சுமி அண்ட்

போஸ்டு பா

19 OCT 1923

189953

பூர்ணசந்திரோதயம்

19-வது அதிகாரம்

சனிக்கிழமை — ஆறாவது வலை

வெள்ளிக்கிழமை இரவில் மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகைக்குள்ளிருந்து தந்திரமாகத் தப்பித்துக்கொண்டு வெளியில் வந்த பூர்ணசந்திரோதயம் ராஜபாட்டையை யடைந்து சிறிது தூரம் நடக்க, அவளுக்கெதிரில் ஒரு வாடகைக் குதிரை வண்டி ஓடி வந்தது. அந்த மடமயிலாள் அதை நிறுத்தி வாடகைக்கு அமர்த்தி அதற்குள் ஏறி உட்கார்ந்துகொள்ள, அரைக்கால் நாழிகையில், வண்டி கீழ் ராஜவீதியின் வழியாக ஓடி அரண்மனைத் தோட்டத்து திட்டி வாசலண்டை வந்து நின்றது. அவ்விடத்தில் இரண்டு பாராக்காரர்கள் நின்று காவல் காத்திருந்தனர். பூர்ணசந்திரோதயம் உடனே வண்டியை விட்டுக் கீழே இறங்கி, அதை ஒரு பக்கத்தில் சிறிதுநேரம் நிறுத்தி வைத்திருக்கும்படி வண்டிக்காரனுக்கு உத்தரவு கொடுத்துவிட்டு, அங்கிருந்த பாராக்காரர்களிடம் நெருங்கி, "சின்ன மகாராஜா உள்ளே இருக்கிறாரா?''வென்று கேட்க, அவர்கள் அவளது ஜாஜ்வல்லியமான அலங்காரத்தையும், மகா உன்னதமான கட்டழகையும், அற்புத தேஜஸையும் கண்டு, அவள் இளவரசருடைய ஆசை நாயகிகளுள் ஒருத்தியென்றும் அவருடைய உத்தரவின்மேல் அவள் வந்திருக்க வேண்டுமென்றும் நிச்சயித்துக்கொண்டு மிகுந்த பயபக்தி மரியாதைகளைக் காட்டிக் குனிந்து "அம்மணீ! மகாராஜா உள்ளே இருக்கிறார். ஏன்? தாங்கள் அங்கே போகவேண்டுமா?'' என்றார்கள். பூர்ணசந்திரோதயம் "ஆம்'' என்க, அவர்கள் உடனே திட்டி வாசலைத் திறந்தனர். ஒருவன் அந்தப் பூங்கோதைக்கு வழி காட்டி முன்னால் நடக்க, அவள் அவனைத் தொடர்ந்து பின்னால் சென்றாள். அவர்களிருவரும் பற்பல சந்துப் பாதைகளையும் கூடங்களையும் மாடங்களையும் கடந்து ஏழாவது உப்பரிகையிலிருந்த இளவரசரது **கந்தர்வமகாலை** யடைந்தனர்.

அதன் வாசலில் சில அந்தரங்க மெய்க்காவலர் நின்று கொண்டிருந்தனர். பூர்ணசந்திரோதயத்தை அழைத்துச் சென்ற பாராக்காரன் அங்கிருந்த மெய்க்காவலரிடம் நெருங்கி, காதோடு ரகசியமாகச் சில வார்த்தைகள் சொல்ல, அவர்களது தலைவன் பூர்ணசந்திரோதயத்தை வணங்கி உபசரித்து வரவேற்று, அவ்விடத்திலிருந்த ஒரு ஸோபாவில் ஒரு நிமிஷ நேரம் உட்கார்ந்து கொள்ளும்படியும், அவளது பெயரைத் தெரிவிக்கும்படியும் வேண்டிக்கொள்ள, பூர்ணசந்திரோதயம் தனது பெயரை வெளியிடாமல் "நீ மகாராஜாவிடத்தில் என்னுடைய பெயரைச் சொல்ல வேண்டுமென்பதில்லை. இன்றையதினம் இரவு ஒன்பது மணிக்கு வரச்சொன்ன மனிதர் வந்திருப்பதாகச் சொல். அதுவே போதுமானது" என்றாள். உடனே அந்த மெய்க்காவலன் உள்ளே போய்விட்டான்.

பூர்ணசந்திரோதயம் ஸோபாவின்மீது உட்கார்ந்து கொண்டாளானாலும், அவள் அதிக நேரம் காத்திருக்கவில்லை. உள்ளேபோன மெய்க்காவலன் இரண்டொரு நிமிஷத்தில் திரும்பி வந்து, முன்னிலும் அதிக பயபக்தியோடு கைகட்டி வாய்புதைத்து "அம்மணி! மகாராஜா தங்களுடைய வருகையை எதிர்பார்த்திருக்கிறார். தாங்கள் தயை செய்து உள்ளே போகலாம்" என்று நயந்து கூற, அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் உடனே எழுந்து, வாசல் கதவைத் திறந்து, மறுபடி மூடிக்கொண்டு நவரத்ன மணிமண்டபமான அந்த கந்தர்வ மகாலுக்குள் நுழைந்தாள். சுவர்க்க லோகமே அந்த வடிவாக வந்திருந்ததோவென அவள் சந்தேகித்து மயங்கும்படி அவ்வளவு அழகாகவும் புதுமையாகவும் அலங்கரிக்கப்பட்டு, மருங்காபுரி ஜெமீந்தாரது வெல்வெட்டு மாடம், ரதிகேளி விலாசம் முதலிய அற்புத மாடங்களைக் காட்டிலும் பதினாயிர மடங்கு அதிக வசீகரமாக அமைக்கப்பட்டிருந்த அந்த கந்தர்வ மாடத்திற்குள், நமது பூர்ணசந்திரோதயம் நுழைந்து இரண்டோரடி தூரம் நடக்குமுன், சற்று தூரத்தில் கோடி சூரியப் பிரகாசமாக மின்னிய நவரத்ன மஞ்சத்தில் மல்லிகை, ரோஜா முதலிய புஷ்பங்களின் இதழ்கள் ஒரு முழ உயரம் பரப்பப்பெற்றிருந்த வெகு ஸொகுஸான வெல்வெட்டு மெத்தையின்மேல் உட்கார்ந்து கொண்டிருந்த இளவரசர் சடக்கென்று கீழே இறங்கி அவளுக் கெதிராக ஆவலோடு பாய்ந்து, "கண்ணே பூர்ணசந்திரோதயம்! இப்படி வா! இந்தக் கட்டிலின்மேல் உட்கார்ந்து கொள்" என்று கனிவாகக் கூறிய

வண்ணம், புன்னகையாலும், மகிழ்ச்சியாலும் தமது முகத்தை மலர்த்திய வண்ணம், அவளுக்குக் கைலாகு கொடுத்து வாத்சல்யத்தோடு அழைத்துவர எத்தனிக்க, அவள் அவரது கைக்கு அகப்படாமல், சிறிது அப்பால் நழுவிச் சென்று, "இல்லை இல்லை. நான் இங்கே உட்கார நேரமில்லை. இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு நான் உடனே போய்விடவேண்டும். இந்த அகால வேளையில், நான் இங்கே வந்து, அலுத்துப்போய்த் தூங்கிக்கொண்டிருந்த மகாராஜாவை எழுப்பும்படியான அபராதத்துக்கு ஆளானேன். மகாராஜா கோபிக்கக் கூடாது" என்று மிகவும் நயமாகக் கூறினுள். அவளது சந்திரவதனம் தனது இயற்கையான குளிர்ச்சியையும் இனிமையையும் காட்டாமல், உள்ளடக்கிய விசனத்தையும் அதிருப்தியையும் காண்பித்தது. அவளது மாறுபட்ட நிலைமையையும், நடத்தையையும் கண்டு ஒருவாறு வியப்படைந்த இளவரசர் முன்னிலும் அதிக இளக்கமாகவும் நயமாகவும் பேசத்தொடங்கி "ஆகா! பூர்ணசந்திரோதயம்! இன்றையதினம் ஒன்பது மணிக்கு நீ வரப்போகிருயென்று நான் என்னென்ன சிறந்த ஏற்பாடுகள் செய்திருந்தேன் தெரியுமா? நான் கடைசியாக வண்டியை அனுப்பப்போன சமயத்தில், நீ அனுப்பிய கடிதம் வந்து சேர்ந்தது. அதைக் கண்டவுடனே, என் மனம் அடைந்த ஏக்கத்தையும் துயரத்தையும் என்னவென்று எடுத்துச் சொல்லுவேன்! வெகுநேரம் வரையில் மன நிம்மதி யில்லாமல் சங்கடப்பட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்து விட்டு இப்போதுதான் அரை நாழிகைக்குமுன் படுத்துத் தூங்க ஆரம்பித்தேன். மெய்க் காவல்காரன் வந்து எழுப்பி நீ வந்திருப்பதாகச் சொன்னான். உன் கடிதத்தை நான் கண்ட பிறகு, இன்றைய தினம் நீ மறுபடியும் வந்து இப்படி என்னை இன்பசாகரத்தில் ஆழ்த்தப் போகிருயென்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவேவில்லை. ஏன் உன் முகம் ஒருமாதிரியாக இருக்கிறது? இன்னமும் உடம்பு அசௌக்கியமாகவே இருக்கிறதா?" என்றார்.

அந்தரங்கமான அன்போடும் பட்சத்தோடும் பேசப்பட்ட அவரது வார்த்தைகளைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் "என்ன ஆச்சரியம்! நானாவது தங்களுக்குக் கடிதம் எழுதவாவது? நான் இதுவரையில் தங்களுக்காவது வேறு யாருக்காவது கடிதம் எழுதியதே இல்லையே!" என்றாள்.

இளவரசர் திடுக்கிட்டு முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த வியப்படைந்து "நீ எழுதியதுபோல சாயுங்காலம் எட்டரை மணிக்கு எனக்கொரு கடிதம் வந்ததே! நீ சொல்வதைப் பார்த்தால், ஏதோ மோசடி நடந்திருப்பதாகத் தெரிகிறது. அதனால்தான் நான் உன்னைத் தொடக்கூட நீ இடங்கொடுக்க மாட்டேனென்கிறாயா? உன் முகம் கோபத்தினால் ஜ்வலிப்பது இப்போதுதான் தெரிகிறது!" என்று கூறி மிகுந்த சஞ்சலத்தோடு அவளண்டை நெருங்கினார். அப்போது பூர்ணசந்திரோதயத்தினது முகம் மேகங்களினால் மறைக்கப்பட்ட பூர்ணசந்திரன்போல, ஆத்திரத்தினால் கருத்து, அவளது கண்களிலிருந்து கண்ணீர் ததும்பிக் கன்னங்களின் வழியாகக் கீழே இழிந்தது. அவள் நிரம்பவும் ஆத்திரத்தை உள்ளடக்கிக் கொஞ்சலாகவும் சலுகையாகவும் பேசத்தொடங்கி "என் மேல் கோபமிருந்தால் என்னை இப்படிப்பட்ட அவமானத்துக்கும், இழிவுக்கும், கொடூரமான தேகத் துன்பத்துக்கும் ஆளாக்கி அவமரியாதைப் படுத்துவதைவிட, என்னை மகாராஜாவே தங்களுடைய கையால் கொன்று போட்டிருக்கலாம். அதுவே எனக்குப் பெருத்த உதவியாக இருந்திருக்குமே" என்று கூறி முன்னிலும் பன்மடங்கு அதிகமாகப் பிணங்கி ஒரு பக்கமாகத் திரும்பி நின்றாள்.

அவளது விபரீத நிலைமையைக் கண்டு மிகுந்த கலக்கமும் மன இளக்கமு மடைந்த இளவரசர் மறுபடியும் அவளண்டை நெருங்கி அன்பாகவும் மிருதுவாகவும் அவளது அழகுவழிந்த மேனியைத் தொட்டு அவளது மோவாயில் தமது கையை வைத்துக் கொஞ்சி "கண்ணே! பூர்ணசந்திரா! கோபிக்காதே; நான் உன் விஷயத்தில் எவ்விதத் தவறும் செய்யவில்லை. இனி என் ஆயிசுகால பரியந்தம் செய்யவுமாட்டேன். நான் அறியாமல், என்னால் ஏதாவது தவறு ஏற்பட்டிருந்தாலும், அதை நீ பாராட்டாமல் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும். நான் பிறந்ததுமுதல் எப்படிப்பட்ட உயர்வான மனிதரிடத்திலும், எப்படிப்பட்ட உன்னதமான ரதிதேவியிடத்திலும் நான் மன்னிப்பு என்ற சொல்லை உபயோகித்தே அறியாதவன். அந்த வார்த்தை நான் அறியாமலே உன் விஷயத்தில் என்வாயிலிருந்து வந்ததிலிருந்து, உன்னை நான் இந்த உலகத்திலுள்ள சகலமான மனிதர்களுக்கும் உயர்ந்தவளாகவும் அருமையானவளாகவும் மதிக்கிறேனென்பதை நீ அறிந்துகொள்ள வேண்டும்" என்று மிக மிகக் கனிவாகப் பேசினார்.

அவரது உண்மையான வாஞ்சையையும் மதிப்பையும் கண்டு ஒரு வாறு சாந்தமடைந்த பூர்ணசந்திரோதயம் அவரது பக்கம் திரும்பி "நான் ஏதோ கடிதம் எழுதியதாகச் சொன்னீர்களே! அதைக் காட்டுங்கள். பார்க்கிறேன்" என்று கிள்ளைபோலக் கொஞ்சலாக மொழிந்தாள்.

உடனே இளவரசர் "அந்தக் கடிதம் அதோ பஞ்சணையின்மேல் இருக்கிறது. நீ நிற்கக் கூடாது. அங்கே வந்து உட்கார்ந்து கொள். நான் உடனே கடிதத்தைக் காட்டுகிறேன். நீ நிற்பதனால், உன்னுடைய இடை தள்ளாடுவதைப் பார்க்கப் பார்க்க, என்னுடைய உயிரே தள்ளாடித் துடிக்கிறது. வா; கட்டிலுக்குப் போகலாம்" என்று உருக்கமாகக் கூறியவண்ணம், தமது வலக்கரத்தைக் கொடுத்து அவளது இடையைச் சுற்றி அணைத்துப் பிடித்தவண்ணம், அந்த அழகிய கலாப மயிலை நடத்தி அழைத்துக்கொண்டு போய் நவரத்னக் கட்டிலையடைந்து, ஆவலோடும் ஆவேசத்தோடும் அவளைத் தூக்கிக் கட்டிலின்மீது உட்கார வைத்து, தலையணையின் கீழிருந்த ஒரு கடிதத்தை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டுத் தாமும் கட்டிலின்மேல் ஏறி அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்.

அந்த மின்னாள் மிகுந்த ஆவலோடு அந்தக் கடிதத்தை வாங்கிப் பிரித்து, விளக்கு வெளிச்சத்தினுதவியால் அதைப் படித்துப் பார்த்தாள். அதன் எழுத்துகள் முத்து முத்தாக அழகாயிருந்ததன்றி, யாரோ ஸ்திரீயினால் எழுதப்பட்டனவாகத் தென்பட்டன. கடிதம் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

வெள்ளிக்கிழமை மாலை 8-மணி

ராஜாதிராஜ ராஜ பூபதியான மாட்சிமை தங்கிய இளவரசரவர்கள் பொற்பாத கமலங்களில் அடியாள் பூர்ணசந்திரோதயம் சாஷ்டாங்க தெண்டன் சமர்ப்பித்துச் செய்துகொள்ளும் தாழ்மையான விக்ஞாபனம். இன்றைய தினம் சாயுங்காலம் ஏழரை மணி வரையில் என் உடம்பு சரியாக இருந்தது. அதன் பிறகு திடீரென்று கடுமையான ஜுரமும் தலைவலியும் வந்து என்னை வதைக்கத் தொடங்கிவிட்டனவாகையால், நான் தங்களுக்கு வாக்குக்கொடுத்த பிரகாரம் ஒன்பது மணிக்கு அவ்விடம் வரக்கூடாத நிலைமையிலிருக்கிறேன். நான் எதிர்பார்த்த சுகம் கிடைக்காமல் போகும்படி இப்படிப்பட்ட எதிர்பாராத இடையூறு வந்து நேர்ந்தது முக்கியமாக என்னுடைய துர்ப்

பாக்கியத்தின் கோளாறென்றே நான் எண்ணுகிறேன். என் உடம்பு இப்போதிருக்கும் நிலைமையிலிருந்து, எனக்கு எப்போதுதான் குணம் ஏற்படுமென்பது நிச்சயமாகச் சொல்ல முடியவில்லையாகையால், நான் தங்களை தரிசிப்பதற்குகந்த இன்னொரு நாளை இந்தக் கடிதத்தில் குறிப்பிட இயலவில்லை. என் தேக ஸ்திதி ஒழுங்குபட்ட வுடனே நான் மறுபடி இன்னொரு விக்ஞாபனம் எழுதித் தெரிவித்துக் கொள்ளு கிறேன். அதுவரையில் இந்த ஏழையை க்ஷமித்தருள வேண்டும்.

இங்ஙனம் தங்களை என்றும் மறவாத அடியாள்
பூர்ணசந்திரோதயம்

—என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்து முடித்தவுடனே அந்தக் கட்டழகி "ஆகா! இது என்னால் எழுதப்பட்ட கடிதமே அல்லவே! நான் எழுதியதாக வேறே யாரோ மோசடியாக இதை எழுதி இருக்கிறார்கள். இது என்னுடைய எழுத்தேயல்ல. நான் நல்ல தேக ஸ்திதியோடு இப்போது இங்கே வந்திருப்பதே இந்தக் கடிதத்தை நான் எழுதவில்லை யென்பதற்குப் போதுமான ருஜுவல்லவா!" என்று மிகுந்த வியப்போடும் மனக் கலக்கத்தோடும் கூறினாள்.

அந்தச் சொற்களைக் கேட்ட இளவரசர், அவளைக் காட்டிலும் பன்மடங்கு அதிகரித்த வியப்பும் திகைப்பு மடைந்தவராய், "ஆ! அப்படியா! இதை நீ எழுதவில்லையா! சரி; இதை எழுதினது யாரென்பது எனக்கு இப்போதுதான் தெரிந்தது. உனக்கு என்ன விதமான அவமரியாதை நேர்ந்தது? நீ இந்நேரம் எங்கே போயிருந் தாய்? எல்லா விவரங்களையும் சொல்" என்று கூறினார். மருங்காபுரிக் கிழவர்தான் அந்தப் பொய்க் கடிதத்தைத் தயார் செய்து தமக்கு அனுப்பி இருக்க வேண்டுமென்ற நிச்சயம் உடனே அவருக்கு ஏற் பட்டு விட்டது.

அவரது சொற்களைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் "விவரங் களை நான் சொல்லவிருக்கட்டும். நேற்றைய தினம் நமக்குள் அந்த ரங்கமாக நடந்த விஷயங்களை யெல்லாம் மகாராஜா யாரிடத்தில் வெளி யிட்டதென்பதைத் தயை செய்து எனக்குச் சொல்லவேண்டும்" என்று சொல்லக் கோபமாகக் கேட்டாள்.

இளவரசர் தாம் செய்த தவறைக் குறித்து உண்மையில் வருந்தி அவளிடத்தில் கரைகடந்த அன்பும் பச்சாதாபமும் கொண்டவராய்

"கண்ணே! கோபித்துக் கொள்ளாதே! நான் அந்த விஷயத்தில் செய்தது என்மேல் குற்றந்தான். நான் அப்படிச் செய்தது சுத்த முட்டாள் தனம்; பைத்தியக்காரத் தனம். நான் நம்முடைய ரகசியங்களையெல்லாம் வெளியிட்டு விட்டேனென்று உன் மனம் நிரம்பவும் சஞ்சலப்படுவது நியாயமே. இந்த ஒரு தடவை மாத்திரம் நீ என்னை மன்னித்துக்கொள். இனி நான் நம்முடைய எந்த விஷயத்தையும் வெளியிடமாட்டேனென்பதை நீ உறுதியாக எண்ணிக் கொள்ளலாம்." என்று கூறி, மறுபடியும் அவளது மோவாயைப் பிடித்துக் கொஞ்ச, அவள் அவரது கையை மெதுவாக நகர்த்திப் பிடித்துக்கொண்டு "போனதுபோகட்டும். நடந்து போனதைப்பற்றி வருத்தப்பட்டு இனி ஆகப்போவதொன்றுமில்லை. தங்களுடைய வண்டி சரியாக 9 மணிக்கு வருமென்று நான் நன்றாக அலங்காரம் செய்துகொண்டு என்னுடைய காரியங்களையெல்லாம் முடித்துக்கொண்டு புறப்பட ஆயத்தமாக இருந்தேன். வண்டி சரியாக 9 மணிக்கு வந்தது. நான் அதற்குள் உட்கார்ந்து கொண்டு போனேன். தாதிகள் என்னை அழைத்துக் கொண்டுபோய் மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகையின் மேன்மாடத்தில் விட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டார்கள்," என்றாள்.

இளவரசர்:— (மிகுந்த கோபத்தோடு) என்ன ஆச்சரியம்! அந்தக் கிழவனுக்கு அவ்வளவு துணிச்சலும், துடுக்கும் ஏற்பட்டுவிட்டனவா? உன்னை அப்படிச் சிறைவைத்து அவன் அதற்குமேல் என்ன செய்தான்? சீக்கிரமாகச் சொல்.

பூர்ணசந்திரோதயம்:— (புரளியாகப் புன்னகை செய்து) அவர் செய்தது நியாயந்தானே! வெள்ளிக்கிழமை முறை அவருடையது தானே! அவர் மேல் ஆத்திரப்படுவதில் உபயோக மென்ன?

இளவரசர்:— என்ன ஆச்சரியம்! அந்த விவரங்கூட உனக்குத் தெரிந்திருக்கிறதா? அதையும் அந்தக் கிழவரே சொன்னாரா?

பூர்ண:— அதை அவர் சொல்வாரா! அந்த சூரக்கோட்டைப் பாளைக்காரர்தான் சொன்னார்.

இளவரசர்:— (கோபங்கொண்டு) அந்த சூரக்கோட்டைப் பாளையக்காரன் இவ்வளவு அயோக்கியத்தனமாக நடப்பானென்பது எனக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தால், அவனை நான் எனக்குப் பக்கத்திலேயே வரவிட்டிருக்க மாட்டேன். இனிமேல் அவன் என்னிடத்தில்

வந்தால், பாராக்காரனைவிட்டு அவனைக் கொண்டுபோய் வீதியில் விடச் சொல்லுகிறேன்.

பூர்ண :— அவர்மேல் மாத்திரம் ஆத்திரப்படுவது நியாயமாகுமா? ஆண்பிள்ளை ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டதை அவர் என்னிடத்தில் வெளியிட்டார். மகாராஜா, தமக்கும், தம்மிடத்தில் உண்மையான காதல்கொண்ட ஒரு பெண்பாலுக்கும் அந்தரங்கத்தில் நடந்ததும், பிறருக்குத் தெரியத் தகாததுமான ரகசியத்தை வேறொருவரிடம் வெளியிட்டதைவிட அது பெரிய குற்றமல்ல. அது போகட்டும். தாங்கள்தான் ஏதோ அந்தரங்க நண்பராயிற்றே என்று அந்தக் கிழவரை மதித்து ரகசியத்தை வெளியிட்டால், அவர் இப்படியா நம்பிக்கைத் துரோகம் செய்கிறது? அவர் எப்படிப்பட்ட தந்திரந்தான் செய்தாலும், அது இந்தப் பூர்ணசந்திரோதயத்தினிடத்திலா பலிக்கப்போகிறது. அவருக்குத் தகுந்த தண்டனையை நானே நடத்தி வைத்து நற்புத்தி புகட்டிவிட்டு வந்து விட்டேன். இதை அவர் இனி அவருடைய ஜென்மத்துக்கும் மறக்கவேமாட்டார். மகாராஜா இனி அவரைக் காணும்போது, இதைப்பற்றி அவரிடம் பிரஸ்தாபிக்க வேண்டுமென்ற அவசியமே இல்லை. நான் செய்து வைத்த மரியாதையே அவருக்கு ஏழேழு தலை முறைக்கும் போதும்.

இளவரசர் :— (மிகுந்த திகைப்பும் ஆவலும் கொண்டு), ஆகா! அப்படியா! அவருக்குத் தக்க பிராயச்சித்தம் செய்து வைத்துவிட்டாயா! நல்லதாயிற்று. அதை விவரமாகத்தான் சொல்லேன்.

பூர்ணசந்திரோதயம் :— அவர் எலிப்பொறியில் அகப்பட்டு விழித்துக்கொண்டு இருக்கிறார். நாளைக் காலை வரையில் யாரும் போய் அவரை விடுவிக்காதபடி தந்திரம் செய்துவிட்டு வந்துவிட்டேன்.

இளவரசர் :— ஸபாஷ்! பூர்ணசந்திரோதயம்! மெச்சினேன்! மெச்சினேன்! அவருடைய ரதிகேளி விலாசத்திலுள்ள இரும்பு நாற்காலியில் அவரை மாட்டிவிட்டு வந்திருக்கிறாயென்பது நன்றாகத் தெரிகிறது. கிழவருக்கு அவ்வளவும் வேண்டியது தான். எத்தனை பேரை அவர் ஈவிரக்கமின்றி இதுவரையில் அதில் மாட்டவைத்தாரோ அந்தப் பாவமெல்லாம் ஒன்றுகூடி இன்று அவருக்கே வந்து வாய்த்தது போலிருக்கிறது. உன்னிடத்தில் எவ்வளக்கெவ்வளவு நிகரற்ற அழகு பொருந்தி இருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு மன உறுதியும் புத்தி சாதுர்யமும் நிறைந்திருக்கின்றன. அதனாலேதான், என் ஆசையை

யெல்லாம் நான் உன்மேல் வைத்துவிட்டேன். இனி என் ஆயிசு கால பரியந்தம் நான் உன்னுடைய அடிமையென்பது நிச்சயம். போனது போகட்டும். இப்படிப்பட்ட துன்பகரமான விஷயம் நடந்ததென்ற நினைவையே நீ மறந்துவிடு. நாம் இன்றிரவு கொஞ்சமும் துன்பமே இல்லாத நிச்சலனமான பேரின்ப சுகம் அநுபவிக்க வேண்டும். நீ களைத்து வந்திருக்கிருய். இங்கே சகலமான பக்ஷண பலகாரங்களும் கனி வர்க்கங்களும் இளநீர் பால் முதலிய இனிய பானங்களும் இருக்கின்றன. முதலில் நீ அவைகளை அருந்தி, உன் ஆயாசத்தைத் தீர்த்துக் கொள். பிறகு நாம் தாம்பூலம் தரித்து ஆநந்தமாக இருப்போம்,'' என்று நிரம்பவும் கனிவாகக் கூறிக் கரைகடந்த மோகாவேசத்தோடு தமது இருகைகளையும் கொடுத்து அந்த இன்பவல்லியைப் பிடித்தணைத்து ஆலிங்கனம் செய்து முத்தமிட முயல, அவள் அதற்கு இடம் கொடுத்தும் கொடுக்காமலும் கொஞ்சலாகப் பிணங்கி சடக்கென்று பஞ்சணையை விட்டுக் கீழே குதித்து "ஐயோ! எனக்கு நிரம்பவும் நேரமாகிவிட்டது. நான் பத்தரை மணிக்கெல்லாம் திரும்பி வீட்டுக்கு வந்து விடுவதாகச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். என்னுடைய வேலைக்காரிகள் காத்திருப்பார்கள். இப்போது பதினேரு மணிக்குமேல் ஆகிவிட்டது. என்னைப்பற்றி அவர்கள் இன்னம் கொஞ்ச காலத்துக்குத் தப்பான அபிப்பிராயம் கொள்ளக் கூடாது. ஆகையால், நான் மறுபடியும் இன்னொரு நாள் சாவகாசமாக வருகிறேன். இப்போது தயை செய்து என்னை விட்டு விடுங்கள். என் தேகம் பதறுகிறது. என் மனம் முழுதும் வீட்டிலேயே இருக்கிறது. வேண்டாம்; விட்டு விடுங்கள் — என்று கெஞ்சிக் கூத்தாடிப் புறப்பட ஆயத்தமானுள். மோகலாகிரி தலைக்கேறி, மெய்ம்மறந்து துடிதுடித்து நின்ற இளவரசர் "கண்ணே! உன் மனமென்ன கல்லா? என்னை உயிரோடு கொல்வதற்காகவா நீ இப்போது இங்கே வந்தாய்? இது உனக்கு தருமமா? என்னைப் பித்தனுக்கி விட்டாயே! நான் என்ன செய்யப்போகிறேன்! உன்னை விட்டுப் பிரிந்து நான் எப்படி சகித்திருப்பேன்? உன்மேல் வைத்த பிரியம் என்னை நெருப்பாகப் பற்றி தகிக்கிறதே! உன்னுடைய உண்மையான எண்ணந்தானென்ன? அதை வெளியிடு. நான் உன்னிஷ்டப்படி நடந்து கொள்ளுகிறேன்'' என்று மிக மிக உருக்கமாக கைந்திளகிக் கூற, அதைக் கேட்ட பூர்ண சந்திரோதயம் தனது பற்களை இனிமையாகவும் வசீகரமாகவும் வெளி

யில் காட்டிக் கெஞ்சிக் கொஞ்சி அவரது மனதை மயக்கி மறுபடியும் அதிசீக்கிரத்தில் தான் அவருக்குக் கடிதமெழுதி அவரது எண்ணத்தைப் பூர்த்திசெய்து வைப்பதாக வாக்குறுதி கூறி, அவரைக் கடைசி முறையாக ஆலிங்கனம் செய்து விடை பெற்றுக்கொண்டு, அந்த கந்தருவ மாளிகையை விட்டு வெளிப்பட்டு, ராஜபாட்டைக்கு வந்து, அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்த குதிரை வண்டியிலேறித் தனது ஜெகன்மோகனவிலாசத்திற்கு வந்து சேர்ந்தாள். வந்து சேர்ந்தவள் தனது சயனக்கிரகத்தை யடைந்து படுத்துக்கொண்டாள். அன்றைய தினம் தான் ஒரு கருத்தை வைத்துக்கொண்டு இளவரசரது அரண்மனைக்குப் போக, அது நிறைவேறாமல் போனதையும், மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகையில் நிகழ்ந்த சம்பவங்களையும், அதன் பிறகு தான் இளவரசரது மாளிகைக்குப் போய்த் திரும்பியதையும்பற்றி நெடுநேரம் வரையில் சிந்தித்திருந்து கடைசியில் துயிலிலாழ்ந்தாள்.

மறுநாளைய பிற்பகலில் மூன்று மணி சமயமாயிற்று. பூர்ணசந்திரோதய மென்னும் கட்டழகி தனது இயற்கைப்படி சீவிச் சிங்காரித்து மையிட்டுப் பொட்டிட்டு உயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு யாரோ ஒருவரது வருகையை எதிர் பார்ப்பவள் போலப் படபடத்து உட்கார்ந்தும், அழகாக மலர்ந்து புன்னகை செய்த புஷ்பங்களைப் பறித்து மோந்தும், அவளைக் கண்டு கொஞ்சிக் குலாவிய பஞ்சவர்ணக்கிளி, பாரசீகக்கிளி முதலியவைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துக்கொண்டும் நலிந்து பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தாள்.

அப்போது தடதடவென்று யாரோ ஒருவர் மெத்தைப்படியின் மீது ஏறித் தானிருந்த உப்பரிகைக்கு வந்த ஓசையைக் கேட்டு அவள் பல விடங்களிலும் சென்றிருந்த தனது கவனத்தை ஒருமுகப்படுத்தி அங்கே வந்துகொண்டிருந்த மனிதர் யாராக இருக்கலாமென்று எண்ணமிட்டுக் கொண்டிருக்க, அடுத்த நிமிஷத்தில் **சாமளராவ்** புன்னகையாலும் மகிழ்ச்சியாலும் இனிமையாக மலர்ந்த முகத்தினராக அவளுக்கெதிரில் வந்து சேர்ந்தான். வந்தவன் சாமளராவ் என்பதை உணர்ந்தவுடனே பூர்ணசந்திரோதயத்தின் சஞ்சலம் நீங்கியது. மகிழ்ச்சியும் பூரிப்பும் கொண்ட பூர்ணசந்திரோதயம் அவனை நோக்கி இனிமையாகப் புன்னகை செய்தவளாய் "வாருங்கள் அண்ணா!" என்று அந்தரங்கமான வாஞ்சையோடு அவரை வரவேற்று அழைக்

துக்கொண்டு பக்கத்திலிருந்த கூடத்திற்கு நடத்திக்கொண்டுபோய் "உட்கார்ந்து கொள்ளுங்கள், அண்ணா!" வென்று உவப்போடு அவனை உபசரித்த வண்ணம் தானும் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள். பூர்ணசந்திரோதயத்தைக் கண்டு மட்டற்ற மன மகிழ்ச்சியும் குதூகலமு மடைந்தவனாய்க் காணப்பட்ட சாமளராவ் "பூர்ணசந்திரோதயம்! என்ன நீ இன்றைய தினம்கூட என்னை அண்ணாவென்று கூப்பிடுகிறாய்? நான் உண்மையில் யாரென்பதை மறந்து விட்டாயா?" என்றான். அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் அவனது கருத்து 'இன்னதென்பதை அறிந்துகொள்ள மாட்டாமல் சிறிது நேரம் குழம்பித் திகைத்து "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? நீங்கள் எனக்கு எப்போதும் அண்ணாதானே! இன்றைக்கு அண்ணா வென்கிற முறைமை ஏன் உதவாது?" என்று ஒருவித கிலேசத்தோடு கேட்க, அவன் சிரித்துக்கொண்டு பேசத்தொடங்கி "எங்கள் பந்தய ஏற்பாட்டின்படி இன்று என்னுடைய முறை என்பதை நீ மறந்து விட்டாய்போ லிருக்கிறதே! இந்தப் பந்தயம் ஏற்படுத்திய ஆறு பேர்களுள் நான் ஒருவன்தான் உன்னிடத்தில் காதல் சம்பந்தமான வார்த்தைகளைச் சொல்லத் துணிய மாட்டேனென்பது உனக்கு ஏற்கெனவே தெரியும்போ லிருக்கிறது?" என்று பரிகாசமாகப் பேசினான்.

அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் சந்தோஷமடைந்து சிரித்து "ஓகோ! அப்படியா சங்கதி! அதை நான் சுத்தமாக மறந்து போய் விட்டேன். எல்லோருக்கும் பரிமாறும் தாய்க்குக் கடைசியில் வெறும் பாத்திரந்தான் மிஞ்சுமென்று ஜனங்கள் பழமொழி சொல்வது பொய்யாகுமா? அதுபோல, இந்தப் பந்தயம் வைப்பதற்கு நீங்கள் மூலாதாரமான மனிதராக இருந்தும், கடைசியாக வந்தபடியால், உங்களுக்கு ஒன்றும் மிஞ்சவில்லை. இந்தப் பந்தயத்தின் முக்கிய கருத்து நிறைவேறி விட்டதாகையால், எனக்கு இந்தப் பந்தயத்தைப்பற்றிய நினைவே உண்டாகவில்லை" என்றாள்.

அதைக் கேட்ட சாமளராவ் மிகுந்த ஆச்சரியமும், சந்தோஷமும் கொண்டவனாய் "எனக்கு மற்றதெல்லாம் அவ்வளவு வேடிக்கையாகத் தோன்றவில்லை. அந்த மருங்காபுரிக் கிழவன் நேற்று ராத்திரி தந்திரம் செய்து, கடைசியில் உன்னால் அவமானமடைந்ததுதான் எனக்கு நிரம்பவும் வேடிக்கையாக இருக்கிறது. இன்று காலையில் நீ எழுதிய

கடிதத்திலிருந்து, நேற்று ராத்திரி நடந்த சங்கதிகளையெல்லாம் படித்த முதல் அந்தக் கிழவனுடைய விஷயத்தை நினைக்க நினைக்க, நான் என்னை மறந்து பலதடவை வாய்விட்டுச் சிரிக்கும்படி நேர்ந்தது. அவனுடைய அந்தரங்க வேலைக்காரனான கோவிந்தசாமியும், மற்றவர்களும் நேற்று ராத்திரிமுழுதும் அவனிருந்த இடத்துக்குப் போகாமலே இருந்தால், இன்று காலை வரையில் அவன் அந்த நாற்காலியிலேயே மாட்டிக்கொண்டுதானே கிடந்திருப்பான். ஐயோ பாவம்! நிரம்பவும் வயசான கிழவன். அந்த அவஸ்தையைப் பொறுக்க முடியாமல் செத்துப் போனாலும் போய்விடுவான். உன் கடிதத்தை நான் நம்முடைய அம்மாளிடம் படித்துக் காட்டினேன். அம்மாள் புதன்கிழமை தினம் கூட அவனிடம் போய் மூவாயிரம் ரூபாய் பிடுங்கிக்கொண்டு வந்தாள். கடைசியில் அவன் சுத்தப் பைத்தியக்காரன். அம்மாளிடத்தில் அவனுக்கு நிரம்பவும் பிரியம் உண்டு. ஆகையால், அவன் நாற்காலியில் மாட்டிக் கொண்ட செய்தியைக் கேட்கவே, அம்மாளுக்கு நிரம்பவும் விசனமாக இருந்தது. அம்மாள் ஏதோ வேறே காரியமாக அந்தக் கிழவனைப் பார்க்கப் போகிறவள்போல, சுமார் 12-மணிக்கு அவனுடைய மாளிகைக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்தாள். கிழவன் வழக்கம்போல உற்சாகமாகத்தான் இருக்கிறானாம். நேற்று ராத்திரி நடந்த சங்கதி எதையும் அவன் அம்மாளிடம் வெளியிடவே இல்லையாம். ஒன்றையு மறியாதவள்போல அம்மாள் அவ்வளவோடு வந்துவிட்டாள். நேற்று ராத்திரி முழுதும் நாற்காலியிலிருந்து வேதனைப்பட் டிருப்பானென்றுதான் எண்ணவேண்டி இருக்கிறது,'' என்றான்.

பூர்ணசந்திரோதயம், "ஆம். அது எனக்குக்கூட விசனமாகத்தான் இருந்தது. இருந்தாலும் நான் வேறே என்ன செய்கிறது! அந்த இடத்திலிருந்து நான் தப்பித்துக்கொண்டு வர வேறே மார்க்கமில்லை. அவனை அப்படி மாட்டி வைத்துவிட்டு வரவேண்டியது கட்டாயமாகிவிட்டது. இனிமேல் கிழவன் வேறே யாரையும் அந்தக் கொடிய நாற்காலியில் சிறைவைக்கத் துணியமாட்டான். அது என்னால் ஏற்பட்ட அநுகூலம். ஆனால் அவன் இப்படிச் செய்ததில் நமக்கும் ஒரு பெரிய அநுகூலம் ஏற்பட்டது. வெகுநேரம் வரையில் நான் அந்தக் கிழவனுடைய வீட்டில் இருந்துவிட்டு அகாலத்தில் இளவரசரிடத்திற்குப் போனதும் நன்மையாகவே முடிந்தது. அந்தக் காரணத்தினால், நான் வீட்டுக்குத் திரும்பிப்போக நேரமாகிவிட்ட

தென்று சொல்லி, இளவரசருடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்யாமல் வர அநுகூலமாக இருந்தது. இளவரசரால் நமக்கு ஆகவேண்டிய மிருதிக் காரியத்தையும் பலிதமாக்கிக்கொண்டு, அதற்கு மேல், அவருடைய இஷ்டப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது என்னுடைய கருத்து. சகலமான ஏற்பாடுகளையும் நம்முடைய இஷ்டப்படி முடித்துக்கொள்ளுமுன், அவருடைய ஆவல் தீர்ந்து போகுமானால், அதன்பிறகு, அவர் அவ்வளவு சுலபமாக வழிக்கு வரமாட்டார்; அதைக் கருதி நான் அவரை எப்படி ஏமாற்றப் போகிறேனென்று நிரம்பவும் கவலைகொண்டுதான் நேற்று ஒன்பது மணிக்குப் புறப்பட்டேன். தெய்வம் நம்முடைய கட்சியில் இருந்து அந்தக் கிழவன் மூலமாக இந்த இடையூறைச் செய்து வைத்தது. நான் மறுபடியும் கடிதம் எழுதியனுப்புவதாகச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அந்தக் கடிதத்தை மிகவும் பக்குவமாகவும் தந்திரமாகவும் எழுதி இன்றைய தினம் சாயுங்காலம் அனுப்பிவிட வேண்டும்,'' என்றாள்.

சாமளராவ், "பூர்ணசந்திரோதயம்! உன்னுடைய அபாரமான புத்திசாலித்தனத்தையும், சமயோசிதமான தந்திர ஞானத்தையும், நான் என்னவென்று புகழுவேன்! இந்த தேசத்தில் மகா புத்திசாலிகளான ஆண்பிள்ளைகள் எல்லோருடைய விவேகமும் ஒன்று சேர்ந்தால்கூட, ஒரு பெண்ணாகிய உன்னுடைய தீவிர புத்திக்கு உரை போடக் காணாது. மகா சாமர்த்தியசாலிகளான நான்கு மனிதரை நீ ஒரு நிமிஷத்தில் தோற்கடித்து அவமானப்படுத்தி விட்டாய். எவனுடைய வலையிலும் அகப்படாத இளவரசர் உன் விஷயத்தில் பைத்தியங் கொண்டலையும்படி செய்துவிட்டாய். நம்முடைய கருத்து இதுவரையில் நமக்கு அநுகூலமாகவே முடிந்துவிட்டது. இனிமேல், அவர் உன்னுடைய வலையிலிருந்து தப்பப்போகிறதில்லை. நீ இன்றைய தினம் கடிதத்தின் மூலமாக அவரிடம் கேட்டுக் கொள்ளும் விஷயமும் எளிதில் முடிந்துபோகும். நீ இன்னம் இரண்டொரு தினத்தில், அரண்மனையின் ஏழாவது உப்பரிகைக்குப் போய்ச் சேர்ந்து, ராஜாத்தி ஆகிவிடுவாய். அதைப்பற்றிக் கொஞ்சமும் சந்தேகமே இல்லை. இப்படியெல்லாம் நடக்குமென்று நானும் அம்மாளும் ஏற்கனவே முடிவு கட்டிவிட்டோம். ஆனால், இவ்வளவோடு நாம் திருப்தியடைந்து சும்மா இருந்துவிடக் கூடாது. நாம் எடுத்துக்கொண்ட காரியம் பலித்துக் கடைசி வரையில் நிலைத்து நீடித்து நிற்கவேண்டும். அழகிலும் புத்தி

சாலித் தனத்திலும் உன்னை மீறியவர்கள் கிடைப்பது அருமையாத லால் இளவரசர் உன்னிடத்தில் நீடித்த காதலையும் பிரேமையையும் வைத்திருப்பாரென்பது நிச்சயமானாலும், இன்னம் கொஞ்ச காலத்தில் அவருடைய புத்தி எப்படி மாறுமோ? தாலிகட்டின பட்டமகிஷிக் கும், சேர்க்கையாக வந்த வைப்பாட்டிக்கும் பேதமுண்டல்லவா? அவருக்குப் பிரியமிருக்கும் வரையில்தான் வைப்பாட்டிக்கு செல் வாக்கும் மேன்மையும் இருக்கும். அவருக்கு இஷ்டமில்லாவிட்டால், எல்லாம் ஒரு நிமிஷத்தில் தரைமட்ட மாகிவிடும். ஆகையால், நாம் இதுவரையில் செய்தது ஒரு பெரிய காரியமல்ல. இனிமேல் செய்ய வேண்டிய காரியந்தான் மகா அரிதான காரியம். அதை உன்னிடம் சொல்லாமல் நானும் அம்மாளுமாக இதுவரையில் யோசனை செய்து ஒருவித முடிவுக்கு வந்து அதைக் குறித்து ரகசியமான சில முயற்சி கள் செய்திருக்கிறோம். ஆனால், அதில் உனக்கு எவ்விதப் பிரயாசை யும் இல்லை. வேறே சில மனிதர்களால் அந்தக் காரியம் ஆகவேண் டும். அவர்களுக்குக் கொடுப்பதற்காகவே அம்மாள் புதன்கிழமை யன்று மருங்காபுரிக் கிழவனிடம் போய் மூவாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டுவந்தாள். ஆனால் அவர்கள் அந்தக் காரியத்தை முடித்து வைத்தவுடனே, நாம் அவர்களுக்கு ஒரு பெரிய சன்மானம் செய்ய வேண்டும். அந்த சன்மானம் சாதாரணமாக நம்மைப் போன்றவர் களால் செய்யக்கூடியதல்ல. அது மகாராஜாக்கள் பார்த்துச் செய்யக் கூடிய சன்மானம். நீ இளவரசரைத் தூண்டி அந்தச் சன்மானத் தைச் செய்துவைக்க வேண்டும். அதெல்லாம் பிந்தி நடக்க வேண்டிய காரியமாதலால், அதைப்பற்றி நாம் இப்போது கவலைப்பட வேண்டிய தில்லை,'' என்றான்.

அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் ஒருவாறு வியப்படைந்து ''ஓகோ! அப்படியானால், நீங்களும் அம்மாளும் சேர்ந்து, ரகசியத்தில் வேறே ஏதேதோ ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறீர்கள்போ லிருக் கிறது. அந்த விவரத்தை இதுவரையில் என்னிடம் ஏன் வெளியிட வில்லை? அது எனக்குத் தெரியக் கூடாத விஷயமா? அது எனக்குத் தெரிந்திருந்தால், அதற்குத் தோதாக நான் இளவரசரிடத்தில் நடந்து கொள்ளலாமே,'' என்றாள்.

சாமளராவ், ''அந்த விவரம் உனக்குத் தெரியக்கூடாதென்ற எண்ணத்தோடு நாங்கள் அதை உன்னிடம் தெரிவிக்காமலிருக்கவில்லை.

இந்தப் பந்தய ஏற்பாட்டின் மூலமாகத் தந்திரம் செய்து, நீ எப்படி யாவது இளவரசருடைய வாஞ்சையையும் பிரேமையையும் முதலில் சம் பாதித்துக்கொண்டால், அதன்பிறகு மற்ற ரகசிய சமாசாரத்தை உன் னிடம் வெளியிடுவது நல்லதென்று நினைத்தோம். ஏனென்றால், எல்லா விஷயங்களையும் ஒருமுட்டாக உன்னிடம் தெரிவித்தால், நீ ஒருவேளை மலைத்து அஞ்சிப் பின்வாங்கிவிடுவாயோவென்று நாங்கள் எண்ணி னோம். நீ இந்தப் பந்தய விஷயத்தில் எவ்வளவோ திறமையாக நடந்து வெற்றியடையவேண்டியவ ளாகையால், நீ மற்ற எல்லா விஷ யங்களையும் கேட்டு, மலைப்படைந்து இந்தப் பந்தய விஷயத்தில் ஏமா றிப் போய்விடுவாயோவென்று நாங்கள் கவலைகொண் டிருந்தோம். இப் போது நீ இந்தப் பந்தய விஷயத்தில், நம்முடைய கருத்தை முற்றி லும் மகா சாமர்த்தியமாக நிறைவேற்றிவிட்டாயாகையால், இனி நீ மற்ற விவரத்தையும் தெரிந்துகொள்ளலாம். அதை உன்னிடம் இனி வெளியிடலாமென்று அம்மாளும் என்னிடம் சொன்னார்கள். ஆகை யால் அதையும் நான் இப்போது உனக்குத் தெரிவிக்கிறேன். நம் முடைய இளவரசருக்கு எத்தனையோ வைப்பாட்டிமார்க ளிருந்தாலும், அவர் சாஸ்திரப்படி கலியாணம் செய்துகொண்ட பட்டமகிஷி ஒரே ஒருத்திதான் என்பது உனக்குத் தெரிந்திருக்கும். அவளிடத்தில் நம் முடைய இளவரசருக்கு உண்மையான பிரியமே கிடையாது. அவள் இவரைக் கலியாணம் செய்துகொண்டபிறகு ஒருநாள்கூட இவர் அவ ளுடைய அந்தப்புரத்துக்குப் போய் அவளுடைய முகத்தைப் பார்த் ததில்லை. இவருடைய பிரியத்தை சம்பாதித்துக்கொள்ள வேண்டு மென்று, அவள் எவ்வளவோ முயற்சிகள் செய்தும், அழுதும், பட்டினி கிடந்தும் பார்த்ததெல்லாம் பயனற்றுப் போய்விட்டது. இந்த இள வரசருடைய தாயாரான பெரிய ராணிக்கு மாத்திரம் இவருடைய பட்ட மகிஷியினிடத்தில் அன்பும் இரக்கமும் இருந்துவந்தன. பெரிய ராணி தம்முடைய புத்திரனுக்கு எவ்வளவோ நற்புத்தி புகட்டி யும், வேண்டியும் பார்த்தாள். இளவரசர் அதற்குச் செவி கொடுக்க வில்லை. அப்படி இருந்த சமயத்தில், இளவரசருடைய பட்ட மகிஷி யின் தகப்பனாரான பூனா தேசத்து மகாராஜன் நோயடைந்து படுத் திருப்பதாகவும், தன் மகளைப் பார்க்க விரும்புவதாகவும் செய்தி சொல்லி அனுப்ப, பட்ட மகிஷி, பெரிய ராணியினிடத்திலும், இள வரசரிடத்திலும் பெரிய அரசரிடத்திலும் அநுமதி பெற்றுக்கொண்டு

பூனவுக்குப் போனாள். அவள் போய் சுமார் மூன்றுமாச காலமாகிறது. அவளுடைய தகப்பனார் இன்னமும் படுத்த படுக்கையாகவே இருக்கிறாராம்; அவர் எப்போது குணமடைவாரென்பது தெரியவில்லையாம். அந்த நிலைமையில் அவரை விட்டுவர அந்தப் பட்டமகிஷிக்கு மனமில்லை. ஆகையால் இன்னம் இரண்டுமூன்று மாசகாலம் அங்கிருந்து விட்டு வருவதாக அவள் நம்முடைய பெரிய ராணிக்கு எழுதியிருக்கிறாள்; அதோடு அவள் இன்னொரு விஷயமும் எழுதி இருக்கிறாள். அந்த ஊரில், அவளுடைய மனசுக்குகந்தபடி நடந்துகொள்ளக்கூடிய தாதிமார்கள் இல்லையாம். ஆகையால், நல்லவர்களாகப் பார்த்து நான்கு தாதிகளை யனுப்பிவைத்தால், தான் திரும்பித் தஞ்சைக்கு வரும்போது அவர்களையும் கூடவே அழைத்துக்கொண்டு வர செளகரியமாக இருக்குமென்று எழுதி இருக்கிறாள். இந்த ஊர்ப் பெரிய ராணிக்கு நம்முடைய அம்மாளிடத்தில் நிரம்பவும் அபிமானம் உண்டென்பது உனக்குத் தெரிந்த விஷயம். சில தினங்களுக்கு முன் அம்மாள் பெரிய ராணியைப் பார்க்கப் போயிருந்த காலத்தில் அவள், அந்தக் கடிதத்தின் விஷயத்தை அம்மாளிடம் சொல்லி, நல்லவர்களாகப் பார்த்து நான்கு தாதிப்பெண்கள் சம்பாதித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்களாம். அம்மாள் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு வந்திருக்கிறார்கள். நமக்கு அநுகூலமானவர்களாகப் பார்த்து நான்கு பெண்களைப் பொறுக்கி அனுப்பிவைக்க வேண்டுமென்றும், அந்தப்பெண்கள் பூனா தேசத்திலுள்ள நம் இளவரசருடைய பட்டமகிஷியிடம் போய், மகா யோக்கியர்கள்போல நடந்துகொண்டே இருந்து, கடைசியில், அந்தப் பட்டமகிஷிக்கு விபசாரதோஷம் கற்பிக்கத் தகுந்த சில ஏற்பாடுகளை மிகவும் தந்திரமாகச் செய்யவேண்டுமென்றும் நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம். தம்முடைய பட்டமகிஷி விபசார தோஷ முடையவளென்பது இளவரசருக்குத் தெரியும்படியும் நாம் சூழ்ச்சிசெய்யவேண்டும். அப்படிச் செய்தால், அவர் உடனே தம்முடைய பட்டமகிஷியை வேண்டாமென்று விலக்கிவிடுவதோடு, வேறொரு பெண்ணை உடனே கலியாணம் செய்துகொண்டு அவளைப் பட்டமகிஷி யாக்குவாரென்பது நிச்சயம். அந்தப் பட்டமகிஷி ஸ்தானத்தில் உன்னை வைக்க வேண்டுமென்பது அம்மாளுடைய தீர்மானம் ஆகையால், நீ இப்போது இளவரசருடைய கருத்துக்கிணங்கி, அவருடைய அரண்மனைக்குப் போய் ஏழாவது உப்பரிகையி

விருந்து கொண்டு அவரிடத்தில் அன்னியோன்னியமாக இருந்துவந்தா லும், உனக்கும் அவருக்கும் தேக சம்பந்தம் உண்டென்பது எவருக் கும் தெரியவே கூடாது. நீ அந்த விஷயத்தில் அவ்வளவு திறமையாக வும் ஜாக்கிரதையாகவும் நடந்துகொள்ளவேண்டும். நீ தார்வார் தேசத்து மகாராஜனுடைய அபிமான புத்திரியென்றும், இந்த தேசத்து மகா ராஜாவுக்கு சொந்தக்காரி யாதலால், ஏதோ ஒரு காரியார்த்தமாக இந்த அரண்மனைக்கு வந்திருப்பதாகவும், நீ கடைசி வரையில் சொல் லிக்கொண் டிரு. அப்படிச் செய்தால் தான், உன்னை இவர் கடைசி யில் கலியாணம் செய்துகொள்ளத் தோதாக இருக்கும். நீ தார்வார் தேசத்து மகாராஜனுடைய அபிமான புத்திரியென்பது பொய்யென்று நீ ஏற்கெனவே இளவரசரிடம் ஒப்புக்கொண்டிருக்கிரு யானுலும், நீ இப்போது இளவரசருக்கு எழுதப்போகும் கடிதத்தில், அந்த விஷ யத்தை அவருக்கு மறுபடியும் எழுதி, உன்னுடைய கண்ணியத்தைக் கருதி, அந்த வதந்தியை நிஜமான வதந்தியாகச் செய்துவிடும்படி கேட்டுக்கொள்ளவேண்டும். நீ அப்படிச் செய்துகொண்டு இளவரசர் உன்மேல் வைத்துள்ள பிரியத்தை முன்னிலும் அதிகமாக விருத்தி செய்துகொண்டு வருவாயானுல், நாங்கள் எப்படியாகிலும் பிரயத்தனப் பட்டு, இவர் உன்னையே கலியாணம் செய்துகொண்டு பட்டமகிஷியாக் கும்படி செய்து வைக்கிறோம். இதுசம்பந்தமாக நாங்கள் செய்து வரும் முயற்சிகளில் நீ கொஞ்சமும் சம்பந்தப்படவும் வேண்டாம்; அதனுல், உனக்குக் கொஞ்சமும் பிரயாசையும் உண்டாகாது. நான் சொல்வது தெரிகிறதா?'' என்முன்.

அவன் சொல்லிவந்த வரலாற்றைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் மிகுந்த மனவெழுச்சியும் சஞ்சலமு மடைந்து "ஆகா! என் விஷயத் தில் நீங்கள் இருவரும் இதுவரையில் செய்துள்ள உதவிகளை விட, இப் போது செய்யப்போவது மகா பிரமாதமானதாக இருக்கிறதே! ஏதோ எனக்கு இளவரசருடைய நட்பு ஏற்படுவது சுலபந்தான். ஆனுல் நான் பட்டமகிஷியாவது சாதாரணமான காரியமா? அதுதான் பலிக் குமோ வென்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது,'' என்முள்.

சாமளராவ் "அந்தக் கவலை உனக்கெதற்கு? நாங்கள் சொல்வது போல, நீ நடந்துகொண்டு வா. மற்ற விஷயங்களை முடித்து வைப் பது எங்களைச் சேர்ந்த பொறுப்பு. அந்த விஷயத்தில் நாங்கள் முயற்சி செய்வதால், உனக்கு எவ்வித நஷ்டமாவது, பிரயாசையாவது துன்ப

மாவது உண்டாகப் போகிறதில்லை யென்பதை நீ நிச்சயமாக நம்பலாம்,'' என்றான்.

பூர்ணசந்திரோதயம் சிறிது யோசனை செய்து, "சரி; உங்களிஷ்டப்படி செய்யுங்கள். அதிருக்கட்டும்; பூஜைவுக்கு அனுப்ப, தாதிகளைத் தெரிந்தெடுத்துவிட்டீர்களா? அவர்களை நாம் கடைசிவரையில் நம்பலாமா? முடிவுவரையில் உறுதியாக இல்லாமல் அவர்கள் ரகசியத்தை வெளியிட்டுவிட்டால், குடிகெட்டுப் போய்விடும். கடைசியில் நாமெல்லோரும் இந்த ஊரை விட்டே துரத்திவிடப்படுவோம். அப்படிப்பட்ட கெடுதல் உண்டாகாமல், நீங்கள் நிரம்பவும் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும்'' என்றாள்.

சாமளராவ், "நாங்கள் அப்படிப்பட்ட மனிதர்களைப் பார்த்துப் பிடிப்போமா? முடிவுவரையில் நம்மிடத்தில் உறுதியாக உள்ளவர்களைத்தான் நாங்கள் தேடிப் பிடித்திருக்கிறோம். அவர்கள் ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாதவர்களாக இருந்தால், நால்வரும் ஒற்றுமையாக வேலை செய்யமாட்டார்களென்ற எண்ணத்தோடு, அவர்கள் நால்வரும், ஒரே வயிற்றில் பிறந்த அக்காள் தங்கைச்சிகளாகப் பார்த்து ஏற்பாடு செய்திருக்கிறோம். இதோ அம்மன்பேட்டை என்ற ஓர் ஊரிருக்கிறதே. அங்கே அன்னத்தம்மாளென்று ஒரு கூத்தாடிச்சி இருக்கிறாள். அவளுக்கு நாலு பெண்களிருக்கிறார்கள். அவர்கள் நால்வரையும் அனுப்பும்படி அன்னத்தம்மாளிடம் ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர்களுக்கும் இளவரசருக்கும் அன்னியோன்னியமான சிநேகம் இருக்கிறதானாலும், அன்னத்தம்மாளுக்கு இளவரசருடைய பட்டமகிஷியிடத்தில் ஒரு காரணமாகப் பகை உண்டு. வருஷா வருஷம் தீபாவளிப்பண்டிகையன்று எல்லாப் பெண்டுகளும் பட்ட மகிஷியிடம் போய்ச் சன்மானம் வாங்குவதுண்டு. போனவருஷம் அன்னத்தம்மாள் பட்டமகிஷியைப் பார்க்கப்போன காலத்தில், இவள் கூத்தாடிச்சி யென்பதையும், இவளுடைய பெண்களிடத்தில் இளவரசர் அன்னியோன்னியமாக இருக்கிறாரென்பதையும் கருதி பட்டமகிஷி இவளுக்கு பேட்டி கொடுக்காமல் தூஷித்து அனுப்பிவிட்டாள். அந்த வருத்தத்தை அன்னத்தம்மாள் இன்னமும் மனசில் வைத்துக்கொண்டிருக்கிறாள். அது நம்முடைய அம்மாளுக்குத் தெரியும். ஆகையால், அவள் இந்த விஷயத்தில் நம்மிடத்தில் உறுதியாக இருப்பாளென்றே நாங்கள் நினைக்கிறோம். அதுமாத்திரமல்ல. அவளுடைய பெண்கள்

பூனதேசத்துக்குப் போய், நம்முடைய கருத்தை நன்ருக நிறைவேற்றி வைப்பார்களானல், இளவரசருக்கு ஏற்படும் புதிய பட்டமகிஷியின் சிபார்சைக்கொண்டு அன்னத்தம்மாளுக்கு ஒரு பெரிய சன்மானம் செய்வதாக அம்மாள் அவளுக்கு சத்தியம்செய்து கொடுத்திருக்கிருள். அதாவது அன்னத்தம்மாள் இருக்கும் கிராமமாகிய அம்மன் பேட்டை என்னும் ஊர் முழுதையும், அவள் பேருக்கு சர்வமானியமாகப் பட்டயத்தின் மூலமாய் இளவரசர் எழுதிக் கொடுத்துவிடும்படி நீ செய்யவேண்டும். உன்னை இளவரசர் பட்டமகிஷியாக்கிக் கொள்வாரானல், அதன் பிறகு, உனக்கு இது ஒரு பெரிய காரியமல்ல; நீ சொல்கிறபடி இளவரசர் நடந்து கொள்வார்,'' என்ருன்.

பூர்ணசந்திரோதயம் '' அதெல்லாம் சரிதான். நீங்கள் என்னைத் தான் இளவரசருக்குப் புதிய பட்டமகிஷியாக்கப் போகிறீர்களென்பது அன்னத்தம்மாளுக்குத் தெரியுமோ?'' என்ருள்.

சாமளராவ் '' அதை வெளியிடுவோமா? உனக்கும் எங்களுக்கும் உள்ளுக்குள் சம்பந்தமிருக்கிறதென்பதே இந்த ஊரில் எவருக்குமே தெரியாது. கடைசி வரையில், இந்த ரகசியம் மாத்திரம் வெளிவராதபடி நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்; இந்த விஷயத்தில் நீயும் அதிக ஜாக்கிரதையாகவே நடந்துகொள்ள வேண்டும்,'' என்ருன்.

பூர்ணசந்திரோதயம் '' அதைச் சொல்லவும் வேண்டுமா? என் மூலமாக எந்த சங்கதியாவது வெளியாகி விடுமோவென்ற கவலையே உங்களுக்குக் கொஞ்சமும் வேண்டாம். என்னை மகோன்னத பதவியில் வைப்பதற்காக நீங்களெல்லோரும் இவ்வளவு பாடுபடுகிறீர்கள்? அப்படி இருக்க, அதை நானே வெளியிட்டுக் கெடுத்துக் கொள்வதென்ருல், என்னை விடப் பொறுக்கியெடுத்த முட்டாள் யாரிருப்பார்கள்?'' என்ருள்.

சாமளராவ் மகிழ்ச்சியாகப் புன்னகை செய்து '' சரி; நேரமாகிறது. நீ இளவரசருக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை எழுது, அதை நானும் பார்த்துவிட்டுப் போகிறேன். உன்னுடைய கடிதம் இளவரசரிடத்திற்கு வந்து சேரும்போது, நான் தற்செயலாக இருப்பவன்போல, அவரோடு கூட அங்கே இருந்து ஒரு வேலை செய்ய வேண்டும்,'' என்ருன்.

அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் உடனே எழுந்து காகிதம், மை, எழுதுகோல் முதலிய கருவிகளிருந்த ஒரு மேஜைக்குப் போய், அதன் பக்கத்திலிருந்த நாற்காலியின்மேல் உட்கார்ந்து, இளவரசருக்குக் கடிதம் எழுதத் துவக்கினள்.

20-வது அதிகாரம்

ஹேமாபாயி — தூதுக்கிழவி

ஹேமாபாயி என்பவள் நாற்பத்தைந்து வயதுக்குமேல் அடைந்தவள். அவளது உடம்பு கொழுகொழுப்பாகவும், அழகாகவும் இருந்தது. அவள் தனது ஏராளமான ஆபரணங்களை வாரி உச்சிமுதல் உள்ளங்கால்வரையில் அணிந்துகொண்டிருந்ததன்றி, மகா ஆடம்பரமான ஜரிகைச்சேலை, ரவிக்கை முதலியவைகளைத் தரித்திருந்தாள். அவள் தாசியின் வகுப்பைச் சேர்ந்தவள். ராணிவாய்க்கால் சந்து என்று பெயர்கொண்ட சிறிய தெருவில் அவளுக்கு மூன்று உப்பரிகைகளுள்ள ஒரு மாளிகை இருந்தது. அவள் இளம்பிராயத்தில், எப்பேர்ப்பட்டவரது மனதையும் ஒரு நொடியில் கவரத்தக்க அற்புதமான அழகோடிருந்தாள். அந்த ஊரிலுள்ள ஏராளமான பெரிய மனிதர்கள் அவளிடத்தில் நட்பாக இருந்து தங்களது பெருஞ் செல்வத்தை அவளுக்குக் கொடுத்து வந்திருந்தார்கள். அப்படி அவளிடம் நட்பாக இருந்தவர்களுள், நமது மருங்காபுரிக் கிழவர் முக்கியமான மனிதர். அவள் வயதடைந்து கிழவியான பிறகு தனது வருமானம் குறைந்து போனதைக் கண்டு, கண்ணியமான குடும்பங்களிலுள்ள யெளவனச் சிறுமிகளை மயக்கி அழைத்து வந்து தனது மாளிகையில் வைத்துக்கொண்டு, தனக்குப் பதிலாக, அவர்களை அந்தத் துறையில் விடுத்துப் பெரிய மனிதர்களிடம் வழக்கம்போலப் பொருள் சம்பாதித்து வந்தாள். அவள் எப்போதும் சிரித்த முகமும், கனிந்த பார்வையும், மாதுரியமான சொற்களுமுடையவளாகவே காணப்படுவாளாதலால், எப்படிப்பட்டவர்களும் எளிதில் மயங்கி அவளது வஞ்சக வலையில் வீழ்ந்து விடுவார்கள். ஆனால், அவள் தன் வசம் அகப்பட்டுக்கொண்ட மனிதர்கள் ஒட்டாண்டியாகிற வரையில் கொள்ளையடித்துக் கொண்டே விடுவாள். அப்படிப்பட்ட பேராசைக்காரிகள் நூறுபேர் சேர்ந்து அபகரித்தால் கூடக் குறையாத செல்வம் மருங்காபுரிக் கிழவ

ரிடம் குவிந்து கிடந்ததாகையால், அவரது நட்பு அவளுக்குச் சாசுவதமாக இருந்து வந்தது.

முன்னே விவரிக்கப்பட்டபடி தமது வெல்வெட்டு மாடத்திலிருந்த மருங்காபுரி ஜெமீந்தாருக்கு முன்னல் ஹேமாபாயி சிரித்த முகத்தோடு வந்து அவரை வணங்கிக் கும்பிடுபோட்டு நிற்க, அவளைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சியும், புன்னகையும் கொண்ட கிழவர் "ஹேமாபாயீ! உட்கார்ந்து கொள். ஓர் அவசரமான காரியமாக நான் உன்னை வரவழைத்திருக்கிறேன். நீ எனக்கு இப்படிப்பட்ட உதவி செய்து நிரம்ப காலமாகிறது. இதுவரையில் நீ எனக்காக எத்தனையோ முயற்சிகள் செய்து ஜெயம்பெறச் செய்திருக்கிருய். அதெல்லாம் அவ்வளவு பெரிதல்ல. இந்தக் காரியத்தை நீ முடித்துக் கொடுப்பாயானல் அப்போதுதான் நீ உண்மையில் கெட்டிக்காரி; என்னிடம் நீ இதுவரையில் பெற்றுள்ள சன்மானத்தை யெல்லாம்விடப் பெரிதாக இந்தத்தடவை பெறுவாய்; என்ன சொல்லுகிருய்? இந்தக் காரியத்தை முடித்துக்கொடுக்க, உனக்கு அவகாசமும் இஷ்டமும் இருக்குமா? சொல்; பார்ப்போம்" என்ருர்.

உடனே ஹேமாபாயி இனிமையாகச் சிரித்து, "நான் எத்தனையோ கடினமான விஷயங்களில் என்னுடைய வல்லமையை எஜமானருக்கு நன்ருகக் காட்டி இருக்கிறேனே! அப்படி இருக்க, இந்த ஒரு விஷயத்தில்மாத்திரம் எஜமானர் இப்படி சந்தேகப்படவேண்டிய காரணமென்ன? எப்படிப்பட்ட காரியமாக இருந்தாலும் யோசிக்காமல் வெளியிடலாம். அதை நான் வெகு சீக்கிரத்தில் முடித்துக் கொடுக்கிறேன். எஜமானருக்கு உபயோகப்படாமல் நான் வேறு என்னதான் செய்யப்போகிறேன்?" என்ருள்.

மருங்காபுரி ஜெமீந்தார் மிகுந்த களிப்படைந்து, "சரி; அப்படியானல் சொல்லுகிறேன் கேள். இந்த ஊருக்கு நான்கு மைல் தூரத்திலுள்ள மாரியம்மன் கோவில் என்ற ஊரில், செட்டித்தெருவில் ஒரு பங்களா இருக்கிறதாம். அந்தத் தெருவில் இருப்பது ஒரே ஒரு பங்களாதானும். அதற்குள் மாசிலாமணிப்பிள்ளை என்ற ஒருவரும், அவருடைய சம்சாரமும் இருக்கிருர்களாம். அந்தப் பெண்ணுக்கு இணையான அழகுடைய பெண்ணே இந்த உலகத்திலில்லையென்று எனக்கு சங்கதி கிடைத்திருக்கிறது. அதுமாத்திரமல்ல. அவன் வயதான கிழவனும். அந்தப் பெண் நல்ல பக்குவகாலத்துக் குமரியாம். அந்த மாசி

லாமணிப்பிள்ளை தன்னுடைய பெண்ஜாதி பதிவிரதையாக இருக்க வேண்டுமென்ற பௌரஷமுடையவனல்லவாம்; ஏதோ ஒரு காரியத்தை உத்தேசித்து, அவன் இதற்குமுன் தன் பெண்ஜாதியை ரகசியமாக ஒரு பெரிய மனிதரிடத்துக்கு அனுப்பிவைத்ததாக எனக்கு நிச்சய மான செய்தியும் கிடைத்திருக்கிறது. ஆகையால் அவனுக்கு நாம் ஏராளமான பொருள் கொடுத்தால், அவன் நம் விஷயத்திலும் இணங்கி வரலாமென்று நினைக்கிறேன். ஆனால், நாம் கொஞ்சம் எச்சரிப்பாகவே நடந்துகொள்ள வேண்டும். அவன் நம்முடைய பணத்தை வாங்கிக் கொண்டு அவளை அனுப்பிவிட்டு, பிறகு நம்மீது நஷ்டத்துக்கு தாவா செய்தாலும் செய்வான். அப்படிப்பட்ட அவமானத்துக்கு இடங் கொடுக்காமல் நாம் நிரம்பவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண் டும்" என்றார்.

ஹேமாபாயி:— ஓ! அப்படியே செய்வோம். எஜமானருடைய பெயரையே வெளியிடாமல், நான் இந்தக் காரியத்தை எளிதில் முடித் துத் தருகிறேன். அவள் வருவதாக ஒப்புக்கொண்டால், அவளை நான் என்னுடைய ஜாகைக்கே அழைத்து வந்து மூன்றாவது உப்பரி கையில் வசதியாக வைக்கிறேன். எஜமானர் அவளை அவ்விடத்தி லேயே வந்துபார்த்தால், எஜமானர் யார் என்பதை அவள் அறிந்து கொள்ள வழி இல்லாமல் போகும். இதற்கு முன் அவள் எஜமான ரைப் பார்த்திருந்தாலன்றி, மற்றப்படி அவள் எப்படித் தெரிந்து கொள்ளப் போகிறாள்?

ஜெமீந்தார்:— நான் இன்னானென்பதை அவள் இதற்கு முன் தெரிந்து கொண்டிருப்பாளென்று நான் நினைக்கவில்லை. மாசிலாமணிப் பிள்ளை யென்று பெயருள்ள எந்த மனிதனோடும் நான் பழகியதில்லை. என் மனசில் ஒரு சந்தேகம் உண்டாகிறது. அந்த மனிதனுடைய உண்மைப் பெயர் மாசிலாமணிப் பிள்ளையாக இருக்காதென்று என் மனசில் ஓர் எண்ண முண்டாகிறது. அவர்கள் யாராக இருந்தாலும் இருக்கட்டும். அவளை நாம் கொண்டு வந்துதான் தீரவேண்டும். அத னால், அவமானம், அல்லது, துன்பம் வரக்கூடியதாக இருந்தாலும் பரவாயில்லை. நான் யாரென்பது முக்கியமாக அவளுடைய புருஷ னுக்குத் தெரியாதிருப்பதுதான் அவசியமானது. அவளுக்கு மாத் திரம் தெரிந்தால், அதனால் அவ்வளவாகக் கெடுதல் உண்டாகாதென்று

நினைக்கிறேன். அவளை அடைய ஆசைப்படுகிற மனிதர் ஒரு ஜெமீந்தார் என்பதையே நீ வெளியிட வேண்டாம்.

ஹேமாபாயி :— ஆம், அப்படித்தான் செய்யவேண்டும். அவன் எந்த நியாயஸ்தலத்துக்குத்தான் போகட்டுமே. இந்த ஹேமாபாயி மனசுவைப்பாளானால், திரிமூர்த்திகள் வந்தாலும் இவளுடைய வாயிலிருந்து உண்மையில் ஒரு வார்த்தைகூட கிரகிக்க முடியாதென்பதை எஜமானர் நிச்சயமாக வைத்துக்கொள்ளலாம். எனக்கொன்றும் தெரியாதென்று ஆயிரம் பிரமாணம் வேண்டுமானாலும் செய்து துணி போட்டுத் தாண்டிவிடுவேன். சத்தியமாவது பிரமாணமாவது. அதைப்பற்றியெல்லாம் நான் கொஞ்சமும் கவனிக்கிறவளே யல்ல.

ஜெமீந்தார் :— (மகிழ்ச்சியடைந்து புன்னகை செய்து) ஆம், நிஜந்தான். இப்படிப்பட்ட ஸ்திரீ விஷயங்களில் சத்தியமும் நியாயமும் பார்த்தால், மனிதன் ஒரே ஒரு ஸ்திரீக்கு மேல் அதிகமான ஸ்திரீகளுடைய முகத்தைக்கூட பார்க்க வழியில்லாமல் போய்விடும். ஆகையால், நீ சொல்வது சரியான பேச்சு. அது போகட்டும். பண விஷயத்தைப்பற்றி நீ கொஞ்சமும் யோசிக்கவாவது, பின் வாங்கவாவது வேண்டாம். அவளுடைய புருஷன் இதற்கு இணங்கினால், அவனுக்கு இரண்டாயிரம் ரூபாய் வேண்டுமானாலும் கொடுத்து விடலாம். ஆனால், முழுத் தொகையையும் நாம் முன்னால் கொடுக்கக் கூடாது. நாம் அனுப்பும் பெட்டி வண்டியில் அவன் தன்னுடைய சம்சாரத்தைக் கொண்டு வந்து ஏற்றி விடும்போது பாதித் தொகையைக் கொடுத்துவிடு. இன்னொரு பாதித் தொகையை அந்தப் பெண் உன்னுடைய ஜாகைக்கு வந்தவுடனே அவளிடத்திலேயே கொடுத்து விடுவோம். ஆனால், அவனும் கூடவே தொடர்ந்து உன்னுடைய ஜாகைக்கு வராமல் நீ ஜாக்கிரதையாகப் பார்த்துகொள்ள வேண்டும்.

ஹேமாபாயி :— எஜமானருடைய பிரியப்படியே நான் சகல விஷயங்களையும் திறமையாக நிறைவேற்றி வைக்கிறேன். அதைப் பற்றி எஜமானருக்குக் கொஞ்சமும் கவலையே வேண்டாம்.

ஜெமீந்தார் :— உனக்கு நான் செய்யப்போகும் சன்மானம் இப்படிப்பட்டதென்பதை நான் இப்போதே வெளியிட வேண்டுமென்பதில்லை யென்று நினைக்கிறேன். உன் விஷயத்தில் நான் எவ்வளவு தாராளமாக நடந்து கொள்வேனென்பது உனக்குத் தெரியாததல்ல.

ஹேமாபாயி :— (அதைக் கேட்டு சஞ்சலமடைந்தவள் போல நடித்து) எனக்கு சன்மானம் கொடுப்பதைப்பற்றி எஜமானர் இப்போது சொல்லக்கூட வேண்டுமா? அந்த வார்த்தையையே எடுக்கத் தேவையில்லை. எஜமானர் விஷயத்தில் பிரயாசை யெடுத்துக்கொண்டு உழைப்பதே ஓர் ஆநந்தமாகும். ஆகையால், நான் என்னாலேன்ற வரையில் எப்படியாவது முயற்சி செய்து காரியத்தைப் பலிதமாக்கு கிறேன். அதுதான் பிரதானம். மற்றது எனக்கு ஒரு பொருட்டல்ல. நான் போகலாமல்லவா? இன்னம் ஏதாவது என்னால் ஆக வேண்டுமா?

ஜெமீந்தார் :— வேறே ஒன்றுமில்லை. நீ சீக்கிரமாகப் போய்க் காரியத்தை முடி. இப்போதே செலவுக்கு ஏதாவது பணம் வேண்டுமா?

ஹேமாபாயி :— பணத்துக் கென்ன அவசரம்? அதெல்லாம் பின்னால் பார்த்துக் கொள்ளுகிறேன். அவசரமாகப் பணம் வேண்டுமானால், நான் என்னிடமிருப்பதை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறேன்.

ஜெமீந்தார் :— சரி; அப்படியானால், நீ போய்விட்டு வா— என்றார்.

உடனே ஹேமாபாயி அவரிடம் செலவு பெற்றுக்கொண்டு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டாள். புறப்பட்டவள் நேராகத் தனது ஜாகைக்குப் போய்த் தனக்குத் தேவையான வஸ்துக்களை எடுத்துக் கொண்டாள். தனது வேலைக்காரியை அனுப்பி, மாரியம்மன் கோவிலுக்குப் போய்வர, ஒரு குதிரைவண்டி அமர்த்திக் கொண்டுவரச் செய்து, அதில் உட்கார்ந்துகொண்டு உடனே பிரயாணமானாள். குதிரைவண்டி விசையாக ஓடி மாலை ஆறு மணிக்கு அவளைச் செட்டித் தெருவில் கொண்டுபோய் விட்டது. அந்தத் தெருவில் பங்களா இருந்த இடத்தை அறிந்துகொண்டு அவள் நேராக அதற்குள் நுழைந்தாள். வாசலிலிருந்த தோட்டக்காரன் அவளைப் பார்த்து, யாரோ பெரிய மனிதர் வீட்டு ஸ்திரீயென்றும், தனது எஜமானருக்கு வேண்டியவளென்றும் நினைத்து, எழுந்து வணக்க வொடுக்கமாக நின்று "என்ன, அம்மணீ! வேண்டும்?" என்று கேட்டான்.

அவள் "ஏனப்பா மாசிலாமணிப்பிள்ளையினுடைய பங்களா இது தானே?" என்றாள்.

தோட்டக்காரன் "ஆம், அம்மணி! இதுதான்," என்றான்.

ஹேமாபாயி "அவர் உள்ளே இருக்கிறாரா? அல்லது, எங்கே யாவது வெளியில் போயிருக்கிறாரா?

தோட்டக்காரன் "உள்ளேதான் இருக்கிறார்கள், அம்மணீ! உங்களுக்கு என்ன ஆகவேண்டும்?" என்றான்.

ஹேமாபாயி "ஒன்றுமில்லை. நீ அவரிடம் போய், தஞ்சாவூரி லிருந்து ஓர் அம்மாள் வந்திருப்பதாகவும், அவரைப் பார்க்கப் பிரியப் படுவதாகவும் சொல்" என்று நயமாகக் கூறினாள்.

தோட்டக்காரன் அப்படியே செய்வதாகச் சொல்லிவிட்டு விரைவாக உள்ளே ஓடி விஷயத்தைத் தெரிவிக்க, மாசிலாமணிப்பிள்ளை யென்பவர் உடனே வெளியில் வந்தார். அவர் தூரத்தில் வரும் போதே, ஹேமாபாயி அவரது முகத்தை உற்றுநோக்கி ஆராய்ச்சி செய்தாள். ஏனென்றால், அவள் செய்து வந்த தொழில் நிரம்பவும் தந்திரமாகவும் சாமர்த்தியமாகவும் நடத்தப்பட வேண்டியதாகையால், எதிராளியின் முகக்குறியிலிருந்து அவனது குணாகுணங்களை நன்றாக அறிந்து கொண்டு அதன் பிறகே, விஷயத்தை வெளியிடுவது வழக்கம். அவ்வாறு பழகிப்பழகி மனிதரது முகக்குறிகளை ஆராய்ந்தறி வதில் அவள் அதிகத் தேர்ச்சி பெற்றிருந்தாளாகையால், அவள் மாசிலாமணிப் பிள்ளையின் முகக்குறிகளிலிருந்து, அவர் எல்லா விஷயத்திற்கும் துணிந்த அயோக்கிய சிகாமணி யென்று ஒருவாறு யூகித் துக்கொண்டாள். அதோடு அந்த மனிதரது முகம் அவள் அதற்கு முன் பார்த்துப் பழகிய முகமாகவும் தோன்றியது. அவரைத்தான் எங்கே எப்போது பார்த்திருக்கக் கூடுமென்று அவள் தனக்குள் சிந்தனை செய்த வண்ணம் நின்றாள்.

அவளண்டை நெருங்கிவந்த மாசிலாமணிப் பிள்ளை யென்பவரும், அவளைக் கண்டு ஒருவித வியப்பும் இன்பமும் அடைந்தவர் போலக் காணப்பட்டதன்றி அவளை நோக்கித் தயங்கித் தயங்கிப் பேசத் தொடங்கி "ஏனம்மா வாசலில் நிற்கிறீர்களே! இப்படி உள்ளே வருகிறதுதானே! உங்களை நான் இதற்கு முன் எங்கேயோ பார்த்திருப்பதாக ஒரு நினைவுண்டாகிறது. எங்கே பார்த்திருக்கலாம்," என்ற வண்ணம் அவளை உபசரித்து உள்ளே அழைத்துக் கொண்டுபோனார். அவரைத் தொடர்ந்து பின்னால் நடந்து வந்த ஹேமாபாயி "நானும் உங்களை எங்கேயோ பார்த்த மாதிரிதான் இருக்கிறது. ஆனால் சரி

யானபடி நினைவுண்டாக மாட்டேனென்கிறது. மாசிலாமணிப் பிள்ளை யென்று பெயர்கொண்ட என்னுடைய சிநேகிதர் ஒருவர் இருக்கிறார். நான் இந்தத் தெருவின் வழியாகப் போனபோது, இந்த பங்களாவைக் கண்டு இது யாருடையதென்று விசாரித்தேன். மாசிலாமணிப் பிள்ளையினுடையது என்று சொன்னார்கள். ஒருவேளை என்னுடைய சிநேகிதர்தான் இங்கே ஜாகை வைத்துக் கொண்டிருக்கிறாரோவென்று சந்தேகித்து, அவரைப் பார்க்கலாமென்று வந்து உங்களுக்கு அநாவசியமான தொந்தரவு கொடுத்துவிட்டேன்,'' என்று நேர்த்தியாகவும், தேன்போல இனிமையாகவும் மொழிந்தாள். அதற்குள் அவர்களிருவரும் கட்டிடத்தை யடைந்து, முதலில் காணப்பட்ட ஒரு கூடத்தை யடைந்தனர். மாசிலாமணிப் பிள்ளை பக்கத்திலிருந்த ஒரு விசிப்பலகையின் மேல் உட்கார்ந்து கொள்ளும்படி அவளை உபசரித்த வண்ணம், தாம் வேறோர் ஆசனத்தில் அமர்ந்தார். ஹேமாபாயி ஒருவிதத் துணிவடைந்தவளாய் அவரால் காட்டப்பட்ட விசிப்பலகையின்மேல் உட்கார்ந்து கொண்டாள்.

உடனே மாசிலாமணிப் பிள்ளை அவளது முகத்தைத் திரும்ப ஒரு முறை கூர்ந்து நோக்கி, அப்போதே உண்மையைக் கண்டு கொண்டவர்போலக் காட்டி "ஓகோ! சரி சரி; இப்போதுதான் நினைவுண்டாகிறது. தஞ்சாவூர் ராணிவாய்க்கால் சந்திலிருக்கும் ஹேமாபாயியல்லவா நீ?'' என்று சந்தேகமாகவும் மகிழ்ச்சியாகவும் கூறினார்.

அதைக் கேட்ட ஹேமாபாயி உண்மையிலேயே அளவு கடந்த மகிழ்ச்சியடைந்தாள். தான் அவரிடம் பேசவேண்டிய விஷயம் அசாதாரணமான விஷயமாகையால், அதற்குமுன் முகமறியாத மனிதரிடத்தில் தான் துணிந்து தனது கருத்தை எப்படி வெளியிடுவதென்று அவள் அஞ்சி வந்ததற்கு அநுகூலமாக, அவர் தன்னை முன்னரே அறிந்தவராக இருக்கிறாரென்ற விஷயம் அவளது மனதில் உற்சாகத்தையும், நம்பிக்கையையும் துணிவையும் உண்டாகியது. தனது காரியம் சுலபத்தில் பலித்து விடுமென்ற ஒரு நிச்சயமும் ஏற்பட்டது. அவள் உடனே புன்னகை செய்து "ஓகோ! அப்படியா! கடைசியில் நான் உங்களுக்குத் தெரிந்தவளாகவே இருக்கிறேன். நான் ஏதோ தவறாக நினைத்து இங்கே வந்துவிட்டதாக எண்ணி இனி நான் விசனப்பட வேண்டிய அவசியமே இல்லை. உங்களை இதற்கு முன் நான் எப்போது பார்த்தேனென்பது எனக்கு ஞாபக முண்டாக

வில்லையே! நீங்கள் என்னை எப்போது பார்த்தீர்கள்? நீங்கள் என்னுடைய ஜாகைக்கு எப்போதாவது வந்திருக்கிறீர்களா?'' என்றாள்.

மாசிலாமணிப் பிள்ளை "இப்போது சமீபகாலத்தில் நான் உன்னுடைய ஜாகைக்கு வந்ததில்லை. நாலைந்து வருஷங்களுக்கு முன், நான் அடிக்கடி உன்னுடைய ஜாகைக்கு வந்து சந்தோஷமாக இருந்து விட்டுப் போவது வழக்கம். ஆனால், நான் வந்தால், என்னுடைய பெயரையும் சொல்வதில்லை; அவ்வளவு பகிரங்கமாகவும் வருவதில்லை. இராக்காலத்தில் ரகசியமாக வந்து ரகசியமாகப் போய்விடுவேன். அதனால்தான், இப்போது உன்னைப் பார்த்தவுடனே எனக்கே அடையாளம் தெரியவில்லை,'' என்றார்.

– உடனே ஹேமாபாயி இனிமையாகப் புன்னகை செய்து "ஓகோ! இருக்கலாம் இருக்கலாம். எனக்குக்கூட இப்போதுதான் ஞாபகமுண்டாகிறது. நானும் உங்களைப் பார்த்துத்தானிருக்கிறேன்,'' என்றாள்.

189953

மாசிலாமணிப் பிள்ளை :— (வேடிக்கையாகக் கண்ணைச்சிமிட்டிக் கொண்டு) என்ன விசேஷம்? க்ஷேமந்தானே? உன்னுடைய காலக்ஷேபம் பழைய மாதிரியே நடந்துகொண்டு வருகிறதல்லவா?

ஹேமாபாயி :— (மகிழ்ச்சியாகப் புன்னகை செய்து) என்னவோ உங்களைப்போன்ற பிரபுக்களுடைய தயவினால் நான் சுகமாக ஜீவித்துக்கொண்டுதான் வருகிறேன். என்னுடைய ஜாகையை நீங்கள் இப்போது சமீபகாலத்தில் பார்த்ததில்லையே. நாலைந்து வருஷ காலத்துக்கு முன்தானே பார்த்தீர்கள். பழைய கட்டிடத்தை அடியோடு இடித்துவிட்டு, இப்போது மூன்று உப்பரிகைகள் வைத்து வெகு எற்பாடாகக் கட்டி இருக்கிறேன். நீங்கள் என்னுடைய ஜாகைக்கு ஒரு நாளைக்குத்தான் வந்து பாருங்களேன். பழைய சிநேகிதர்களை இப்படி அடியோடு கைவிடுவது தர்மமாகுமா?

மாசிலாமணிப் பிள்ளை :— (மகிழ்ச்சியாக நகைத்து) ஓ! அவசியம் வருகிறேன். கரும்பு தின்னக் கூலிகேட்பதுண்டா! நீ மூன்று உப்பரிகைகள் வைத்துக் கட்டியிருப்பதாகச் சொல்வதைப் பார்த்தால், அது பெரிய அரண்மனைபோல இருக்க வேண்டுமே!

ஹேமாபாயி :— நீங்கள் வந்துதான் பாருங்களேன். ஒவ்வோர் உப்பரிகையையும் சொர்க்க லோகம்போல அலங்கரித்திருக்கிறேன். ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை முதலிய தெய்வதாசிகளைப்

பழிக்கத்தக்க அற்புதமான அழகு வாய்ந்த பெண்களையெல்லாம் நீங்கள் அங்கே பார்க்கலாம். ஏதோ ஈசுவரன் ஏராளமாகப் பணம் கொடுத்துக் கொண்டுதானிருக்கிறான். அதைச் செலவு செய்து இப்படி ஒரு வீடு கட்டினேன். பணம் ஏராளமாக வந்து கொண்டிருந்தால், அதை என்ன செய்வதென்பதுகூட சில சமயங்களில் தெரிய மாட்டேனென்கிறது.

மாசிலாமணிப் பிள்ளை :— (நயமாகப் புன்னகை செய்து) ஓகோ! அப்படியா சங்கதி! நீ எப்போதும் அதிர்ஷ்டசாலிதான். எந்தத் தொழிலுக்குப் போனாலும், அதிர்ஷ்டம் வேண்டும். உன்னிடம் மேன்மேலும் வந்து குவிந்து கொண்டிருக்கும் பணத்தை என்ன செய்வதென்பது உனக்குத் தெரியவில்லை. எங்களைப்போல இருக்கிறவர்களுக்குப் பணம் இருக்கிற இடமாவது, அதைச் சம்பாதிக்கிற விதமாவது தெரியமாட்டே னென்கிறது. என்ன செய்கிறது. நீ நன்றாகப் பணம் சம்பாதித்துச் சம்பாதித்துப் பழகி இருக்கிறாயே. என்னிடம் இப்போது பணமில்லாமையால், நான் நிரம்பவும் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறேன். பணம் சம்பாதிக்கிற வழி ஏதாவது உன்னைப்போன்றவர்கள் கற்றுக்கொடுத்தால், இந்த சமயத்துக்கு நிரம்பவும் அநுகூலமாக இருக்கும். அது போகட்டும். நீ இந்த சாயுங் கால வேளையில் இந்த ஊரில் வந்து என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

ஹேமாபாயி :— (அவரிடம் அந்தரங்க விசுவாசமுள்ளவள்போல நடித்து) நீங்கள் என்னைக் கண்டு, பழய சிநேகிதை என்பதை யுணர்ந்து அதை வெளியில் காட்டி அன்பு பாராட்டினீர்கள். அப்படி இருக்க, நான் உங்களை அன்னியராக எண்ணி விஷயத்தை மறைப்பது சரியல்ல. நான் ஒரு முக்கியமான விஷயமாக இந்த ஊரில் அலைந்து திரிந்து கொண்டிருக்கிறேன். இதில் மாத்திரம் நான் ஜெயமடைவேனானால், எனக்கும், இருநூறு முன்னூறு கிடைக்கும். நான் அழைத்துக் கொண்டுபோகும் பெண்ணும் ஒரு ராத்திரியில் இரண்டாயிரம் ரூபாய் வரையில் சம்பாதித்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட அதிர்ஷ்டம் எவளுக்கு வாய்க்கக் காத்திருக்கிறதோ தெரியவில்லை.

மாசிலாமணிப் பிள்ளை :— (வியப்பும் மகிழ்ச்சியும், சுவாரஸ்யமுமடைந்து) அது என்ன விஷயம்? அதை நன்றாக உடைத்துத்தான் சொல்லேன். மூடிமூடிப் பேசுகிறாயே.

ஹேமாபாயி :— (தணிவாகவும் ரகசியமாகவும் பேசத்தொடங்கி) அந்த சங்கதி நிரம்பவும் வேடிக்கையானது. ஆனால், அது புதுமை யானதல்ல. அதைப்போல எத்தனையோ தடவைகளில் நடத்தி இருக் கிறேன். வேறொன்றுமில்லை. என்னை ஆதரித்து வரும் பிரபுக்களி லெல்லாம் முக்கியமானவர் ஒரு கிழவர். அவர் உங்களைவிட வயசில் மூத்தவராக இருப்பார். அவ்வளவு வயசானாலும், அவருக்கு இந்த விஷயத்திலிருக்கும் பைத்தியம் இவ்வளவு அவ்வளவல்ல. அவர் இன்று காலையில் என் ஜாகைக்கு வந்து என்னோடு பேசிக் கொண்டிருந்தார். இதுவரையில் அவர் பார்த்துப் பழகிய பெண்களெல்லாம் அவருக்குப் பிடிக்கவில்லையாம். அவர்களுடைய அழகெல்லாம் முதல்தரமான தல்லவாம். என் வீட்டுக்கு வருவதற்கே அவருக்கு வெறுப்புண்டாகி விட்டதாம். ஆனால், அவருக்கு அவ்வளவு வயசாகி இருந்தாலும், பார்வைக்கு அவர் அழகாகத்தானிருக்கிறார். அவரிடத்திலுள்ள பணம் நம்முடைய தேசத்து ராஜாவினிடத்தில் கூட இருக்காது.

மாசிலாமணிப் பிள்ளை :— (புரளியாகப் பேசத் தொடங்கி) அதற்காக அவர் உன்னை என்ன செய்யச் சொல்லுகிறார்? இது வரை யில் அவர் பார்த்த பெண்களை யெல்லாம்விட அதிக அழகான ஒருத்தி யைக் கொண்டுவந்தால்தான், தம்முடைய மோகவிடாய் தணியுமென்று சொல்லி, இந்த ஊரில் தேடிப்பிடிக்கும்படி உன்னை அனுப்பினாரா?

ஹேமாபாயி :— (நயமாகச் சிரித்துக்கொண்டு) ஆம் ஆம்; அப் படித்தான். நான் கண்டுபிடிக்கும் பெண் அபூர்வமான அழகு வாய்ந் தவளாக இருக்கவேண்டும். அது மாத்திரமல்ல. அவள் மகா ஸரஸ குணம் பொருந்தியவளாகவும், அசட்டுத்தனமாகப் பேசாமல் மரி யாதையாகவும், புத்திசாலித்தனமாகவும், வேடிக்கையாகவும் பேசித் தன்னுடைய இனிய குணங்களால், அவரை மகிழ்விக்கக் கூடியவளாக வும் இருக்கவேண்டுமாம். இந்த அம்சங்கள் வாய்ந்தவளாக இருக்கிற பெண் எவளாக இருந்தாலும், நான் அவளை அழைத்துக் கொண்டு போனால், அவர் ஏற்றுக்கொள்வார். அப்படிப்பட்ட யோக்கியதை வாய்ந்த ஒரு பெண் இந்த ஊரில் இங்கே ஏதோ ஒரு தெருவில் இருப்ப தாகச் சிலர் சொல்லக்கேட்டு நான் இந்த ஊருக்கு வந்து விசாரித்தேன். அவள் தன் புருஷனோடு இந்த ஊரைவிட்டுப் புறப்பட்டு வேறே எங் கேயோ போய்விட்டதாகக் கேள்வியுற்றேன். இனி என்ன செய்கிற தென்பது தெரியவில்லை. அதுதான் கவலையாக இருக்கிறது. அவள்

இருந்திருப்பாளானால், இன்று ராத்திரி இரண்டாயிரம் ரூபாய் அவளுடைய கைக்கு வந்து சேர்ந்திருக்கும். அவளும் பதிவிரதைத்தனம் கொண்டாடி அந்தத் தொகையை ஏற்றுக் கொள்ளாதிருக்கமாட்டாள்.

மாசிலாமணிப் பிள்ளை :— நீ சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு நாளைக்கு யாராவது இரண்டாயிரம் ரூபாய் கொடுப்பார்களா? ஒரு வேளை இருநூறு ரூபாயாக இருக்குமோ?

ஹேமாபாயி :— இல்லை இல்லை. இரண்டாயிரந்தான். அது மாத்திரமா? எனக்குப் பிரத்தியேகமாக இருநூறு ரூபாயாவது கொடுப்பார்? அதெல்லாம் சரி; அப்படிப்பட்ட பெண்ணல்லவா வேண்டும். அதற்குத்தான் என்ன செய்வதென்பது தெரியவில்லை.

மாசிலாமணிப் பிள்ளை :— நீ சொல்வது நம்பக்கூடாத விஷயமாக இருக்கிறது. ஒரு பெண்ணினிடம் ஒரு ராத்திரியில் அவ்வளவு பெரிய தொகையை எடுத்தெறிய, அவனென்ன அவ்வளவு முட்டாளாகவா இருப்பான்?

ஹேமாபாயி :—அவர் ஒரு கோடீசுவரரல்லவா? அவருக்கு இந்த இரண்டாயிரம் ரூபாய் இரண்டாயிரம் ஓட்டாஞ் சில்லுகளுக்குச் சமானம். அவர் கலியாணமே செய்து கொள்ளவில்லை. தம்முடைய ஆயிசுகாலமெல்லாம் இப்படி சிற்றின்ப மநுபவித்தே போக்கிவருகிறார். சித்தம் போக்கு சிவன் போக்கு என்கிறபடி, அவர் மனசுக்கு இஷ்டமானால், ஆயிரமல்ல, பதினாயிரமல்ல வாரி ஒரு நொடியில் வீசிக் கனகாபிஷேகம் செய்து விடுவார். அதைப்பற்றிச் சந்தேகமே வேண்டாம்.

மாசிலாமணிப் பிள்ளை :— நீ சொல்வது வாஸ்தவமாக இருக்கலாம். அப்பேர்ப்பட்ட பைத்தியக்காரர்கள் எத்தனையோ பேர் உலகத்தில் இருக்கிறார்கள்தான். (சிறிது யோசனை செய்து) எனக்கு ஒரு விஷயம் ஞாபக முண்டாகிறது. எனக்குத் தெரிந்த பெண் ஒருத்தி இந்த ஊரில் இருக்கிறாள். நீ விவரித்த யோக்கியதா பட்சமெல்லாம் அவளிடம் பூர்த்தியாக நிரம்பி இருக்கின்றன. அந்த மனிதர் இரண்டாயிரம் ரூபாய் கொடுப்பது உண்மையானால், அவள் ஒரு வேளை இசைந்தாலும் இசையலாமென்று நினைக்கிறேன்.

ஹேமாபாயி :— (மிகுந்த களிப்பும் உற்சாகமும் அடைந்தவளாய்) ஆகா! அப்படியா! நிரம்ப சந்தோஷம்! பருத்தி துணியாகவே காய்த்ததுபோலாயிற்று. நீங்கள் மாத்திரம் என் பேரில் தயை வைத்து, அந்தப் பெண்ணை நான் அடையக்கூடிய மார்க்கத்தைக்

காட்டுவீர்களானால், அந்த அபாரமான உதவியை நான் ஒரு நாளும் மறக்கவேமாட்டேன். இந்த விஷயம் கொஞ்சமும் வெளியாகாமல், பரமரகசியமாகவே நான் மற்ற எல்லாக் காரியங்களையும் முடிக்கிறேன்.

மாசிலாமணிப் பிள்ளை :— (தணிவான குரலில் பேசத் தொடங்கி) அதெல்லாம் சரிதான். பணம் எப்போது கொடுக்கிறது? அது முதலில் வந்தால்தானே பெண்ணுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் உண்டாகும்.

ஹேமாபாயி :— பணத்தைப்பற்றிய கவலையே தேவையில்லை. அந்த விஷயத்தில் அவ்விடத்து அபிப்பிராயம் எப்படியோ அப்படியே மிகவும் லலிதமாகக் காரியத்தை முடித்துக்கொள்ளலாம். அந்தப் பெண் மாத்திரம் வருவதாக ஒப்புக்கொண்டு வருவாளானால், அவளை அழைத்துக் கொண்டுபோக நானே நேரில் ஒரு பெட்டி வண்டியோடு வந்து சேருகிறேன். பாதித் தொகையை, நான் என்னுடைய உத்தரவாதத்தின்மேல் அப்போதே கொடுத்துவிட்டுப் பெண்ணை அழைத்துக் கொண்டு போகிறேன். அவள் என்னுடைய ஜாகைக்கு வந்தவுடன், என்னுடைய உப்பரிகையில் வந்து ஆயத்தமாக இருக்கப்போகிற அந்தப் பிரபுவுக்கும் அவளுக்கும் நான் உடனே சந்திப்புச் செய்துவைக்கிறேன். அப்போது அவரே நேரில், மிகுதித் தொகையையும் கொடுத்துவிட்டு, அவளோடு பேசுவார். இந்த ஏற்பாடு நல்லதுதானே? இந்த மாதிரி செய்ய அவளுக்கு இஷ்டமிருக்குமல்லவா?

மாசிலாமணிப் பிள்ளை :— (சிறிது யோசனை செய்து) சரி; இந்த ஏற்பாடு ஒழுங்கானதாகத்தான் இருக்கிறது. அவள் இதை அநேகமாய் ஒப்புக்கொள்ளலாமென்று நம்புகிறேன். இந்த ஒப்பந்தம் முடிந்த மாதிரியாகவே வைத்துக்கொள். அவளை அழைத்துக் கொண்டுபோக சௌகரியமான நாள் எதுவென்று நாம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இன்றைக்கு என்ன கிழமை? சனிக்கிழமையல்லவா? இப்போது சாயுங்கால வேளையாகிவிட்டது. இன்றைய தினம் ராத்திரி நான் அவளைப் பார்க்கமுடியுமோ முடியாதோ. நாளைய தினம் நான் அவளை அவசியம் பார்க்கக்கூடும். அவளுடைய சமயம் பார்த்து, நான் அவளிடம் இந்த விஷயத்தை நாளையதினம் வெளியிட்டு, அவளுடைய சம்மதியைப் பெறுகிறேன். நாளையதினம் ராத்திரி அவள் வரமாட்டாள். திங்கள்கிழமை ராத்திரி எட்டு அல்லது ஒன்பது மணிக்கு அவள் வரத் தயாராக இருப்பாளென்று நான் நிச்

சயமாகச் சொல்லக்கூடும். அந்த மனிதருக்கு அது சௌகரியமான காலமாக இருக்குமோ என்னவோ அதை நீ அறிந்துகொண்டு சொன்னால், அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளலாம்.

ஹேமாபாயி :— அந்தப் பெண் எவ்விடத்திலிருக்கிறவளோ? அவளை அழைத்துக் கொண்டுபோக நான் எவ்விடத்துக்கு வண்டி கொண்டு வருகிறது? அதை முதலில் சொல்லுங்கள்.

மாசிலாமணிப் பிள்ளை :— உண்மையை உன்னிடத்தில் மறைப்பதில் உபயோக மொன்றுமில்லை. அந்தப் பெண் என்னுடைய சம்சாரத்துக்கு நிரம்பவும் அன்னியோன்னியமான சிநேகிதை. ஆனால், அவள் புருஷனுக்குள் இருப்பவள்; அது நினைவிலிருக்கட்டும். அந்தப் புருஷன் இப்போது இந்த ஊரிலில்லை. வெளியூருக்கு ஏதோ காரியார்த்தமாகப் போயிருக்கிறான். அவள் கொஞ்சம் தமாஷாக இருக்கக் கூடியவள்தான். ஆனால், காதும் காதும் வைத்ததுபோல, காரியத்தை மிகவும் ரகசியமாகவே நடத்திக் கொள்வாள்.

ஹேமாபாயி :— (இனிமையாக நகைத்து) அவள் எப்படிப் பட்டவளாகவாவது இருக்கட்டும். அந்த விவரத்தையெல்லாம் நான் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை. நான் யார் பொருட்டு இந்த முயற்சி செய்கிறேனோ அந்த தனிகர் அந்தப் பெண்ணின் பெயர் முதலிய எந்த விவரத்தையும் கேட்கப் போகிறதில்லை. ஆனால், அந்தப் பெண் அவருடைய மனசுக்குப் பிடித்தவளாக இருந்து, அவர் அவளை மறுபடியும் பார்க்க ஆசைப்பட்டால், அவர் தம்முடைய பெயரை வேண்டுமானால் அவளிடம் வெளியிடலாம். இது அவருடைய இஷ்டத்தைப் பொருத்தது. திங்கள்கிழமை ராத்திரி நான் வருவதைப் பற்றித் தடையில்லை. நான் எவ்விடத்துக்கு வருகிறதென்பதைச் சொல்லுங்கள்.

மாசிலாமணிப் பிள்ளை :— நீ என்ன விதமான வண்டி கொண்டு வரப் போகிறாய்?

ஹேமாபாயி :— நன்றாக மூடி இருக்கும் பெட்டிவண்டி யொன்று கொண்டு வருகிறேன்.

மாசிலாமணிப் பிள்ளை :— சரி; திங்கள்கிழமை சரியாக எட்டு மணிக்கு நீ பெட்டிவண்டியோடு வந்து சேர். ஆனால் இந்த ஊருக்குள்ளேயே நீ வரவேண்டாம். வீடுகள் ஆரம்பமாகும் இடத்துக்குக் கொஞ்சதூரத்தில் சமுத்திரமென்று பெயர்கொண்ட ஏரி இருக்கிற

தல்லவா? அதன் கரையண்டை வண்டியை நிறுத்திக்கொண் டிரு. நான் அந்தப் பெண்ணேச் சித்தமாக அதே காலத்தில் கொண்டுவந்து வண்டியில் ஏற்றிவிட்டு அனுப்புகிறேன்—என்ருன்.

ஹேமாபாயி அந்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்டவளாய் அவரிடம் செலவு பெற்றுக்கொண்டு வெளியில் போய்விட்டாள்.

21-வது அதிகாரம்
கொள்ளேயும் - கொலேயும்

ஹேமாபாயியும் மாசிலாமணிப் பிள்ளேயும் சனிக்கிழமை தினம் மாலேயில் மேலே குறிக்கப்பட்டபடி சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த அதே சமயத்தில் அம்மன்பேட்டையில், கூத்தாடி அன்னத்தம்மாள் எவரும் அறியாதபடி தனது மாளிகையின் கொல்லேப் பக்கத்துக் கதவைத் திறந்துகொண்டு வெளியில் போய், தோட்டத்துக் கதவைத் திறந்துகொண்டு அப்பால் சென்று, அவ்விடத்தில் குறுக்கிட்ட சிறிய வாய்க்காலேக் கடந்து, வயல்களினிடையில் போன ஒற்றையடிப் பாதையின் வழியாகக் கொஞ்சதூரம் நடந்துபோய், அவ்விடத்திலிருந்த பாழ் மண்டபத்தை அடைந்தாள். அப்போது மாலே மயங்கும் சமயமாக இருந்தது. அந்த மண்டபமிருந்த இடம் அந்த ஊருக்கு வெளியில் ஒதுப்புறமான ஒரு மூலேயாதலால், அவ்விடத்தில் மனிதரது நடமாட்டமே காணப்படாதிருந்தது. அப்படிப்பட்ட இடத்திற்குப் போய்ச் சேர்ந்த அன்னத்தம்மாள் அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தாள்; அதன் பிறகு சிறிதுநேரம் தயங்கி நின்றபின் மண்டபத்துக்கருகில் நெருங்கித் தலேயை நீட்டி அதற்குள் எட்டிப் பார்த்தாள். அந்தமண்டபம் இரண்டிரண்டு ஆட்கள் சுற்றிப் பிடிக்கத்தகுந்த பெரும் பெரும் கருங்கல் கம்பங்களுடையதாக இருந்ததன்றி அதன் ஒரு பக்கத்தில் பெருத்த திண்ணேயையும் மறைவுச் சுவரையும் உடையதாக இருந்தது. அந்த மறைவிற்குள் அவள் தனது பார்வையைச் செலுத்தியபோது, அங்கிருந்து சிவசிதம்பரம்! நடராஜா! என்ற ஒரு குரல் உண்டாயிற்று. அடுத்த நிமிஷம் ஒரு பரதேசி அவ்விடத்திலிருந்து மெதுவாக வெளிப்பட்டான். அவனது தலே முகம் முதலிய இடங்களிலெல்லாம் கருப்பான உரோமம் காடுபோல அடர்ந்து உப்புசமாக இருந்தது. தலேயில் செம்பட்டை நிறமுள்ள சடைகள் தொங்கிக்

கொண்டிருந்தன. அவர் தமது உடம்பு முழுதையும் காஷாய வஸ்திரத்தால் மூடிக்கொண்டிருந்தார். கழுத்திலும் கைகளிலும் உருத்திராக்ஷ மாலைகள் தென்பட்டன. அவரது ஒரு கையில் ஒரு திருவோடும், இன்னொரு கையில் முறுக்கலான கருத்த தடியொன்றும் காணப்பட்டன. அவ்வாறு காணப்பட்ட பரதேசியைக் கண்ட அன்னத்தம்மாள் ஒருவித ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தவளாய் அவரை நோக்கிப் புன்னகை செய்து "சுவாமிகளுடைய இருப்பிடம் எதுவோ? தாங்கள் இந்தப் பாழும் மண்டபத்தில்தானா இருக்கவேண்டும். இவ்விடத்தில் ராத்திரியில் பாம்பு முதலிய துஷ்ட ஜெந்துக்கள் வந்து அடையுமே? ஊருக்குள் இருக்கும் சத்திரத்தில் வந்து தங்கக்கூடாதா?" என்று சங்கேதமாகப் பேசினாள்.

அவளது சொற்களைக் கேட்ட பரதேசி "இல்லை யம்மணீ! எங்களைப் போன்ற உண்மைப் பரதேசிகள் ஊருக்குள்ளிருப்பது தகாது. நியாயமாக நாங்களெல்லோரும் நிர்மாநுஷ்யமான காடுகளிலேதான் இருக்கவேண்டும். உண்மையில் உலகைத் துறக்காமல் வெளிவேஷம் போடும் பரதேசிகள்தான் ஊருக்குள் கிடந்து கிரகஸ்தர்களுக்குப் பாரமாக இருந்து, சோற்றுக்கும் துணிக்கும் அவர்களை வதைப்பார்கள்," என்றார்.

அதைக் கேட்ட அன்னத்தம்மாள் ஒருவித ஐயங்கொண்டு "அப்படியா! சரி; இப்படிப்பட்ட உண்மையான பரதேசியின் தரிசனம் எனக்குக் கிடைத்ததும் ஓர் அரிய பாக்கியந்தான்," என்றாள்.

உடனே பரதேசி "நல்லது. நான் உண்மையான பரதேசியோ, அல்லது, வேறே யாரோ என்று உங்களுடைய மனசில் ஒரு சந்தேகமுண்டாகி இருப்பதாக என் ஞானதிருஷ்டி எனக்குக் காட்டுகிறது. நீங்கள் யார் என்பது போன்ற உங்களுடைய வரலாற்றைச் சொல்லி, நான் உண்மையான பரதேசி யென்பதை நான் ருஜுப்படுத்துகிறேன். அதற்கு மேலாவது நம்பிக்கைப் படுமல்லவா! நீங்களிருப்பது அம்மன்பேட்டை; உங்களுடைய பெயர் அன்னத்தம்மாளென்பது. இந்த ஊரிலுள்ள எல்லாரையும் விட நீங்கள் அதிக ஆஸ்தியுடையவர்கள். இன்றைய தினம் காலையில் கூட உங்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதம் தஞ்சையிலுள்ள துப்பறியும் போலீஸ் இன்ஸ்பெக்டரால் எழுதப்பட்டது. உங்களுக்கு ஒரு பெருத்த அபாயம் நேரப்போகிறதாகையால், நீங்கள் இன்று சாயுங்காலம் இந்த மண்டபத்

தண்டை தனியாக வந்தால், அவர் ஒரு மனிதனை அனுப்பி, அந்த அபாயம் இன்னதென்பதை ரகசியமாகத் தெரிவிக்கச் செய்கிறேனென்று எழுதி இருக்கிறார். அதற்காகவே நீங்கள் இப்போது இங்கே வந்திருக்கிறீர்கள். அவ்வளவுதான் சங்கதி. நான் உண்மையான பரதேசியென்பது இப்போது நிச்சயப்படுகிறதல்லவா?'' என்றார்.

அவரது சொற்களைக் கேட்டு அளவற்ற ஆச்சரியமும் திகைப்பும் ஐயமும் கொண்ட அன்னத்தம்மாள் சிறிதுநேரம் தயங்கி "சரி; சுவாமிகள் சொன்ன வரலாறெல்லாம் உண்மையானதுதான். ஆனால், சுவாமிகள் உண்மையான பரதேசியாக இருந்தாலும் இருக்கலாம்; இன்ஸ்பெக்டரால் அனுப்பப்பட்ட மனிதராக இருந்தாலும் இருக்கலாம். ஏனென்றால், அவரால் அனுப்பப்படும் மனிதனுக்கு ஞான திருஷ்டியின் உதவியில்லாமலேயே இந்த விவரமெல்லாம் தெரியுமல்லவா?'' என்றாள்.

பரதேசி :— ஆம். உண்மைதான்; நான் யாராக இருந்தாலென்ன? உங்களுக்கு வேண்டியது, இன்று என்ன அபாயம் நேரப்போகிறதென்ற விவரந்தானே. அதை நானே தெரிவித்து விடுகிறேன். நான் சொல்வது ஒருவேளை பொய்யாக இருக்குமோ வென்று சந்தேகிக்க வேண்டாம். இது வரையில் நடந்த விஷயத்தை நான் எடுத்து உண்மையாகச் சொன்னதுபோல இனி நடக்கப்போகும் விஷயமும் உண்மையாகவே நடக்கக் கூடியதென்று நீங்கள் நிச்சயமாக நம்புங்கள். இன்று காலையில் உங்களுக்கு வந்த கடிதத்தில் முக்கியமான இன்னொரு விஷயமிருந்ததே. அந்தப்படி நடந்து கொண்டீர்களா? அதாவது, அந்தக் கடிதம் வந்ததென்பதையும், நீங்கள் இப்போது இங்கே தனியாக வந்து ஒரு மனிதரோடு பேசப் போகிறீர்கள் என்பதையும், உங்களைத் தவிர வேறே யாரும் அறிந்து கொள்ளாதபடி நிரம்பவும் எச்சரிப்பாக நடந்துகொள்ள வேண்டுமென்று இன்ஸ்பெக்டர் எழுதியிருந்தாரே. அதுபோல நடந்து கொண்டீர்களல்லவா?

அன்னம் :— ஓ! அப்படியே நடந்து கொண்டேன். என்னுடைய சொந்தப் பெண்களுக்குக் கூட இந்த விஷயம் தெரியாது.

பரதேசி :— சரி; நல்லது; நான் இப்போது சொல்லப்போகும் செய்தியைக் கேட்டு நீங்கள் திகில்கொண்டு தவிக்க வேண்டாம். ஏனென்றால், உங்களுக்கு இன்று நேரப்போகும் பெருத்த அபாயத்தி

லிருந்து உங்களைக் காப்பாற்றுவதற்காக அந்த இன்ஸ்பெக்டர் தக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். அந்த சம்பந்தமாக நீங்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதை உங்களுக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டு வருவதற்காகவே, உங்களை அவர் இங்கே வரச்செய்தார். உங்கள் வீட்டின் அடியில் சுரங்கத்தில் நீங்கள் அபரிமிதமான சொத்துகளை மறைத்து வைத்திருக்கிறீர்களல்லவா ?

அன்னம் :— (மிகுந்த பிரமிப்பும் திகிலுமடைந்து) ஆம் ; உண்மைதான். நான் சுரங்கத்தில் என் சொத்துகளையெல்லாம் வைத்திருப்பது என்னைத் தவிர வேறே யாருக்குமே தெரியாதே. அப்படி இருக்க, அது சம்பந்தமாக எனக்கு என்ன விதமான அபாயம் நேரப் போகிறது ? எத்தனையோ தலை முறையாக நாங்கள் பாடுபட்டுத் தேடி வைத்துக் காப்பாற்றிவரும் அந்த சொத்தை யாராவது அபகரிக்க நினைத்திருக்கிறார்களா ?

பரதேசி :— ஆம். இன்று ராத்திரி சரியாகப் பதினைந்து நாழிகைக்கு, உங்களுடைய வீட்டிற்குள் திருடர்கள் புகுந்து உங்களையெல்லாம் கொன்று போட்டுவிட்டு, சுரங்கத்திற்குள் நுழைந்து எல்லாப் பொருள்களையும் கொள்ளையடித்துக் கொண்டுபோக எத்தனித்திருக்கிறார்கள்.

அன்னம் :— (கட்டிலடங்காத் திகிலும் நடுக்கமு மடைந்து கையைப் பிசைந்து கொண்டு) ஐயோ ! நாங்கள் என்ன செய்யப்போகிறோம். இந்த பயங்கரமான அபாயத்திலிருந்து எப்படித் தப்பிப் பிழைக்கப் போகிறோம்.

பரதேசி :— அம்மா ! திருடர்கள் கட்டாயமாக இன்றைய தினம் உங்களுடைய வீட்டுக்குள் வந்துதான் தீருவார்கள். ஆனால், அந்த இன்ஸ்பெக்டருடைய விருப்பப்படியும் புத்திமதிப்படியும் நீங்கள் நடந்து கொண்டால், உங்களுக்கு எவ்விதக் கெடுதலும் நேராது. உங்களுடைய சொத்துகளில் ஒரு துரும்பைக் கூட அந்தத் திருடர் எடுத்துக்கொண்டு போக முடியாது.

அன்னம் :— நான் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது எனக்குத் தெரிந்தால் நான் அதுபோலவே நடந்துகொள்ளுகிறேன்.

பரதேசி :— இந்தத் திருட்டுக்கு மூலாதாரமான உள்ளாள் உங்கள் வீட்டிலேயே இருந்து உங்களுடைய சோற்றையே தின்று

வளர்ந்து வருகிறான். அவனைப் போன்ற பரம அயோக்கியன் வேறு எவனுமே இருக்க மாட்டான். அவனுடைய பெயர் கந்தன்.

அன்னம் :— ஆ! என்ன ஆச்சரியம்! எங்கள் வீட்டு வேலைக் காரக் கந்தனா இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யப்போகிறான்! அவன் பரமயோக்கியன்போல நடந்து வருகிறானே!

பரதேசி :— அப்படி யோக்கியனாக நடந்தால்தானே அவனைப் பற்றிச் சந்தேகப்படமாட்டீர்கள். இன்றைய தினம் ராத்திரி நடக்கப் போகும் சம்பவங்களிலிருந்து, அவன் எப்படிப்பட்ட மனிதனென் பதை நீங்கள் நேரிலேயே காண்பீர்கள். நீங்கள் இன்று என்ன செய்ய வேண்டுமென்றால், உங்களுடைய சாப்பாட்டை முடித்துக் கொண்டு வேலைக்காரர்களை யெல்லாம் வழக்கம்போல வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள். அதற்கு ராத்திரி சுமார் பத்து மணி வரையில் பிடிக்குமென்று நினைக்கிறேன். இன்று திருட்டு நடக்கப்போவதைப் பற்றி உங்களுக்குச் செய்தி கிடைத்திருக்கிற தென்பதையே உங் களுடைய வேலைக்காரர் அறிந்து கொள்ளாதபடி வெகு ஜாக்கிரதை யாக நடந்து கொள்ளுங்கள். எல்லோரையும் அனுப்பிய பிறகு, நீங் கள் மெதுவாக எழுந்து வந்து, கொல்லைப்பக்கத்துக் கதவின் உள்தாழ்ப் பாளை விலக்கி, கதவை வெறுமையாக மூடியபடி வைத்துவிட்டுப் போய் உங்களுடைய பெண்களையும் அழைத்துக்கொண்டு பந்தோபஸ்தான ஓர் அறைக்குள் போய் உள் தாழ்ப்பாளை மாட்டிக்கொண்டு ஜாக்கிரதை யாக இருங்கள். அவ்வளவுதான் நீங்கள் செய்ய வேண்டியது. மற்ற சங்கதிகளையெல்லாம், அந்த இன்ஸ்பெக்டர் பார்த்துக்கொள்வார். இவ் வளவுதான் சங்கதி. இனி நீங்கள் வீட்டுக்குப்போகலாம். அந்த இன்ஸ் பெக்டருடைய ஆளை நீங்கள் பார்க்க வேண்டுமென்ற அவசியமில்லை. அவன் இனி இங்கே வருவானானால், நான் அவனிடம் பேசி, நீங்கள் வந்ததையும், நான் என்னுடைய திரிகாலக் ஞானத்தினால் எல்லா சங்கதிகளையும் உணர்ந்து உங்களுக்குச் சொல்லி உங்களை வீட்டுக்கு அனுப்பி வைத்ததையும் சொல்லி, அவனைத் திருப்பி அனுப்பிவிடு கிறேன். நீங்கள் அதிகமாக இவ்விடம் தாமதித்து நின்றால், கந்தன் ஒரு வேளை உங்களைக் காணுவான்; இங்கே நீங்கள் எதற்காக வந்தீர் களென்பதைப்பற்றி சந்தேகப்பட்டு எச்சரிக்கை யடைவான். ஆகை யால் நீங்கள் உடனே புறப்பட்டுப் போய்விடுங்கள்—என்று சொன்னார்.

அந்த வரலாற்றைக் கேட்டு மிகுந்த கலக்கமும் கலவரமு மடைந்த அன்னத்தம்மாள் அந்தப் பரதேசி வெளியிட்ட வரலாற் றைக் கேட்டு, இன்ஸ்பெகடராது ஆளைச் சந்திக்காமல் போய்விட்டால், அதனால் தனக்கு ஏதேனும் துன்பம் நேருமோவென்று கவலைகொண் டாள். ஆனால், அவர் தனக்குக் கடிதம் வந்தது முதல் சகலமான வரலாற்றையும் பொருத்தமாகச் சொன்னதிலிருந்து, அவரே இன்ஸ் பெக்டரைச் சேர்ந்த மனிதரென்ற ஓர் எண்ணம் அவளது மனதில் எழுந்து உறுதிப்பட்டுக் கொண்டிருந்தது. அதிக நேரம் தான் அவ் விடத்தில் நிற்பது தவறென்பதும் மனதில் பட்டது. ஆகவே, அந் தப் பரதேசியை வணங்கி உத்தரவு பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு விரைவாக நடந்து முன் வந்த வழியாகவே நடந்து கால் நாழிகை நேரத்தில் தனது வீட்டை யடைந்தாள். தான் பாழ் மண்டபத்திற்குப் போய்விட்டு வந்த விஷயத்தைக் கந்தன் முதலிய எவரேனும் அறிந்து கொண்டிருப்பார்களோ வென்ற சம்சயத்தி னால் தூண்டப்பட்டவளாய் அவர்களோடு சந்தோஷமாகவும் சாதா ரணமாகவும் பேசிப் பார்த்துத் தான் அவ்வாறு சம்சயப்பட ஏது வில்லையென்று நிர்ணயித்துக்கொண்டு, ஏதோ காரியத்தைக் கவனிப் பவள்போலத் தனது பொழுதைப் போக்கிவந்தாள்.

இரவும் வந்தது. மணி, எட்டு, ஒன்பது, பத்தும் ஆயிற்று. எல்லோருக்கும் போஜனம் முடிவடைந்தது. வேலைக்காரர்கள் தத்தம் வீடு போய்ச் சேர்ந்தனர். கந்தன் எப்போதும் வாசல் திண்ணையில் படுத்துக் கொள்வது வழக்கமாதலால் அவன் அங்கே போய்ப் படுத்துக் கொண்டானென்பதை நிச்சயித்துக் கொண்டாள். முன் பக்கத்து வாசற் கதவு வழக்கப்படி உட்புறத்தில் தாளிடப்பட்டது. பரதேசியின் ஆக்ஞைப்படி அவள் கொல்லைப்பக்கத்துக் கதவை உட்புறம் தாளிடா மல் வெறுமையாக மூடி வைத்துவிட்டுத் தனது புதல்வியர் நால்வரை யும் அழைத்துக் கொண்டு, நடுமத்தியிலிருந்த பந்தோபஸ்தான ஓர் அறைக்குள்போய் உட்புறத்தில் தாளிட்டுக் கொண்டவளாய் உட் கார்ந்து கொண்டாள். அப்போது அவளது மனதும், அவளது பெண் களினது மனமும் பட்டபாட்டையும் அடைந்த ஆவலையும் வேதனையை யும் விவரித்துச் சொல்வது மகா அசாத்தியமான காரியமென்றே சொல்லவேண்டும். பெருத்த திகிலும் நடுக்கமும் தவிப்பும் அவர்க ளது மனத்தைப் புண்படுத்தி தேகத்தை நரகவேதனைக்கு ஆளாக்கிக்

கொண்டிருந்தன. இன்னதுதான் நடக்கப்போகிறதென்று நிச்சயமாக நம்பமாட்டாமல், அவர்கள் நெருப்பிலிருப்பவர்கள் போலத் தவித்திருந்தனர். பரமயோக்கியனாக நடந்துவரும் கந்தன் அப்படிப்பட்ட அயோக்கியத்தனத்தில் தலையிடுவானா என்ற சந்தேகமே பெரிதாக எழுந்து உலப்பத்தொடங்கியது. அப்படி உண்மையிலேயே அவன் உளவாக இருந்து திருடர்களை வரச் செய்திருந்தாலும் அந்த ரகசியம் இன்ஸ்பெக்டருக்குத் தெரிந்திருக்குமா என்ற எண்ணமும் தோன்றியது. ஒரு கால் வேறே யாராவது தங்கள் வீட்டில் கொள்ளையடிக்க எண்ணி, அதற்கு அநுகூலமாக, வேலைக்காரர்களையெல்லாம் அனுப்பி விட்டுக் கொல்லைக் கதவைத் திறந்து வைத்துவிட்டுத் தங்களையும் ஓர் அறைக்குள்போய் ஒளிந்து கொண்டிருக்கச் செய்து விட்டால், திருடர்கள் சுலபமாக உள்ளே புகுந்து எவ்விதப் பூசலுமின்றி, எல்லாப் பொருட்களையும் அடித்துக் கொண்டுபோகலாமென்ற எண்ணத்தோடு, திருடர்களே தங்களுக்கு நன்மை செய்கிறவர்கள்போல நடித்து இன்ஸ்பெக்டர் எழுதியதுபோல ஒரு கடிதமும் எழுதிவிட்டு, பரதேசி வேஷம்போட்டு ஒருவனை அனுப்பி இருப்பார்களோ என்ற ஒரு முக்கியமான சந்தேகம்தோன்றி அவர்களது மனதை சித்திர வேதனைக்கு உள்ளாக்கியது. அந்தப் பரதேசியின் சொல்லை வேதவாக்கியமாக நம்பி அப்படியே நடந்து கொண்டிருந்தாலும், முன்னெச்சரிக்கையாகச் சில ஆட்களைத் தயாரித்துத் தங்களுக்குப் பாதுகாப்பாக வைத்திருக்காமல் போனோமே என்ற எண்ணமும் தோன்றி மனதைப் புண்படுத்தியது. அவ்வாறு அவர்கள் சஞ்சலக் கடலி லாழ்ந்து மனநொந்து ஆவலே வடிவாக மாறி உட்கார்ந்திருக்கப் பொழுதும் போய்க்கொண்டிருந்தது. அவர்களது திகிலும், நடுக்கமும், குழப்பமும், வேதனையும் மலைபோலப் பெருகிக்கொண்டே போயின.

அந்த நிலைமையில் மணி பதினொன்றாயிற்று. அவர்களிருந்த அறைக்குப் பக்கத்தில், வீட்டுக்குள் மனிதர்கள் நடந்ததனால் உண்டான காலடி யோசை யுண்டாயிற்று. அதைக் கேட்டவுடனே அன்னத்தம்மாள் முதலியோரது உடம்புகளெல்லாம் கரைகடந்த கிலியினால் கிடுகிடென்று ஆடத் தொடங்கின. வியர்வை வெள்ளம் குபீரென்று கிளம்பி அக்கினிக் குழம்புபோல வழிந்தோடுகிறது. மயிர் சிலிர்த்து விறைத்து நிற்கிறது. எழுந்து நிற்கக் கால் எழமாட்டேனென்கிறது. வாயைத் திறக்கமாட்டாமல் தொண்டை யடைத்துப்

போய் விட்டது. அப்படிப்பட்ட பரமவேதனையான நிலைமையிலிருந்த அவர்களுள் அன்னத்தம்மாள் மெதுவாக எழுந்து தனக்குப் பக்கத்தி லிருந்த ஜன்னலண்டை நின்று, மூடப்பட்டிருந்த அதன் கதவிடுக்கில் வலது கண்ணை வைத்து, அப்புறம் என்ன நடக்கிறதென்பதை கவ னித்தாள். வீட்டுக்குள் மங்கலாக ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்த தாகையால், வெளியில் யார் இருந்தார்க ளென்பதும், அவர்கள் என்ன செய்தார்க ளென்பதும் அவளுக்கு உடனே தெரிந்தன. இருபது இருபத்தைந்து போலீஸ் ஜெவான்கள் கத்தி துப்பாக்கிகளை உபயோ கிக்க ஆயத்தமாக ஏந்திய கைகளோடு சந்தடிசெய்யாமல் முட்டுக் கல் களைப்போல அப்படியப்படியே உட்கார்ந்திருந்ததைக் காண, அது காறும் அவளது மனதை அழுத்திக்கொண்டிருந்த திகிலாகிய பெருஞ் சுமை ஒரு நிமிஷத்தில் விலகியது. அதுகாறும் தப்ப இயலாத மகா அபாயமான நிலைமையிலிருந்து தப்பி பந்தோபஸ்தான நிலைமைக்கு வந்து விட்டவள்போல, அவள் முற்றிலும் மனோதிட மடைந்ததன்றி, உடனே கீழே குனிந்து விஷயத்தை இரண்டொரு வார்த்தையில் சுருக்கமாகத் தனது பெண்களிடம் தெரிவிக்க, உடனே அவர்களும் துணிவும் குதூகலமுமடைந்தவர்களாய், மாறி மாறி எழுந்து நின்று ஜன்னலின் கதவிடுக்கின் வழியாக வெளியில் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியடைந்து, அதன் பிறகு என்ன நடக்குமோ வென் பதை அறிய ஆவல் கொண்டவர்களாய்த் துடி துடித்துத் தவித் திருந்தனர். அவ்வாறு வெளியில் வந்திருந்த ஜெவான்களினிடையில் இன்ஸ்பெக்டரது உடைகள் தரித்திருந்த கம்பீரமான தோற்றமுள்ள ஒருவரும் காணப்பட்டார். அவரது முகத்தை அன்னத்தம்மாள் உற்று நோக்கினாள். அவள் அதற்கு முன் அந்த முகத்தை எங்கேயோ பார்த்திருப்பதாக ஒரு நினைவுண்டாயிற்று. அவள் இமை கொட்டாமல் சிறிது நேரம் அவரது முகத்தையே உற்றுநோக்கிக் கொண்டிருக்க, அவர் தமது தலையிலிருந்து வழிந்த வியர்வையைத் துடைப்பதற்காகத் தமது தலைப்பாகையைக் கழற்றித் தரையில் வைத்துவிட்டு சட்டைப் பையிலிருந்த முகந்துடைக்கும் சவுக்கத்தை எடுத்துத் தலையைத் துடைத்துக் கொண்டார். தான் அன்று சாயுங்காலம் பாழ் மண்டபத் தில் கண்டு பேசிய பரதேசியின் முகத்துக்கும் அந்த இன்ஸ்பெக்டரது முகத்துக்கும் நெருங்கிய ஒற்றுமை இருந்ததாக ஒரு நினைவுண் டாயிற்று. ஒரு வேளை அந்த இன்ஸ்பெக்டரே, தம்மை யாராகிலும்

பார்த்துவிடப் போகிறார்களோ என்ற நினைவினால் பரதேசியைப்போல உருமாறி வந்திருப்பாரோ என்ற நினைவு தோன்றியது. மேலும் சிறிது நேரம் வரையில் அவரது முகத்தை அவள் பார்த்திருக்க, அந்த சந்தேகமே உண்மையாக இருக்கவேண்டுமென்ற நிச்சயம் ஏற்படத் தொடங்கியது. தங்களது விஷயத்தில் அவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டு உழைப்பவரான அவர் அன்றையதினம் தங்களுக்கு எவ்வித அபாயமும் நேராமல் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையும் மனதிடமும் உண்டாயினவானாலும், முரட்டு மனிதர்களான கொள்ளைக்காரர்கள் எப்படிப்பட்ட பிரமாதமான ஏற்பாடுகளோடு வருவார்களோ வென்றும், போலீசாரால் அவர்களை வெல்ல முடியுமோ முடியாதோ வென்றும் பலவாறு எண்ணமிட்டவளா யிருந்த அன்னத்தம்மாள், மாறி மாறி இன்பமும் துன்பமும், தைரியமும் மனத்தளர்வும் அடைந்து நிரம்பவும் பரிதாபகரமான நிலைமையிலிருந்து வந்தாள்.

அவர்களது நிலைமை அங்ஙனமிருக்க, வீட்டுத் திண்ணையில் வழக்கம்போலப் படுத்திருந்த கந்தன் சரியாகப் பதினொன்றரை மணிக்கு மெதுவாக எழுந்து வாசலுக்குச் சென்றான். தனது எஜமானியான அன்னத்தம்மாள் சகலமான ரகசியங்களையும் அறிந்துகொண்டு விட்டாளென்பதைப் பற்றியும், போலீஸ் இன்ஸ்பெக்டர் தமது பரிவாரங்களோடு ஆயுதபாணிகளாக வந்து அதிக ஜாக்கிரதையாக திருடர்களது வருகையை எதிர்பார்த்திருக்கிறார்களென்பதைப்பற்றியும் சிறிதும் சந்தேகியாத கந்தன் சொற்ப நேரத்தில் கட்டாரித்தேவனும், அவனது ஆட்களும் சேர்ந்து அன்னத்தம்மாளினது ஐசுவரியத்தை யெல்லாம் எளிதில் அபகரித்துக் கொண்டுபோய்ப் பங்கிட்டுக் கொள்ளலாமென்று நினைத்துக் கட்டிலடங்காக் குதூகலமும் மனவெழுச்சியுமடைந்து, தனது கூட்டாளிகள் வந்திருக்கிறார்களோவென்று மிகுந்த ஆவலோடு அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு நின்றான். சரியாகப் பதினைந்து நாழிகை சமயமாயிற்று. புற்றிலிருந்து ஈசல்கள் புறப்படுவதுபோலப் பல முரட்டு மனிதர்கள் அந்தத் தெருவின் பல விடங்களிலிருந்தும் தோன்றி சந்தடிசெய்யாமல் நடந்து அன்னத்தம்மாளினது மாளிகை வாசலையடைந்து திண்ணையின்மேல் ஏறினர். அவ்வாறு வந்த மனிதர்களெல்லோரும் பனங்கட்டைகளைப்போலக் கருத்துத் தடித்து நீண்ட பயங்கரமான சரீரங்களை உடையவர்களாகக் காணப்பட்டனர். ஒவ்வொருவனும் இடுப்பில் ஒட்டுச்சலடமணிந்து கையில் பாளை சீவும்

நீண்ட பிச்சாங்கத்தி யொன்றையும், வலுவான பச்சைப் புளியந்தடி யொன்றையு வைத்திருந்தான். அவர்களினிடையில், மற்றவர்களைக் காட்டிலும் பன்மடங்கு பயங்கரமாகவும், பைசாச கணங்களின் சேனாதிபதிபோலவும் காணப்பட்ட கொடிய அரக்கனை கட்டாரித்தேவன், தனக்கருகில் வந்து நின்ற கந்தனைப் பார்த்து "என்னடாப்பா கந்தா! அன்னத்தம்மாள் இதைப்பற்றி சந்தேகப்படாமல் இருக்கிறாளல்லவா?" என்று தணிவான குரலில் வினவினான்.

கந்தன் "அவள் ஏன் சந்தேகப்படப்போகிறாள்? வழக்கம்போல சுகமாகத் தூங்கிக்கொண்டிருக்கிறாள். அவளையும் அவளுடைய மக்களையும் கொன்று போடுவதை விட வாயில் துணியை அடைத்து கட்டி ஓர் அறைக்குள் உருட்டிவிட்டு நம்முடைய காரியத்தை சுலபத்தில் முடித்துக்கொண்டு போவதே நல்லது. ஏனென்றால், இவர்கள் நம்முடைய மகாராஜாவுக்கு நிரம்பவும் விருப்பமானவர்கள்; இவர்களுடைய சொத்துகள் மாத்திரம் களவு போனால் இளவரசர் அதைப்பற்றி அவ்வளவாக விசனப்படாமல் இன்னமும் ஏராளமான பொருளைக் கொடுத்து விடுவார். இவர்களைக் கொன்றுவிட்டால், அவர் அதை சும்மா விடமாட்டார். போலீசாரை யெல்லாம் விட்டு, எப்படியாவது பிரயாசைப்பட்டு நம்மையெல்லாம் பிடித்துவிடச் செய்வார். அதற்கு நாம் ஏன் இடம் கொடுக்கவேண்டும். நமக்கு வேண்டியது இவர்களுடைய சொத்தேயன்றி இவர்களுடைய உயிரல்ல," என்றான்.

கட்டாரித் தேவன் "சரி; உன்னிஷ்டப்படியே செய்வோம் நாம் இவர்களுடைய பணத்தை எடுத்துக் கொண்டுபோக முடியாமல், இவர்கள் ஏதாவது இடைஞ்சல் செய்தால் அப்போது நாம் தாட்சணியம் பாராமல் இவர்களுடைய உயிரை வேண்டுமானாலும் எடுத்துவிடத்தான் நேரும். அதிருக்கட்டும். கதவு உட்புறத்தில் தாளிடப்பட்டிருக்கிறதோ, பூட்டப்பட்டிருக்கிறதோ? யாராவது ஒருவன் ஓட்டின்மேலேறி உள்ளே இறங்கிவந்து தாழ்ப்பாளைத் திறந்துவிடச்செய்யலாமா, அல்லது, வெளியிலிருந்தபடியே கன்னக்கோலால் துளைபோட்டு தாழ்ப்பாளைத் திறக்கச் செய்யலாமா?" என்றான்.

கந்தன் "துளைபோட்டுத் திறப்பதே நல்லது. மேலே ஏறி உள்ளே வந்து திறந்தால், என் மேல் சந்தேகத்துக்கு இடமுண்டாகும். ஒரு வேளை நான் உள்ளே இருந்து கதவைத் திறந்து விட்டிருப்பேனோ என்ற எண்ணம் உண்டானாலும் உண்டாகலாம்," என்றான்.

உடனே கட்டாரித்தேவன் தனது கையிலிருந்த கன்னக்கோலைத் தாழ்ப்பாளிருந்த இடத்தண்டை கொடுத்து இரண்டு மூன்று திருகுத் திருக, அவ்விடத்திலிருந்த சுவர் அப்படியே பிய்த்துக்கொண்டது. அவ்வாறு பெயர்ந்த கட்டியை அவன் எடுத்து மெதுவாகத் தரையில் வைத்துவிட்டு, அவ்விடத்தில் உண்டான இடுக்கில் கையை நுழைத்து உள் புறத்திலிருந்த தாழ்ப்பாளை விலக்கிக் கதவை மெதுவாகத் திறந்து வைத்தான். பிறகு அவன் அவ்விடத்திலிருந்த தனது ஆட்களில் சுமார் பதினைந்து பேர்களை வலி அந்த வீட்டைச்சுற்றிக் காவல் காத்து நிற்கச் செய்ததன்றி, வீட்டின் உட்புறத்தில் ஆண் பிள்ளைகள் எவரும் இல்லையென்ற நம்பிக்கையினால் துணிவடைந்து, தன்னோடு வேறே நான்கு ஆட்களையும் கந்தனையும் மாத்திரம், அழைத்துக் கொண்டு உள்ளே புகுந்தான். அந்த மாளிகை மூன்று கட்டுகளை உடையதாகையால், அவர்கள் முன் கட்டைக் கடந்து, நடுக்கட்டுக்குள் போய், அவ்விடத்தில் இருந்த ஓர் அறைக்குள் நுழைந்து, பூமியில் மூடப்பட்டிருந்த ஓர் இரும்புக் கதவைத் தூக்க முயன்று கொண்டிருந்த சமயத்தில் முதல் கட்டிலும், மூன்றாவது கட்டிலும் இரண்டு பாகமாகப் பிரிந்து மறைந்து கொண்டிருந்த போலீஸார் குபீரென்று கிளம்பிவந்து திருடர்களைச் சூழ்ந்து கொண்டனர். அறையின் வாசலிலிருந்த கந்தன் திடீரென்று தோன்றிய செந்தலைப்புலிகளைக் கண்டு திடுக்கிட்டுத் திகிலும், குலை நடுக்கமுமடைந்து பிரமித்து நிற்க, அவ்விடத்தில் வந்த இன்ஸ்பெக்டர் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கந்தனைப் பிடித்துக்கொண்டார். அப்போது சுரங்கக் கதவைத் தூக்கி நிமிர்த்த எத்தனித்துக் கொண்டிருந்த கட்டாரித்தேவனும் அவனது ஆட்களும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்துப் போலீசார் வந்திருப்பதைக் கண்டு கொண்டனர். உடனே கட்டாரித்தேவன் தனது கையிலிருந்த பளபளப்பான பிச்சாங்கத்தியை ஓங்கிக்கொண்டு குபீரென்று இன்ஸ்பெக்டரை நோக்கிப் பாய்ந்து, அவரது கழுத்தைப் பார்த்து ஒரே வீச்சாக வீச, அதை உணர்ந்த இன்ஸ்பெக்டர் பொறித்தட்டும் நேரத்தில் சடக்கென்று கீழே உட்கார்ந்தபடி பாய்ந்து கட்டாரித்தேவனது இரண்டு கால்களையும் பிடித்து இழுத்துவிட்டார். அதற்குள் கட்டாரித்தேவனால் வீசப்பட்ட கத்தியின் பலமான வீச்சு, இன்ஸ்பெக்டருக்குப் பக்கத்தில் இருந்த கந்தனது கழுத்தில் பட்டு ஊடுருவிப் பாய்ந்து அவனது தலையை வெட்டி வேறாக்கிக் கீழே தள்ளிவிட்டது. அவனது

வாயிலிருந்து வீரிட்ட ஓசையொன்று கேட்டது. தடாரென்ற ஓசையுடன் கந்தனது தலையும் முண்டமும் கீழே விழுந்தன. இரத்தம் குபீரென்று வெளிப்பட்டு ஆற்று வெள்ளம்போலப் பெருகி அந்த அறை முழுதும் பரவிப்போயிற்று. கந்தனது கழுத்து வெட்டப்பட்ட சமயத்தில், இன்ஸ்பெக்டரால், காலை இழுத்து விடப்பட்ட கட்டாரித்தேவன் வேரற்ற மரம்போலப் பின் புறமாகத் தரையில் விழ, அவனது முதுகுப் பக்கம் தடாரென தரையில் மொத்துண்டது. உடனே அவ்விடத்தில் பெருத்த குழப்பமும் அமர்க்களமுமாயிற்று. கட்டாரித்தேவனோடு வந்திருந்த முரட்டு மனிதர்களும் வந்து போலீசார்மீது பாய, இரண்டு கட்டுகளிலும் நிறைந்திருந்த சுமார் முப்பது போலீஸ் ஜெவான்கள் வந்து வளைத்துக்கொண்டு திருடர்களைப் பிடிக்க முயன்றனர். திருடர்கள் ஐவரே இருந்தமையாலும், போலீசார் ஏராளமாக இருந்தமையாலும், அந்தக் கூட்டத்தில் திருடர்கள் நன்றாக அகப்பட்டுக் கொண்டனர். தாங்கள் இனி தப்பமுடியாதென்ற திகில் உண்டாகி விட்டதாகையால், திருடர்கள் ஐவரும் வீராவேசங் கொண்டு தங்களது உயிரைத் திரணமாக மதித்துத் தங்களது கையிலிருந்த கத்திகளையும், கட்டாரிகளையும் உபயோகித்துப் போலீசாரை அடித்தும், உதைத்தும், குத்தியும், வெட்டியும் ஆர்ப்பரிக்க, போலீசாரும் அவர்களுக்குக் கொஞ்சமும் பின்னிடாமல் குத்தியும், அடித்தும், வெட்டியும் சண்டை செய்ய, ஐந்து நிமிஷ நேரத்தில், அந்த யுத்தம் ஒருவாறாக முடிவடைந்தது. கட்டாரித்தேவனோடு வந்த நான்கு திருடர்களும் நன்றாக வெட்டப்பட்டுக் கீழே விழுந்து உயிரை இழந்தனர். கட்டாரித்தேவன் மாத்திரம், இன்ஸ்பெக்டரால் தள்ளிவிடப்பட்ட பிறகு போலீசார் ஏராளமாக வந்திருப்பதைக் கண்டு மெதுவாக எப்படியோ தந்திரம் செய்து நழுவித் தப்பித்துக்கொண்டு மூன்றாவது கட்டை நோக்கி ஓடத் தொடங்கினான். அவ்வாறு வீட்டிற்குள் பெருத்த யுத்தம் நடந்தபோது, சடார் படாரென்று கத்திகளும், கட்டாரிகளும் ஒன்றோடொன்று மோதியதனால் உண்டான பெருத்த ஓசையைக் கேட்டு, வெளியிலிருந்த திருடர்கள் பயந்து ஓட்டம்பிடித்து விட்டார்கள். கட்டாரித்தேவன் தனது முழுவல்லமையையும் வெளிப்படுத்தி வாயுவேக மனோவேகமாக ஓட ஆரம்பித்து மூன்றாவது கட்டிற்குள் புகுந்து கொல்லைப் பக்கத்தின் வழியாகப் பறக்கிறான். முக்கியமான மனிதன் அவ்

வாறு தப்பி ஓடுகிறான் என்பதைக் கண்ட போலீசார் வீராவேசங் கொண்டு மெய்ம்மறந்து அவனைத் தொடர்ந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்கிறார்கள். முன்னால் ஓடிய கட்டாரித்தேவன் கொல்லைப் பக்கத்துக் கதவைத் தாண்டி வெளியில் போனவுடனே திரும்பி அந்தக் கதவை மூடி வெளிபுறத்தில் தாளிட்டுக்கொண்டு அப்பால் ஓடிப்போய் விட்டான். அவனைத் தொடர்ந்து ஓடி வந்த போலீசார் கதவு வெளிப் பக்கத்தில் தாளிடப்பட்டுப் போனதைக் கண்டு அதோடு தளர்வடையாமல் உடனே திரும்பி வந்து, சிறிது தூரத்தில் காணப்பட்ட முற்றத்தின் வழியாக ஓட்டின்மே லேறிப் போய்ப் பின்புறத்தில் குதித்து, அவனைத் துரத்தத் தொடங்கினர். அப்போது ஆகாயம் சுத்தமாக இருந்த தாகையால் நட்சத்திரங்களின் வெளிச்சம் பிரகாசமாக இருந்தது. ஓட்டின்மேலேறி அப்பால் குதித்த போலீசார் நால்வரும் நான்கு பக்கங்களிலும் திரும்பிப் பார்த்து, கட்டாரித்தேவன் சுமார் ஐம்பது கஜதூரத்துக் கப்பால் ஓடிக்கொண்டிருந்ததைக் கண்டு, கட்டிலடங்கா மனோதிடமும் வேகமுமடைந்து, அதே திக்கில் ஓடத்தொடங்கினர். கட்டாரித்தேவனும், போலீசாரும் ஓடிய இடம் வயல்களும் வரப்புகளும் நிறைந்த இடமாதலால், ஒரே பாய்ச்சலில் மேடுகளையும், பள்ளங்களையும், வேலிகளையும், மடுக்களையும், சப்பாத்துப் புதர்களையும் தாண்டுவோரும், விடாதே பிடி, பிடி, என்போரும், துப்பாக்கியால் சுடுவோருமாகப் போலீசார் அவனைத் தொடர்ந்து துரத்த, அவன் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் எண்ணத்தோடு, அவர்களை விட அதிக விசையாகவும், அரக்கனைப்போல, அபூர்வமான திறமையை வெளிப்படுத்தியும், வைக்கோல் போர்களையும், வாய்க்கால்களையும் ஒரே தாண்டாகத் தாண்டி அப்பால் இப்பால் திரும்பி வளைந்து வளைந்து மனக்குதிரைபோலப் பறக்கிறான். அவர்கள் அவ்வாறு மிக மிக ஆச்சரியகரமாக ஓடுவதும் துரத்துவதுமாக அரை நாழிகை நேரம் கடத்த, முன்னால் ஓடிய கட்டாரித்தேவன் தாறுமாறாகச் சென்று நெருக்கடியான ஓரிடத்தில் அகப்பட்டுக் கொண்டான். அவனுக்கெதிரில் அந்த ஊரில் வரும் பெருத்த ஆறு குறுக்கிட்டது. அந்த ஆற்றில் சேறும் வண்டலும் நிறைந்து பதினைந்தடி ஆழமுள்ள தண்ணீர்ப் பிரவாகம் போய்க்கொண்டிருந்தது. ஒரு மனிதன் நீந்துவதில் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும், அந்த மழை வெள்ளத்தில் விழுந்தால், தப்பிப் பிழைப்பது துர்லபமான காரியம். அப்படிப்பட்ட

மகா பயங்கரமான வண்டல் வெள்ளம் நிறைந்த ஆறு எதிரில் குறுக் கிட்டது. இன்னொரு பக்கத்தில் நிரம்பவும் ஆழமான ஒரு படிக் குளம் இருந்தது. மூன்றாவது பக்கத்தில், ஆகாயத்தை அளாவியதும் அடர்த்தியாக நிறைந்து பரவியிருந்ததுமான சப்பாத்துப் புதர் இருந் தது. நான்காவது பக்கத்தில் போலீசார் துரத்திக்கொண்டு ஓடி வந்தனர். அப்படிப்பட்ட மகா இக்கட்டான இடத்தில் போய் அகப் பட்டுக்கொண்ட கட்டாரித்தேவன் சுற்றுமுற்றும் பார்க்கிறான்; தான் எந்த வழியாகப் போனால் பிடிபடாமல் தப்பியோடி விடலாமென்று யோசிக்கிறான். அவ்வாறு அவன் தயங்கி நின்ற ஒவ்வொரு நொடி யும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றியது. அவன் அவ்வாறு மலைத்து நின்றதைக் கண்ட போலீசார் முன்னிலும் அதிக விசையாகப் பாய்ந்து ஓடி வருகிறார்கள். அவனுக்கும் அவர்களுக்கும் நடுவிலிருந்த தூரம் குறைந்துகொண்டே வருகிறது. இன்னம் இரண்டு நிமிஷ நேரத்தில் அவர்கள் வந்து அவனைப் பிடித்துக் கொள்வார்கள். “அடேய் கட்டா ரித்தேவா! நீ திமிறாமல் எங்களிடம் வந்துவிடு. இல்லாவிட்டால், துப் பாக்கியின் ஒரே வெடியால், உன்னை எமபட்டணத்துக்கு அனுப்பி விடு வோம்” என்று ஜெவான்கள் சொல்லிக்கொண்டு துப்பாக்கிகளை அவ னுக்கெதிரில் பிடித்தபடி நெருங்கி வந்துவிட்டார்கள். தான் அவர்க ளோடு கைகலந்து பலாத்காரமாகத் தப்பி ஓட முயன்றால், அவர்கள் தன்னைச் சுட்டுவிடுவார்கள் என்ற அச்சம் உண்டானதாகையால், தான் அவ்வாறு மரிப்பதைவிட கடைசி முயற்சியாக ஆற்று வெள்ளத்தில் விழுந்து தப்ப முயல்வதே நல்லதென்று முடிவுகட்டிக் கொண்ட கட் டாரித்தேவன் பொறித்தட்டும் நேரத்தில் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஆற்று வெள்ளத்தில் தலைகுப்புற வீழ்ந்து முழுகிப் போய்விட்டான். அடுத்த நிமிஷத்தில் ஜெவான்கள் ஆற்றுத் தண்ணீரின் ஓரமாக வந்து நின்றனர். அவனைப் பிடிக்க வேண்டுமென்ற ஆவலினால் அவர்களது தேகம் அளவு கடந்து பதறியதானாலும், மகா பிரமாதமாகக் காணப் பட்ட பயங்கரமான ஆற்று வெள்ளத்தைக் கண்டு தயங்கி நின்றவர்க ளாய், அவன் எந்தப் பக்கமாக நீந்திப் போகிறானென்று கவனித்துக் கொண்டிருந்தனர்.

அந்த அபரிமிதமான பெரு வெள்ளத்தில் மரங்களும் புதர்களும் கட்டைகளும் குத்துக் குத்தாக மிதந்து போய்க்கொண்டிருந்தன வாகையால், அவர்களது பார்வைக்கு எதுவும் தெளிவாகத் தெரிய

வில்லை. தண்ணீருக்குள் முழுகிய கட்டாரித்தேவன் அதன் பிறகு வெளியில் கிளம்பியதாகவும் தெரியவில்லை. ஆகவே, நிரம்பவும் ஆவலோடு அவர்கள் கால் நாழிகை நேரம், அவ்விடத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்து, அவன் வெள்ளத்தில் முழுகி இறந்து போய் விட்டானென்று நிச்சயித்துக் கொண்டவர்களாய், அவ்விடத்தைவிட்டுத் திரும்பி அன்னத்தம்மாளினது மாளிகையை நோக்கி விரைவாகச் செல்லலாயினர்.

அதற்குள் அன்னத்தம்மாளிருந்த தெரு அல்லோல கல்லோலப் பட்டது. போலீஸ் இன்ஸ்பெக்டரும் மிகுதி இருந்த ஜெவான்களும் தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டுப்போன அந்தத் தெருவின் ஜனங்களும், அன்னத்தம்மாள் முதலியோரும், அந்த மாளிகையில் நிறைந்து நின்றனர். கந்தன் கொள்ளைக்காரர்களைச் சேர்த்துக்கொண்டு அந்த மாளிகைக்குள் நுழைந்து கொள்ளையடிக்க முயன்றானென்ற விஷயமும், அதை எப்படியோ முன்னாகவே தெரிந்து கொண்ட போலீசார் ஒளிந்திருந்து அவர்களைச் சின்னாபின்னமாக்கி ஓட்டி விட்டார்களென்ற விஷயமும் ஒரு நிமிஷத்தில் அந்த ஊர் முழுதும் பரவின. கட்டாரித் தேவன் இன்ஸ்பெக்டரை வெட்ட முயன்று முடிவில் கந்தனையே வெட்டிக் கொன்று விட்டானென்ற சங்கதியும் தெரிந்தது. அடிபட்டு விழுந்து கிடந்த நான்கு திருடர்களும் இறந்துபோய் விட்டார்களென்பது சந்தேகமறத் தெரிந்தது. அன்னத்தம்மாளும் ஜனங்களும் வந்து வந்து மாண்டு கிடந்தவர்களது ஐந்து பிணங்களையும் கண்டு திகிலும் நடுக்கமும் அருவருப்பும் கொண்டு பிரமித்து ஸ்தம்பித்து நின்றனர்.

அந்த சமயத்தில், கட்டாரித் தேவனைத் துரத்திக்கொண்டுபோன நான்கு ஜெவான்களும் திரும்பி அவ்விடத்திற்கு வந்து தங்களது வரலாற்றை இன்ஸ்பெக்டரிடத்தில் எடுத்துக் கூறினர். அதைக் கேட்ட ஜனங்களெல்லோரும் அளவற்ற வியப்பும் களிப்புமடைந்து கட்டாரித் தேவனும் ஆற்று வெள்ளத்தில் இறந்துபோயிருப்பானென்றே தீர்மானித்தனர். உடனே இன்ஸ்பெக்டர் அந்த ஐந்து பிணங்களையும் ஒரு வண்டியில் வைத்துத் தஞ்சையிலிருந்த வைத்தியசாலைக்கு அனுப்பி விட்டுப் பொழுது விடிகிறவரையில் அவ்விடத்திலேயே பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்ற தீர்மானத்தோடு அங்கேயே எச்சரிப்பாக இருந்தார்.

22-வது அதிகாரம்

எங்குமில்லா மானக்கேடு

சனிக்கிழமை இரவு சுமார் இரண்டு மணி சமயமிருக்கலாம். அதாவது அம்மன் பேட்டை அன்னத்தம்மாளினது மாளிகையில் கொள்ளை நடந்த காலத்திற்கு இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, மாரியம்மன் கோவில் என்ற ஊரின் செட்டித் தெருவில் மாசிலாமணிப் பிள்ளை வசித்துக்கொண்டிருந்த பங்களாவின் வாசற் கதவை யாரோ தடதடவென்று இடித்த ஓசையைக் கேட்டு பங்களாவிற்குள் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த வேலைக்காரர்களும் மாசிலாமணிப் பிள்ளையும் அவரது அழகிய மனைவியும் திடுக்கிட்டு விழித்துக் கொண்டார்கள். தனியாக அமைந்த ஒரு சயனக்கிரகத்திலிருந்த மாசிலாமணிப் பிள்ளை விவரிக்க இயலாத திகில்கொண்டவராய்த் தமது மனைவியை நோக்கி "என்ன ஆச்சரியம்! இந்த அகால வேளையில் வேறே யார் வந்து இப்படிக் கதவை இடிக்கப்போகிறார்கள்! சரி; கடைசியில், போலீசார்தான் என்னைக் கைதி செய்து பிடித்துக் கொண்டு போவதற்காக வந்திருக்கிறார்களென்று நினைக்கிறேன். நான் எங்கேயாவது ஒளிந்து கொள்ளுகிறேன். அவர்கள் வந்து விசாரித்தால், நான் ஊரில் இல்லை என்று சொல்லிவிடு. கதவைத்திறப்பதற்குள் வேலைக்காரர்களை எச்சரித்து விடு" என்று கூறிய வண்ணம் ஒரு மூலையில் போடப்பட்டிருந்த அழுக்குத் துணி மூட்டையைப் பிரித்து அதற்குள் சுருட்டி முடக்கிக்கொண்டு ஒடுங்கி உட்கார்ந்து மூடிக் கொள்ள எத்தனித்தார். அவரது அச்சத்தையும் கலக்கத்தையும் கண்டு நடுநடுங்கி நின்ற அவரது யௌவன மனைவி "ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்? போலீசார் வந்தால் வரட்டுமே. நமக்கென்ன பயம். நம்மிடத்தில்தான் அந்த தஸ்தாவேஜி இருக்கிறதே. அதைக் காட்டினால், அவர்கள் அதைப் பார்த்துவிட்டுப் பேசாமல் போய் விடுகிறார்கள். அதைப்பற்றிக் கவலைப்படுவதேன்?" என்று மறுமொழி கூறி அவரைத் தேற்ற முயன்றாள்.

அவளது சொற்களைக் கேட்ட மாசிலாமணிப் பிள்ளை "நம்மிடத்தில் அந்த தஸ்தாவேஜி இருந்தாலென்ன. போலீசார் அதைப் பார்த்து எனக்கு எவ்வித அநுகூலமும் செய்ய முடியாது. என்னைப் பிடிக்கும்படி வாரண்டு பிறந்திருந்தால், போலீசாருடைய கடமை என்னைப்

பிடித்து நியாயாதிபதியின் முன் கொண்டுபோய் விடுவதேயன்றி, மற்ற விசாரணைகளையெல்லாம் நடத்தமாட்டார்கள். விசாரணை காலத்தில் தான் நான் அந்த தஸ்தாவேஜியை நியாயாதிபதியினிடம் காட்டி மன்னிப்புப் பெறவேண்டும். அதுவரையில் நான் சிறைச்சாலையில் இருந்து தான் தீரவேண்டும். நாளைக்குப் பொழுதுவிடிந்தவுடன் முக்கியமான ஒரு விஷயத்தைப்பற்றி நான் உன்னிடம் பிரஸ்தாபிக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தேன். அதற்குக்கூட வசதி இல்லாமல், இந்தப் போலீசார் என்னை இப்போதே பிடித்துக் கொண்டுபோய் விடுவார்கள்போ லிருக்கிறதே! என்ன செய்கிறது," என்று மிகுந்த கவலையோடும் கலக்கத்தோடும் கூறினர்.

அப்போது வாசல் கதவு முன்னிலும் அதிக வலுவாக இடிக்கப் படவே, தாங்கள் அதிகநேரம் பேசிக்கொண்டிருக்க அது சரியான சந்தர்ப்பமல்ல வென்று நினைத்த மாசிலாமணிப் பிள்ளை தமது மனைவியைப் பார்த்து "சரி; கதவை இடிப்பது யாரென்று நீ கேள். அவர்கள் போலீஸ்காரராக இருந்தால், நீ கதவைத் திறக்காமல் உள்ளே இருந்தபடியே நான் ஊரிலில்லை யென்று சொல்லி அவர்களை அனுப்பிவிடு. அவர்கள் போகாமல் கதவைத் திறக்கும்படி பிடிவாதம் செய்தால், உடனே நான் ஒளிந்து கொள்ளுகிறேன். பிறகு நீ கதவைத் திறக்கலாம்" என்றார்.

அதற்கிணங்கிய அவரது மனைவி பக்கத்திலிருந்த கதவண்டை போய் நின்று "யாரது கதவை இடிக்கிறது?" என்று ஒன்றையு மறியாதவள் போல வினயமாகக் கேட்க, வெளியிலிருந்து உடனே ஒரு மனிதர் "நான்தான். கதவைத் திறவுங்கள். என்னுடைய குரலிலிருந்து நான் இன்னனென்பது தெரியவில்லையா?" என்றார்.

அந்தக் குரல் மாசிலாமணிப் பிள்ளையின் மனைவிக்கு அதற்குமுன் பழகிய குரலாகத் தோன்றியதானாலும், அந்த மனிதன் இன்னன்தானென்ற நிச்சயம் ஏற்படவில்லை. ஆகையால், தான் என்ன செய்வதென்பதை அறியாமல், அவள் சிறிதுநேரம் தயங்க, அவளுக்கருகில் நின்றுகொண்டிருந்த மாசிலாமணிப் பிள்ளை அந்தக் குரல் யாருடையதென்பதை யூகித்தறிந்துக் கொண்டு "ஓகோ! சரி சரி; வந்திருப்பது போலீசாரல்ல; நமக்கு வேண்டிய மனிதர்தான். நீ இனி இங்கே இருக்க வேண்டாம். போய்ப் படுத்துக்கொள். நான் கதவைத் திறந்து, வந்திருக்கும் மனிதரிடம் பேசி அவரை அனுப்பிவிட்டு

வருகிறேன்,'' என்று கூறித் தமது மனைவியைப் படுக்கை யறைக்குள் அனுப்பிவிட்டு, அந்த அறையின் கதவை மூடி வெளிப்புறத்தில் தாளிட்டுக் கொண்டு அப்பால் போய்விட்டார்.

படுக்கையறைக்குள் போன அவரது மனைவி தனது கணவன் சொற்படி உடனே படுத்துக் கொள்ளவில்லை. அந்த அகால வேளையில் வந்த மனிதர் யாராக இருக்கலாமென்ற சந்தேகமும், ஒருவித மான பயமும் கலக்கமும் உண்டாகி அவளை சஞ்சலப்படுத்த வாரம்பித்தன. ஆகையால், அவள் கதவண்டை வந்து நின்று, அதன் இடுக்கால் வெளியில் பார்த்துக்கொண்டு நின்றாள். தனது புருஷன் முன் பக்கத்துக் கதவைத் திறந்தது தெரிந்தது. அவரும், வெளியிலிருந்த மனிதரும் தணிவான குரலில் ஏதோ ரகசியம் பேசிக்கொண்டதையும் அவள் உணர்ந்தாள். ஆனால், அவர்கள் பேசிய விஷயம் இன்னதென்பது அவளுக்கு விளங்கவில்லை. தனது புருஷன் வெளியிலிருந்த மனிதனை உள்ளே விடுத்துக் கதவை மறுபடியும் முன்போல மூடித் தாளிட்டுக் கொண்டு அவனை அழைத்துக்கொண்டு மேன்மாடத்துக்குப் போய் விட்டதும் அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. அதன் பிறகு அவர்கள் என்ன செய்தார்களென்பதை அவள் அறியக்கூடவில்லை.

வெளியிலிருந்து வந்த மனிதன் யாராக இருப்பானென்றும், அந்த அகால வேளையில் அவன் வந்து அவ்வளவு அவசரமாகக் கதவை இடிக்கவேண்டிய காரணமென்ன வென்றும் அவள் பலவாறு எண்ணமிட்டவளாய், முன்னிலும் அதிகரித்த திகிலும் நடுக்கமு மடைந்தவளாய்ச் சிறிது நேரம் திகைத்து சிந்தனையே வடிவமாக நின்று பிறகு தனது சயனத்தை யடைந்து அதன்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டாள். அரை நாழிகை நேரம் சென்றது. அவளது புருஷர் படுக்கையறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்து சேர்ந்தார். அவரது முகம் விகாரமடைந்து மனதிலுள்ள சங்கடத்தை வெளிப்படுத்தியது.

அவரைக் கண்டவுடனே அந்தப் பெண் "என்ன விசேஷம்? யாரது?'' என்று மிகுந்த ஆவலோடு வினவினாள்.

அதைக் கேட்ட அவளது புருஷர் "விசேஷம் ஒன்றுமில்லை. வெண்ணாற்றங்கரையில் நாமிருந்த வீட்டுக்கு அண்ணாசாமி நாயக்கனென்று ஒருவன் அடிக்கடி வருவானல்லவா? இங்கே பக்கத்திலுள்ள பூண்டி என்ற ஊரில் இன்றைய தினம் ஐந்தாம் திருவிழாவாம். ரிஷப

வாகன வேடிக்கை பார்த்துவிட்டு ஊருக்குப் போவதற்காகத் திரும்பி வந்தானாம். இந்த ஊரில் நாம் இருப்பது இவனுக்குத் தெரியும்; ஆகையால், நம்மைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று அவன் இங்கே வந்தான். ராத்திரி இங்கேயே படுத்திருந்து நாளைக்குக் காலையில் போகும்படி நான் சொல்லிப் படுக்கவைத்து விட்டு வந்தேன்; வேறே ஒன்றும் விசேஷமில்லை" யென்றான்.

அந்த வரலாறு அவளுக்கு உண்மையாகத் தோன்றவில்லை. புதிதாக வந்த மனிதன் கதவை இடித்த மாதிரியும், அவனது குரலின் மாதிரியும், தனது புருஷரது முகம் மாறுபட்டிருந்ததும், தான் கேட்டவுடனே தனது புருஷர் சிறிது யோசித்து மறுமொழி கூறிய விதமும் ஒன்றுகூடி அவளது மனதில் பெருத்த சந்தேகத்தை உண்டாக்கி விட்டன. அதுவுமன்றி அண்ணாசாமி நாயக்கனென்று பெயர் கொண்ட எந்த மனிதனும் அதற்குமுன் தங்களது வீட்டிற்கே வந்ததாகவும் தோன்றவில்லை. ஆகையால், அவள் மறுபடியும் பேசத்தொடங்கி "யாரது! அண்ணாசாமி நாயக்கனா! அண்ணாசாமி நாயக்கனென்ற பெயருள்ள மனிதனே நம்முடைய வீட்டுக்கு வந்ததில்லையே! அவனுடைய குரல் நமக்குத் தெரிந்த வேறே யாருடைய குரல்போலல்லவா இருக்கிறது? உண்மையை நீங்கள் என்னிடம் சொல்லக் கூடாதென்று மறைக்கிறீர்கள்" என்று நயமாக மறுமொழி கூறினாள்.

அதைக் கேட்ட அந்த மனிதர் சடக்கென்று முன் கோபமும் ஆத்திரமுமடைந்து "எப்போதும் உன்னுடைய மூட புத்தி உன்னை விட்டுப் போகிறதில்லையே! அண்ணாசாமி நாயக்கன் இன்னானென்பதை நீ இதற்குள் மறந்துவிட்டால், அதற்கு நான் என்ன செய்வேன்! தெரிந்த குரலாக இருக்கிறதென்று நீயே சொல்லுகிறாயே. அப்படி இருக்க, இந்த மனிதன் இன்னானென்று நீ ஏன் யூகித்துக் கொள்ளக் கூடாது? நான் சொன்னால், அதை நம்பவேண்டும். நம்பாவிட்டால், சும்மா விழுந்து கிடக்கவேண்டும். ஒரு சங்கதியை நான் உன்னிடம் மறைக்க எண்ணினால், நீ திரும்பத் திரும்பக் கேட்டால் மாத்திரம் நான் உடனே உண்மையைச் சொல்லி விடுவேனா? உனக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத விஷயத்தில் நீ ஏன் தலையிட்டு என்னை உபத்திரவிக்கிறாய். நான் சொல்வதை உண்மையென்று நம்பிப் பேசாமல் படுத்துக் கொள்" என்று கூறியவண்ணம் சயனத்தில் படுத்துக் கொண்டார்.

அதற்குமேல் ஒன்றும் சொல்ல மாட்டாதவளாய், அந்தப் பெண்ணும் சயனித்துக் கொண்டாள். ஆனால் அவளது மனம் திருப்தியும் அமைதியும் அடையவில்லை. தனது புருஷர் சொன்ன வரலாறு பொய்யானதென்றும், ஏதோ ரகசியம் இருக்கிறதென்றும் ஓர் எண்ணம் எழுந்து ஓயாமல் அவளது மனதை வதைத்து சஞ்சலப்படுத்திக் கொண்டிருந்தது. அன்றைய இரவு முழுதும் தூக்கமென்பதே பிடியாதவளாய், அவள் விசனித்து மனநொந்து "ஐயோ தெய்வமே! என் தலைவிதி இப்படியா இருக்கவேண்டும். நான் ஜென்மமெடுத்த முதல் ஓயாத் துன்பமும், ஒழியா வேதனையுமாகவே இருக்கின்றனவே. எல்லாம் கெட்ட காரியம்! எல்லாம் ரகசியம்! இப்படி அவஸ்தைப்பட்டுக் கொண்டு உயிர் வாழ்வதைவிட இறந்துபோவது சுகமாக இருக்குமென்பது நிச்சயம்! இன்னம் எவ்வளவு காலத்துக்கு நான் இப்படிக் கிடந்து உழல்கிறது! ஐயோ! என்னால் சகிக்க முடியவில்லையே! சே! இதற்கு நான் ஏதாவது வழி தேடிக்கொண்டுதான் தீரவேண்டும்" என்று தனக்குள் எண்ணமிட்டு வருந்தினவளாய்க் கிடந்து அந்த இரவைப் போக்கிக்கொண் டிருந்தாள். மகா பயங்கரமான சில சம்பவங்களின் நினைவு அடிக்கடி அவளது மனதில் உண்டாகி உண்டாகி அவளது உடம்பை அடிக்கடி தூக்கிப்போட்டது. மறுபடியும் அவள் தனது புருஷனது கொடுமையைப்பற்றி நினைத்தாள்; "அடாடா! ஆரம்பத்தில் இந்தப் புருஷரிடத்தில் நான் எவ்வளவு பிரியம் வைத்து இவரால் எப்படிப்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கெல்லாம் ஆளானேன். அதையெல்லாம் மறந்து, இவர் என்னை செக்கிழுக்கும் மாட்டைவிடக் கேவலமாக வல்லவா நடத்தி வருகிறார். ஒரு நிமிஷம் கழிவது ஒரு யுகமாகவும் நரகவேதனையாகவு மல்லவா இருக்கிறது. சேச்சே! இந்த மனிதரிடம் இருந்து வாழ்வதைவிட எங்கேயாவது கிணற்றில் குளத்தில் விழுந்து செத்தாவது, இந்தக் கொடுமைகளை நிவர்த்தி செய்துகொள்வது உத்தமமானது. இவரிடம் இருப்பதைவிட, வேறே யாரிடமாவது போய் அடிமை வேலை செய்தோ, வைப்பாட்டியாக இருந்தோ காலந் தள்ளினால், அதுகூட இதைவிட அதிக சிலாக்கியமாக இருக்குமே" என்று அவள் தனக்குள் பிரலாபித்தழுதபடி இருக்க, அந்த இரவும் கழிந்தது.

புருஷனும் பெண்ஜாதியும் எழுந்து வழக்கம்போலத் தங்களது காலைக்கடன்களை முடித்துக் கொண்டனர். மாசிலாமணிப் பிள்ளை

மேன் மாடத்திற்குப் போய் அங்கே தங்கியிருந்த அண்ணாசாமி நாயக்கருக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்து கொடுத்துவிட்டு ஒரு நாழிகைநேரம் கழித்துக் கீழே இறங்கிவந்து தமது மனைவியிருந்த இடத்தை அடைந்தார்.

அவரைக் கண்ட மனைவி மிகவும் நயமாகவும் கொஞ்சலாகவும் பேசத் தொடங்கி "அண்ணாசாமி நாயக்கர் ஊருக்குப் போய்விட்டாரா?" என்றாள்.

மாசிலாமணிப் பிள்ளை "போகவில்லை. தமாஷாக இங்கே இரண்டு நாளைக்கு இருந்துவிட்டுப் போகவேண்டு மென்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஆகையால் அவர் இன்றைக்கும் நாளைக்கும் இங்கே தான் இருக்கப் போகிறார்," என்றார்.

அதைக் கேட்ட மனைவியினது சந்தேகம் முன்னிலும் அதிக பலமடைந்தது. முன்பின் பழக்கமில்லாத யாரோ அன்னியருக்கு அவர் அவ்வளவு உபசாரம் செய்யமாட்டா ராதலால் அவர் அவருக்கு நிரம்பவும் அந்தரங்கமான சிநேகிதரென்றும் அவர் வெளியில் வாராமல் மறைந்திருப்பதி லிருந்து, அவர் ஏதோ பெருத்த குற்றம் செய்துவிட்டு வந்திருக்க வேண்டுமென்றும் அவள் நிச்சயப்படுத்திக் கொண்டாள். தனது புருஷர் அந்த மனிதனைச் சேர்த்துக்கொண்டு தன் விஷயத்தில் ஏதாவது துன்பமிழைக்கப் போகிறாரோ வென்ற அச்சமே மும்முரமாக எழுந்து வதைத்தது. ஆகையால், அதன் உண்மையான விவரம் இன்னதென்பதைத் தெரிந்து கொள்ளாம லிருக்க அவளால் இயலவில்லை. ஆகையால், அவள் மறுபடியும் தனது புருஷரைப் பார்த்து "நான் எவ்வளவு தூரம் கெஞ்சிக் கேட்டும், நீங்கள் என்னிடம் உண்மையைச் சொல்லமாட்டே னென்கிறீர்களே. அந்த மனிதர் உண்மையில் யார்? அவர் எதற்காக இங்கே வந்து இப்படி ஒளிந்து கொண்டிருக்கிறார்? அந்த விவரங்களைக் கேட்டாலன்றி என் மனம் சாந்தப்படாது," என்று இரக்கமாகக் கூறினாள்.

அவளது வார்த்தைகளைக் கேட்ட மாசிலாமணிப் பிள்ளை கோபங்கொண்ட நாகம்போலச் சீறி அவளைக் கடிந்து "மறுபடியும் துவக்கிவிட்டாயா உன்னுடைய பாட்டை? நான்தான் எல்லா விவரத்தையும் ராத்திரியே சொன்னேனே. அதை நம்பாமல் அடிக்கடி அறித்துக் கொண்டிருக்கிறாயே! இதற்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? நீ ஏன் இதைப்பற்றி இவ்வளவு கவலைப்படுகிறாய்? யாரோ வந்தால், இரண்

டொரு நாள் இருந்துவிட்டுப் போகிறான். குற்றமுள்ள மனசு குறு குறுக்கு மென்கிறபடி, எதைக் கண்டாலும் உனக்குப் பயமாக இருக் கிறதோ? உன்னுடைய ஆசை நாயகனை வெந்நீர் அண்டாவுக்குள் நீ வைத்துக் கொன்றாயே; அதை யாராவது கண்டுகொண்டார்களோ வென்று பயப்படுகிறாயோ? நீ ஏன் இப்படிக் குத்திக்குத்திக் கிளறு கிறாய்? இப்படி நீ ஓயாமல் தொணதொணவென்று அநாவசியமான கேள்விகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருப்பது எனக்கு நிரம்பவும் தொந்தரவாக இருக்கிறது. இனிமேல் இதை நான் கொஞ்சமும் சகித்திருக்க முடியாது. நான் எவ்வளவு சொல்லியும் கேளாமல் நீ மறுபடி மறுபடி என்னை வதைக்கிறாயே; என்னோடு ஏதாவது சண்டை போட வேண்டுமென்கிற பிரியமா! அப்படியானால் அதையாகிலும் திறந்து சொல்லிவிடு. நானும் அதற்கு ஆயத்தமாகிறேன். யார் ஜெயிக்கிறார்களென்று ஒரு கை பார்த்து விடுவோம்,'' என்று கூறி, அவளை பயமுறுத்தினார். அவரது சொற்களிலிருந்து, அவர் தன்னை நிரம்பவும் கொடுமையாக நடத்த எண்ணுகிறாரென்று கண்ட பெண் கலக்கமும் அச்சமுமடைந்து "சரி; நான் எதையும் கேட்கவுமில்லை. நமக்குள் கலகமும் வேண்டாம்,'' என்று பணிவாக மறுமொழி கூறி விட்டுத் தனது முகத்தைக் கவித்துக்கொண்டு ஒரு பக்கமாகச் சாய்ந்து கொண்டாள்.

அதன் பிறகு சிறிது நேரம் வரையில் இருவரும் வாய் திறந்து பேசாமல் மௌனமாகவே இருந்தனர். மாசிலாமணிப் பிள்ளையின் கோபக் குறிகள் விலக, சந்தோஷக் குறிகள் தோன்றின. அவர் அடிக்கடி தனது மனைவியின் முகத்தை உருக்கமாகப் பார்த்துப் புன் னகை செய்து, "ஏன் உன் முகம் வாட்டமாக இருக்கிறது? பலகா ரம் ஏதாவது சாப்பிட்டாயா? அல்லது, இந்த அற்ப சங்கதியை நினைத்து சாப்பாட்டைக்கூட விலக்கிவிட்டு சும்மா உட்கார்ந்துகொண் டிருக்கிறாயா?'' என்று வழக்கத்திற்கு மாறான வாஞ்சையோடு பேசினார்.

அவரது மாறுபட்ட நடத்தையைக் கண்ட அந்தப் பெண், அவர் ஏதோ சதியாலோசனை செய்து, அது சம்பந்தமாகத் தன்னிடம் ஏதோ பேசப்போகிறாரென்றும், அதன் பொருட்டே அவர் தன்னிடத்தில் அவ்வளவு பட்சமாகப் பேசுகிறாரென்றும் நிச்சயப்படுத்திக் கொண் டாள். அப்போது அவளுக்கு இன்னொரு விஷயம் நினைவுக்கு

வந்தது. முதல் நாளிரவு இரண்டு மணி சமயத்தில் அண்ணா சாமி நாயக்கர் கதவைத் தட்டியபோது, தம்மைப் பிடித்துக்கொண்டு போகப் போலீசார் வந்திருக்கிறார்களோ வென்று தனது புருஷன் பயந்து தாம் ஒரு முக்கியமான சங்கதியை வெளியிட நினைத்திருக்க, போலீசார் தம்மைக் கொண்டுபோக வந்திருக்கிறார்களே என்று அவர் சொன்னது அவளுக்கு நினைவுண்டாயிற்று. ஆகவே, அவர் என்ன விஷயத்தைப்பற்றித் தன்னிடம் பிரஸ்தாபிக்கப் போகிறாரென்ற ஆவல் அவளது மனதை வதைத்ததானாலும், அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், பணிவாகப் பேசத் தொடங்கி "சாப்பிடாமல் என்ன! அதெல்லாம் வழக்கம்போல ஆகிவிட்டது" என்றாள்.

மாசிலாமணிப் பிள்ளை :— அப்படியானால் சரிதான். வரவர எனக்கு இந்த ஊரில் பொழுதே போகமாட்டேனென்கிறது. நாம் மைசூர் ராஜ்ஜியத்தில் இருந்தவரையில் நிரம்பவும் குதூகலமாக இருந்து வந்தோம். அதை விட்டு இங்கே வந்த பிறகு, பலவிதமான விசனங்களும் கவலைகளும் உண்டாகி நம்முடைய வாழ்க்கையைக் கசப்பாக்கிக் கொண்டே இருக்கின்றன. நேற்று முதல் எனக்கு ஒரு யோசனை தோன்றிக் கொண்டே இருக்கிறது. இந்த ஊரிலிருந்து நாம் ஏன் இப்படி அவஸ்தைப்பட வேண்டும். மறுபடியும் மைசூர் ராஜ்ஜியத்துக்குப் போய்விடலாமா வென்று எண்ணுகிறேன்.

மனைவி :— ஆம். வாஸ்தவந்தான். முகமறியாத இந்த ஊரில் வந்திருந்து கொண்டு அல்லும் பகலும் போலீசாருக்கு பயந்து, இப்படி ஒளிந்து கொண்டிருப்பது சகிக்கமுடியாத வேதனையாகத்தான் இருக்கிறது.

மாசிலாமணி :— ஆம்; ஆம். அது எனக்கும் நன்றாகத்தான் தெரிகிறது. ஏதோ நான் செய்த குற்றத்துக்காக நான் துன்பம் அநுபவிக்க வேண்டியது நியாயந்தான். என்னால் நீயும் இப்படிப் பட்ட உபத்திரவங்களை அநுபவிப்பதைப் பார்க்க, எனக்கே சகிக்க வில்லை. நீயோ மகா அற்புதமான அழகு வாய்ந்தவள்; நல்ல யௌவன பருவத்துப் பெண். நீ நிரம்பவும் சந்தோஷமாக இருக்க வேண்டிய காலத்தில் இப்படி ஆறாத் துயரத்துக்கு ஆளாகி வருந்துவது நிரம்பவும் பரிதாபகரமான விஷயமாகத்தா னிருக்கிறது. அப்படியானால், நாம் மறுபடியும் மைசூருக்குப் போய்விடுவோமா?

மனைவி :— அதுதான் உத்தமமாகத் தோன்றுகிறது.

மாசிலாமணி :— (சிறிது யோசனை செய்கிறவர்போல நடித்து) ஆனால் அதற்கு ஓர் இடைஞ்சல் இருக்கிறது. நம்மிடத்தில் இப்போது பணம் கொஞ்சங்கூடக் கிடையாது. நாம் மைசூருக்குப்போயிருப்பதென்றால், குறைந்தது இரண்டாயிரம் ரூபாயாவது கையிலிருக்க வேண்டுமே.

மனைவி :— ஆம். பணமில்லாமல், என்ன செய்கிறது? பணம் கையிலில்லாமலா நீங்கள் மைசூருக்குப் போகத் தீர்மானித்தீர்கள்? நீங்கள் மனசுவைத்தால் ஒரு நிமிஷத்தில் எங்கிருந்தாவது பணம் சம்பாதித்துக்கொண்டு வந்துவிட மாட்டீர்களா?

மாசிலாமணி :— (நிரம்பவும் வாஞ்சையான குரலில் பேசத் தொடங்கி) நான் மனசு வைப்பதில் என்ன உபயோகம்? நீ மாத்திரம் கொஞ்சம் மனசு வைத்து, எனக்கு அந்த விஷயத்தில் உதவியாக இருப்பாயானால், அந்தத் தொகை ஒரு நிமிஷத்தில் கிடைக்கும். எங்கே? உதவி செய்வதாகச் சொல். நீ நிரம்பவும் நல்ல குணமுடையவளென்பது எனக்குத் தெரியும். சமயத்தில் நீ ஒரு நாளும் விட்டுக் கொடுக்க மாட்டாய். இந்த விஷயத்தில் நீ ஒத்தாசை செய்தால், நான் உன்னை எந்த விஷயத்துக்கும் கோபித்துக்கொள்வதே இல்லையென்று பிரமாணம் செய்துகொடுக்கிறேன். நீயாக முதலில் ஆரம்பித்துச் சண்டைக்கு இழுத்தாலன்றி மற்றப்படி நான் உன் ஜோலிக்கே வர மாட்டேனென்பதை நீ உறுதியாக நம்பலாம்.

மனைவி :— (விரக்தியாக நெடுமூச்செறிந்து) நீங்கள் இந்த மாதிரி இதற்கு முன் எத்தனையோ தடவை உறுதி சொல்லியிருக்கிறீர்கள். இருந்தாலும் பரவாயில்லை. உங்கள் மனசிலுள்ள யோசனையைத்தான் திறந்து சொல்லுங்களேன். நான் உடனே என் எண்ணத்தைச் சொல்லிவிடுகிறேன்.

மாசிலாமணி :— (ஆழ்ந்த கருத்தோடு அவளது முகத்தை உற்று நோக்கி) நான் சொல்வதற்கு அதிகமாக ஒன்றுமில்லை. நீ மனசு வைத்தால் வெகு சீக்கிரத்தில் அந்த இரண்டாயிரம் ரூபாயைச் சம்பாதித்து விடலாம்.

மனைவி :— (ஒருவித ஆவலும், ஆத்திரமுமடைந்து), நான் மனசுவைத்தால் என்றால், அதன் அர்த்தம் நன்றாக விளங்கவில்லையே. நான் எங்கே போய், யாரிடத்தில் கேட்கிறது?

மாசிலாமணி :—நான் சொல்வதற்குமுன் உனக்கு மூக்கின்மேல் கோபம் வருகிறதே! ஏன் நீ இப்படிக் கோபித்துக் கொள்ளவேண் டும்? நீ செய்யத் தகாத விஷயமெதையும் நான் பிரஸ்தாபிக்கவில் லையே. நீ ஏற்கனவே செய்து தேறியிருக்கும் ஒரு காரியத்தைத்தான் இன்னொரு தடவை செய்யும்படி நான் சொல்லப் போகிறேன். ஆகை யால், நீ வீண் நடலம் செய்யக் காரணமில்லையே. முதல் தடவை உன் ஆசையைத் தீர்த்துக் கொள்ள நீ ஒரு மனிதனிடம் சிநேகம் செய்தாய். இரண்டாம் தடவை, எனக்கு ஒரு முக்கியமான தஸ்தாவேஜை சம்பா தித்துக் கொடுப்பதற்காக, இன்னொரு மனிதரிடம் சிநேகம் செய்தாய். இப்போது நமக்கு வேண்டிய பணத்துக்காக நீ இன்னொரு மூன்றுவது மனிதரிடம் சிநேகம் செய்தால், அதனுல் குற்றமென்ன?

மனைவி :— (மட்டுக் கடங்காக் கோபங்கொண்டு பதறி) இது தானு பணம் சம்பாதிக்கும் வழி? இப்படிச் சொல்ல, உங்களுக்குக் கொஞ்சமும் வெட்கமாக இல்லையா? ஒரு புருஷர் தம்முடைய பெண் ஜாதியைப் பார்த்துச் சொல்லக்கூடிய வார்த்தையா இது?

மாசிலாமணி :— பெண்ஜாதி நிஷ்களங்கமான பதிவிரதையாக இருந்தால், இந்த வார்த்தை சொல்லத் தகாததுதான். நீ அப்படி இல்லையே. உன்னிடம் நான் ஏன் அந்த வார்த்தையை உபயோகிக்கக் கூடாது?

மனைவி :— (சிறிது நேரம் விசனித்துக் கலங்கித் தத்தளித்து) அப்படியே இருக்கட்டும். இந்த இரண்டாயிரம் ரூபாய் எவ்வளவு காலத்துக்கு வரப்போகிறது? இது செலவாகிப்போன பிறகு மறுபடி உங்களுக்கு வேண்டிய பணத்துக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? பெண்ஜாதியின் கற்பை மறுபடியும் விற்றுவிற்று சாப்பிட உத்தேசமா?

மாசிலாமணி :— (கடுகடுத்த முகத்தோடு நிரம்பவும் ஆத்திர மாகப் பேசத் தொடங்கி) நீ இப்போது ஊரார் மெச்சும்படி பேசுவ திருக்கட்டும். முதலில் நீ கற்பை இழந்தாயே. அது நீ உனக்காகச் செய்த காரியமா? எனக்காகச் செய்த காரியமா? அப்போது நீ உன்னு டைய ஆநந்தத்தைக் கருதி அந்தக் காரியம் செய்தாய்; இப்போது, நாமிருவரும் அநுபவித்து வரும் கொடுமைகளை விலக்கிக் கொண்டு வேறூர் ஊருக்குப்போய் இருவரும் சந்தோஷமாக இருப்பதைக் கருதி நீ இப்போது அப்படிச் செய்ய ஏன் பின்வாங்குகிறாய்? நாம் பலபல பேசிக் காலதாமதம் செய்வதில் உபயோகமென்ன? நான் ஒரு

முடிவாகச் சொல்லி விடுகிறேன். இந்தத் தடவைமாத்திரம் நீ நம்மிருவருடைய பொது நன்மையைக் கருதி இந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு வந்துவிடு. இதுதான் கடைசித் தடவை. இதன் பிறகு நீ இப்படிப்பட்ட துறையில் இறங்க, நான் இடங்கொடுக்கவே மாட்டேன். இனி நமக்குள் சண்டையாவது மனஸ்தாபமாவது உண்டாகவே உண்டாகாது. இந்த விஷயத்தில் நீ என்னுடைய சொல்படி நடக்க மறுத்தால், பிறகு உனக்கும் எனக்கும் மல்ல யுத்தந்தான். பூமிக்குள் புதைக்கப்பட் டிருக்கும் உன்னுடைய ஆசை நாயகரான ஜெமீந்தாரை வெளியில் கிளப்பி, உனக்கு நல்ல புத்தி கற்பிக்க நேரும். ஜாக்கிரதை—என்று நிரம்பவும் அழுத்தமாகவும் கொடுமையாகவும் பேசினர்.

அந்த வார்த்தையைக் கேட்ட அவரது மனைவி முற்றிலும் குழம்பிக் கலகலத்துப்போய், அந்த மகா சங்கடமான நிலைமையில் தான் என்ன செய்வதென்பதை உணராதவளாய்த் தத்தளித்துக் குழம்பித் தனது கைகளால் முகத்தைப் புதைத்துக்கொண்டு சோர்ந்து குனிந்து கொண்டாள். அவளது தோற்றம் மகா பரிதாபகரமாகவும் கல்லும் கரைந் துருகத்தக்கதாகவு மிருந்தது. கண்களிலிருந்து கண்ணீர் வழிந்ததை அவள் அடிக்கடி துடைத்துக் கொண்டாள். அவள் மனநொந்து தவிக்கிறா ளென்பதைக் கண்டும் மாசிலாமணிப் பிள்ளை அவளது விஷயத்தில் சிறிதும் இரக்கமென்பதே கொள்ளாமலும், அவளைத் தேற்றும் பொருட்டு ஓர் உபசார வார்த்தைகூடச் சொல்லாமலும் குரூரமான முகத் தோற்றத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தார்.

அவ்வாறு மௌனத்தில் ஐந்து நிமிஷ நேரம் கழிந்தது. மாசிலாமணிப் பிள்ளை அவளைப் பார்த்து "அப்புறம் உன்னுடைய முடிவைச் சொல்லிவிடு; எனக்கு நேரமாகிறது. நான் ஒருவருக்குச் செய்தி சொல்லி யனுப்பவேண்டும்." என்று கண்டித்து அதட்டிப் பேசினர்.

அதைக் கேட்ட மனைவி நடுநடுங்கி "நீங்கள் கேட்பதற்கு நான் என்ன பதில் சொல்லப்போகிறேன்? எனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லாத காரியத்தைச் செய்யும்படி நீங்கள் இப்படிக் கட்டாயப்படுத்தினுல், நான் என்ன செய்யக்கூடும்? இந்த இரண்டாயிரம் ரூபாயை நான் போய் சம்பாதித்துக்கொண்டு வரவேண்டு மென்கிறீர்களே! அப்படிப்பட்ட ஏற்பாட்டை நீங்கள் யாரிடத்திலாவது செய்து கொண்டிருக்கிறீர்களா?" என்றாள்.

அதைக் கேட்ட மாசிலாமணிப் பிள்ளை ஒருவாறு மகிழ்ச்சியும் அன்பும் கொண்டு, " சரி ; அப்படிக் கேள். அதுதான் புத்திசாலித் தனம். உன்னிடத்தில் உண்மையை மறைத்தால், காரியம் ஆகப் போகிறதில்லை. நேற்று சாயுங்காலம், என்னை யாரோ கூப்பிடுவதாகத் தோட்டக்காரன் வந்து சொன்னானல்லவா ! நான் போய்விட்டு வந்து எனக்குத் தெரிந்த ஒரு மனிதர் சும்மா வந்து கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனதாக நான் சொன்னே னல்லவா. அப் போதுதான் இந்த ஏற்பாடு முடிவடைந்தது. தஞ்சாவூர் ராணி வாய்க் கால் சந்தில் ஹேமாபாயி என்று ஒரு பெரிய மனிஷி இருக்கிறாள். அவள்தான் நேற்று வந்து என்னோடு பேசிக்கொண் டிருந்துவிட்டு போனவள். யாரோ ஒரு பிரபு இருக்கிறாராம். செல்வத்தில் அவர் குபேரனும் ; பௌவனத்திலும் அழகிலும் மன்மதனும் ; கொடையில் கர்ன மகாராஜனும். அவர் உன்னை எப்போதோ பார்த்திருக்கிறாராம். அதுமுதல் அவர் பைத்தியங் கொண்டவர்போ லிருக்கிறாராம் ; அவர் உன்னோடு கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்து உன்னை அனுப்பு வதற்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னாராம். அதை அவள் என்னிடம் ஒருவிதமாக வெளியிட்டாள். நாளைக்கு ராத்திரி உன்னை அழைத்துக்கொண்டு போக அவள் பெட்டி வண்டி கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள். உன்னுடைய குணம் எனக்குத் தெரியுமாகையால், நீ அதை மறுக்கமாட்டாயென்று நம்பி நான் அவளுக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன். அவ்வளவுதான் சங் கதி என்றார்.

அந்த வரலாற்றைக் கேட்ட அவரது மனைவி கால்நாழிகை நேரம் வரையில் சிந்தனையிலாழ்ந்திருந்தாள். நிரம்பவும் துஷ்ட மனிதரான இப்படிப்பட்ட புருஷரோடு தான் நீடித்து வாழ முடியாதென்ற எண்ண மும், அவன் தன்னை மேன்மேலும் விபசாரத்தில் விடுத்து தன்னை அடியோடு கெடுத்து விடுவானென்ற நினைவும் கொண்ட அந்த மடந்தை ஒருவித முடிவு செய்துகொண்டாள். தன்னிடத்தில் அவ் வளவு அபாரமான மோகங் கொண்டிருக்கும் பிரபு சகலமான அம்சங் களிலும் மேன்மை வாய்ந்தவராக இருந்து, அவர் தன்னை நிரந்தரமாக வைத்துக் கொள்ள எண்ணினால், அவரிடமே தான் இருந்துவிட வேண்டுமென்று அவள் ஒருவாறு தீர்மானித்துக் கொண்டாள். தனது புருஷனுக்கு அவரைக் கொண்டு ஏதேனும் பெருத்த பணத் தொகை

கொடுக்கச் செய்து, தங்களைத் தொடாமல் ஒரு கடிதம் எழுதி வாங்கிக் கொள்ளலாமென்றும் அவள் எண்ணிக் கொண்டவளாய் மேலும் சிறிது நேரம் சிந்தனை செய்கிறவள்போலப் பாசாங்கு செய்து அதன் பிறகு மெதுவாகத் தனது முகத்தை நிமிர்த்தி "சரி; உங்களுடைய பிரியம் எப்படியோ, அப்படியே நடத்துங்கள். நான் எந்த விஷயத்திலும் உங்களுக்கு அடங்கி நடக்கக் கடமைப்பட்டவளாகையால், நீங்கள் செய்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றி வைக்கிறேன்" என்றாள்.

அவளது பணிவையும் சம்மதியையும் கண்டு அளவற்ற மகிழ்ச்சியும், குதூகலமுமடைந்த மாசிலாமணிப் பிள்ளை அவளை வாய் கொண்டமட்டும் புகழ்ந்து ஸ்தோத்திரம் செய்து கரைகடந்த அன்பைக் காட்டிய உருக்கமான சொற்களை உபயோகித்து அவளை சந்தோஷப்படுத்திக் கொண்டிருந்தார். அதன் பிறகு அன்றையதினம் வேறு எவ்விதமான விசேஷ சம்பவமும், நடக்கவில்லை. அன்றைய தினம் கழிந்தது. மாசிலாமணிப் பிள்ளை அடிக்கடி மேன் மாடத்துக்குப் போய் அண்ணாசாமி நாயக்கனிடம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கீழே வந்து, தமது மனைவியினிடத்தில் அன்னியோன்னியமாகப் பேசி, அவள் மனது கோணும்படியான சொற்களையே உபயோகியாமல் ஒழுங்காக இருந்து வந்தார். அதுபோலவே திங்கட்கிழமை பகற்பொழுதும் கழிந்தது. மாலை நேரம் வந்தது.

மாசிலாமணிப் பிள்ளையின் மனையாட்டியான அந்த யௌவனப் பொற்கொடி எழுந்து வாசனை கலந்த தண்ணீரில் நீராடி, உடம்பைத் துடைத்துக் கொண்டு சமயலறைக்குப் போய் மிதமாகச் சிறிதளவு போஜனம் செய்த பிறகு தனது சயனக்கிரகத்துக்கு வந்து தன்னை முதல்தரமாக அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினாள். தான் அதுவரையில் தன்னை அலங்கரித்துக் கொண்டதையெல்லாம் விட அன்றைய தினம் மகா புதுமையாகவும் அற்புதமாகவும் அவள் தன்னை அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினாள். அதற்குமுன் ஒருநாள் அவள் இளவரசரை மயக்கி, அவரிடம் ஒரு தஸ்தாவேஜியில் கையெழுத்துப் பெறுவதற்காகப் பார்சிஜாதி ஸ்திரீயாக அலங்கரித்துக் கொண்டதை விட நூறு மடங்கு விசேஷமாக இப்போது சிங்காரித்துக் கொண்டு எல்லாவற்றிலும் சிறந்த ஆடையாபரணங்களைப் பொறுக்கியணிந்துகொண்டு அன்னப்பேடோ, தோகை மயிலோ, பஞ்சவர்ணக் கிள்ளையோ, கந்தர்வ மடமானோ, ரதிதேவியோ வென்று நினைத்து

எப்படிப்பட்டவரும் மயங்கிக் கலங்கி மோகங் கொள்ளுமாறு மன மோகன ரூபிணியாக மாறினாள். இயற்கையிலேயே தந்தத்தகடுபோலப் பளபளவென மின்னிய மாசுமறுவற்ற அவளது சந்திரவதனம், நிரம்ப வும் விஷமம் பொருந்திய மைதீட்டப்பட்ட கண்களினழகினாலும், ஜவ் வாதுத் திலகமணிந்த நெற்றியின் வசீகரத் தன்மையினாலும், கருத் தடர்ந்த புருவ விற்களின் சொகுசினாலும், தாம்பூல மணிந்து சிவந்து கனிந்த அதரங்களின் ஜ்வலிப்பினாலும், முத்துக்களைப்போன்ற பல் வரிசைகளின் கவர்ச்சியினாலும் பதினாயிரமடங்கு சிறந்து, காண்போர் மனதைக் காந்தம்போலக் கவர்ந்து கொள்ளைகொண்டு அடிமையாக்கத் தக்கதாக இருந்தது. வெல்வெட்டும், பட்டும், ஜரிகையுமே மயமாக நிறைந்த ஆடைகளை அவள் வெகு சொகுசாக அணிந்து கொண்ட தன்றி, தனது கணவனுக்குத் தெரியாமல் மறைத்து வைத்திருந்த தனது வைர ஆபரணங்களை யெல்லாம் எடுத்து அணிந்து கொண்டு சர்வாபரண பூஷிதையாய்த் தேஜோ மயமாகவும் இன்பவடிமாகவும் ஆநந்த நிறைவாகவும் காணப்பட்டு, அப்போதே பிரமதேவனால் புதுமையாக சிருஷ்டிக்கப்பட்டு வானுலகத்திலிருந்து தெய்வவிமானத் தின் மூலமாக வந்து கீழே இறங்கிய அணங்குபோல அதிமநோக்கிய இன்பவல்லியாக விளங்கி நின்றாள்.

மணி ஏழரை ஆயிற்று. வாசலில் ஒரு குதிரை வண்டி வந்து நின் றது. மேன்மாடத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த மாசிலாமணிப் பிள்ளை உடனே கீழ் இறங்கி வந்து தமது மனைவியிருந்த இடத்தை யடைந்து, அவளைச் சந்தோஷப்படுத்தி அனுப்பி வைக்கவேண்டுமென் னும் கருத்தோடு, அவளது அதி அற்புதமான அழகையும் அலங் காரத்தையும் பற்றி பிரமாதமாகப் புகழ்ந்து பேசினார்; பக்கத்தி லிருந்த ஒரு துப்பட்டியை எடுத்து அவளது முகத்தைத் தவிர மற்ற பாகங்களை யெல்லாம், மகாராஷ்டிர ஸ்திரீயைப் போல மூடிவிட்டு அவளை அழைத்துக்கொண்டு வெளிப்பட்டார். வெளிப்பட்டவர் சந் தடி செய்யாமல் வாசலுக்கு வந்து குதிரை வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு ஓட்டச் செய்ய, வண்டி அவ்விடத்தைவிட்டு மேற்கு நோக்கி ஓட ஆரம்பித்தது. கால்நாழிகை நேரத்தில் அந்த வண்டி இடையி லிருந்த தெருக்களை யெல்லாம் கடந்து ஊர்க்கோடியை அடைந்தது அவ்விடத்தில் சமுத்திரமென்று பெயர்கொண்ட பெருத்த ஏரி ஆரம்ப மாயிற்று. நான்கு மயில் நீளமுள்ள அந்த ஏரியின் கரையோரமாகச்

சென்ற பாட்டையே தஞ்சைக்குப் போகும் வழியாகையால் அவ்விடத்தில் ஒரு பெட்டி வண்டி வந்து ஆயத்தமாக நின்றுகொண் டிருந்தது. அதற்குள் ஹேமாபாயி தன்னை துப்பட்டியால் போர்த்திக் கொண்டு மறைவாக உட்கார்ந்திருந்தாள். அவ்விடத்தில் குதிரை வண்டி வந்து நின்றவுடனே அவள் கீழே இறங்கிக் குதிரை வண்டியின் பக்கமாக வந்து நின்று புன்னகை செய்த முகத்தோடு மாசிலாமணிப் பிள்ளையினது மனைவியைப் பார்த்து மரியாதையாக அவளை உபசரித்துக் கை கொடுத்துக் கீழே இறக்கிவிட்டாள்; அவள் அப்படிச் செய்தது, அந்தப் பெண்ணின் அழகு எப்படி இருக்கிறதென்பதை ஆராய்ச்சி செய்வதற்காகவேயன்றி வேறல்ல. அவளது உட்கருத்தை எளிதில் யூகித்துணர்ந்து கொண்ட அந்த யௌவனப் பெண்பாவை கீழே இறங்குகையில் தற்செயலாகத் துப்பட்டி விலகியதுபோலப் பாசாங்கு செய்து, கண்கொள்ளா வனப்பு வழிந்த தனது அற்புத வடிவத்தை அவளுக்குத் திறந்து காட்டி மறுபடி துப்பட்டியை சரிப்படுத்திக் கொண்டாள்.

அவளது தெய்வீகமான அழகையும் நிகரற்ற சிங்காரத்தையும் கண்ட ஹேமாபாயி மட்டற்ற மகிழ்ச்சியும் பிரமிப்பு மடைந்தவளாய்த் தனது முகத்தை முன்னிலும் அதிகமாக மலர்த்தி வாத்சல்யத்தையும் மரியாதையையும் முன்னிலும் பன்மடங்கு அதிகமாக வெளிப்படுத்தினாள். தன்னைக் கண்டு அவள் திருப்தியடைந்து விட்டாளென்பதை உணர்ந்து கொண்ட அந்த வடிவழகி தான் அன்றைய தினம் சந்திக்கப்போகும் பிரபுவினிடம் வெற்றிபெறுவது திண்ணமென எண்ணிக் கொண்டாள்.

உடனே ஹேமாபாயி அவளை அன்பாக நடத்தி அழைத்துக் கொண்டுபோய்ப் பெட்டி வண்டியில் ஏற்றி உட்காரவைத்தாள். வண்டிக்குள் வைத்திருந்ததும் ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பவுன்களடங்கியதுமான பையை ஹேமாபாயி எடுத்துத் தனக்குப் பக்கத்திலிருந்த மாசிலாமணிப் பிள்ளையினிடம் கொடுக்க, அவர் அதை வாங்கிக் கொண்டு குதிரை வண்டிக்குப்போய் ஏறி உட்கார்ந்து கொண்டு ஊருக்குத் திரும்பிப் போய்விட்டார்.

உடனே பெட்டி வண்டியும் தஞ்சையை நோக்கி விரைவாக ஓட வாரம்பித்தது. அந்த யௌவன மடந்தையின் மனதில், அந்தத் தூதுக்கிழவியின் விஷயத்தில் இயற்கையிலேயே ஒருவித அருவருப்புத் தோன்றிய தானலும், அதையெல்லாம் அடக்கி, சந்தோஷத்தை

உண்டாக்கிக் கொண்டு, அவளிடம் சம்பாஷிக்கத் தொடங்குவதற்குக் கொஞ்சநேரம் பிடித்தது. அவர்களிருவரும் முதலில் ஏதோ லோகாபி ராமமாகப் பொது விஷயங்களைப் பற்றிப் பேசினர். அதிலிருந்து ஹேமாபாயி அந்தப் பெண்ணை அடைய விரும்பும் மனிதரது அழகைப் பற்றியும், செல்வப் பெருக்கைப் பற்றியும், தயாள குணத்தைப் பற்றியும் ஆகாயமட்டும் புகழ்ந்து பேசத் தொடங்கினுள். ஆனுல், அவள் அவரது வயது இவ்வளவென்பதைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை. அவருடைய பெயர் என்னவென்பதை அந்த மடந்தை கேட்டதற்கு ஹேமாபாயி, தான் அதை மாத்திரம் அப்போது வெளியிடத் தனக்கு உத்தரவில்லையென்று கூறியதன்றி அந்த மனிதர் கலியாணமாகாதவராதலால், அவளுக்கு விருப்பமானுல் அவரிடத்தில் எப்போதுமே சிநேகமாக இருக்கலாமென்று தெரிவித்தாள். அந்தக் குறிப்பை அந்த வடிவழகி கவனமாகக் கேட்டு மனதில் பதியவைத்துக் கொண்டாள். அவளது மனதும் அவ்வித ஏற்பாட்டை ஒருவாறு நாடி இருந்ததாகையால், அவள் அந்தச் செய்தியைக் கேட்டுத் தனக்குள் ஒருவித மகிழ்ச்சியடைந்தாள்.

இரவு சரியாக ஒன்பது மணிக்குப் பெட்டிவண்டி தஞ்சையை யடைந்து ராணிவாய்க்கால் சந்திலிருந்த ஹேமாபாயியினது மாளிகையின் வாசலில் வந்து நின்றது. உடனே பெண்டீரிருவரும் கீழே இறங்கி உள்ளே சென்ருர்கள். ஹேமாபாயி அந்த அழகிய நங்கையை அழைத்துக்கொண்டு மூன்ருவது உப்பரிகைக்குப் போய்ச்சேர்ந்து, அவளது துப்பட்டியை எடுக்கச் செய்ததன்றி, சிறிதளவு சீர்குலைந்திருந்த அவளது ஆடைகளையும் ஆபரணங்களையும் ஒழுங்குப் படுத்தி விட்ட பிறகு, மாதுரியமான போஜனம், சிற்றுண்டி முதலியவை ஆயத்தமாக இருந்த ஓர் அறைக்கு அவளை அழைத்துக் கொண்டு போய், அவளுக்குத் தேவையானவற்றை உட்கொள்ளும்படி உபசரித்தாள். அந்த அணங்கு தனக்குத் தேவையான சிற்சில சிற்றுண்டிகளை சொற்பமாக உண்டபிறகு வாசனைத் தாம்பூலம் மணிந்துகொண்டு சயன மாளிகைக்குள் நுழைய ஆயத்தமானுள். அவளது அப்போதைய வனப்பும் தோற்றமும் தேவர்களும் பார்த்தாநந்தித்துப் பரவசமடையத்தக்கனவாக இருந்தமையால், அவளைக்கண்டு மருங்காபுரி ஜெமீந்தார் முற்றிலும் திருப்தியும் ஆநந்தமுமடைவாரென்று உறுதியாக நினைத்துக்கொண்ட ஹேமாபாயி, பக்கத்திலிருந்த ஒரு சயனக்

கிரகத்தை அவளுக்குச் சுட்டிக்காட்டி "அம்மா! அதோ தெரிகிறதே. அது மன்மதனுடைய ரதிகேளிவிலாசம்போல அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் புஷ்ப சயனத்தின் மேல், அந்தப் பிரபு உட்கார்ந்து கொண்டு உன்னுடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறார். நீ நேராக அதற்குள் போ. நான் இப்போது உள்ளே போய்விட்டு வந்தேன். நீ வந்து விட்டதாகவும், உன்னை உடனே அவரிடம் அனுப்புவதாகவும் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். நீ எப்படி இருக்கிறாயென்ற விவரத்தை நான் சொல்லக் கேட்டு, அவர் நிரம்பவும் சந்தோஷ மடைந்ததன்றி, எப்போதும், உன்னைத் தனது அந்தரங்கக் காதலியாக வைத்துக்கொள்கிறேனென்று சொல்லிவிட்டார். உனக்கு ஜெயகாலந்தான். நீ சந்தோஷமாகப் போகலாம்; எதற்கும் யோசிக்காதே. அவருடைய மனசு சந்தோஷ மடையும்படி நடந்து கொள்" என்று புத்திமதி சொல்லி அனுப்பி வைத்தாள்.

அந்த யௌவனப் பெண்பாவை மகிழ்ச்சியினாலும் புன்னகையினாலும் மனோக்கியமாக மலர்ந்த வதனத்தினளாய், ஹேமாபாயி காண்பித்த சயன மாளிகையின் வெளித்திரையைக் கொஞ்சமாக நகர்த்திக்கொண்டு உள்ளே நுழைந்து எதிரிலிருந்த புஷ்ப சயனத்தை நோக்கினாள். நோக்கவே, அவள் திடுக்கிட்டுப் பேய் கொண்டவள்போல் மாறி "ஆகா! என்ன இது! யார் அங்கே இருப்பது!" என்று வாய்விட்டு ஆர்ப்பரித்தாள்.

புஷ்ப சயனத்தின்மேல் உட்கார்ந்திருந்தபடி அந்த வடிவழகியின் வருகையைக் கட்டிலடங்கா ஆவலோடு எதிர்பார்த்திருந்த மருங்காபுரி ஜெமீந்தாரும் அவளைக்கண்டு திடுக்கிட்டுத் திகைப்பும் பிரமிப்புமடைந்து "என்ன ஆச்சரியம்! என் தம்பியின் மகள் லீலாவதியல்லவா வந்திருக்கிறாள்! ஆ! லீலாவதி! என்ன உன்னுடைய தலைவிதி! நீ இப்படிப்பட்ட தொழிலிலா இறங்கிவிட்டாய்?" என்று வியப்போடு வினவினார்.

18953

காளிங்கராயன் -
- கோட்டை ரகசியம்

இப்போதே வெளியாகும் புதிய நாவல். ஸ்ரீமான் வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் அவர்கள் பி. ஏ. யால் எழுதப்பட்டது. இது வரையில் வெளிவராத புதுமைகளும் ரகசியங்களும் நிறைந்த மகா ஆச்சரியகரமான நாவல். படங்களும் உண்டு.

முதல் பாகம் விலை	ரூ.	2	0	0
இரண்டாம் பாகம் விலை	,,	2	0	0
தபாற் செலவு		0	8	0

கே. விஜயம் கம்பெனி,

இராயப்பேட்டை, சென்னை.

ஒன்பதாவது வருஷம் பிறந்துவிட்டது!

20,000 சந்தாதாரர்களுடையது !!

ஆனந்தபோதினி

40-பக்கம் விஷயங்கள் அடங்கிய ஒரு மாதாந்த
தமிழ் சஞ்சிகை

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை முறையே அடைய விரும்புவோர் அனைவருக்கும் "ஆனந்தபோதினி" தக்க ஆசிரியனாகவும் நண்பனாகவும் உதவுகின்றது.

ஆனந்தபோதினி அறிவைப் பெருக்கி ஆனந்தத்தை ஊட்டுகின்றது; அதனால் இதற்கு ஏற்பட்ட பெயர் தகுமென்று ஆயிரக் கணக்கானவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இகலோகத்திலே சுகவாழ்வை விரும்புவோருக்கும் பரலோகத்திலே மேன்மையடைய விரும்புவோருக்கும் "ஆனந்தபோதினி" இன்றியமையாத் துணையாயிருக்கிறது.

ஆனந்தபோதினி ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும், சிறுவர், சிறுமி, பாலருக்கும், பண்டிதருக்கும், பாமரருக்கும், யாவருக்கும், பயன்படும்வண்ணம் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு வருகின்றது.

ஆனந்தபோதினி குறைந்த சந்தாவுள்ளது. சிறந்த விஷயங்கள் நிறைந்தது. ஒருமுறை படித்தோர் அதனைக் கைவிடார் என்பது உண்மை.

ஆனந்தபோதினி சுய நன்மைக்காக நடத்தப்படவில்லை. அதற்கு ஏற்பட்டுள்ள சந்தாவே அதற்குச் சான்று. வருஷசந்தா ரூபா ஒன்றே! இதைவிடக் குறைந்த சந்தாவுள்ள பத்திரிகை நம் நாட்டில் கிடையாது.

காப்பி இலவசமாய் அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி சந்தா விவரம் :—இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு, வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட ரூ. 1-0-0.

பினாங்கு, சிங்கப்பூர், பஸ்ரா, மெசபடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு வருடம் 1-க்கு தபால் கூலி உள்பட ரூபா 1-4-0. தனி சஞ்சிகை விலை அணா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், சென்னை.

Printed at the Sadhu Press, Royapettah and Published by V. K. DURAISWAMI AYYANGAR, B.A. for K. Vijayam & Co., Royapettah, P. O., Madras.